# ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்.

கார்த்திகை


2013




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்**
**தறம்பொருள் கண்டார்க ணில்.**

**பொருள் :** பிறனுடைய பொருளாயுள்ள மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை உலகத்தில் அறம் பொருள் என்பவை களின் இயல்புகளை அறிந்தவர்களிடத்தில் இல்லை.

(141)

**அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை**
**நின்றாரிற் பேதையா ரில்.**

**பொருள் :** பாவத்தின் வழிநின்றவர்கள் எல்லாருள்ளும் அயலவன் மனையாளை விரும்பி அவன் தலைவாயிலில் நிற்பவனைப் போல அறியாமையுள்ளவர் இல்லை.

(142)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

### குறள் வெண்செந்துறை

வலமிட மோடும் வாசியை யறிவோர்
அலகிலா வாண்மை யடைவர் சத்தியம் 26

குலநல முணராக் கூசாச் சிந்தையர்
மலரடி பெறுவர் மாநில மீதே 27

உலகத்தோ டொட்ட வொழுக வறியார்
பலகற் றாலும் பயன்பெற மாட்டார் 28

அட்டாங்க யோக மறிந்து மாவதென்
இட்டனீச னெனவறி யார்க்கே 29

ஆவது மழிவது மறியாப் பொருளை
நோவதால் வருபயன் உண்டோ நுவலுமின் 30

# ஞானச்சுடர்



PUBLIC LIBRARY
JAFFNA
03 DEC 2013
மாநகரசபை யாழ்ப்பா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்

வெளியீடு- 2 சுடர்- 190



2013 பொருளடக்கம் கார்த்திகை


| | | |
|---|---|---|
| முருக வழிபாடு | கு. சோமசுந்தரம் | 01 -02 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 03 -05 |
| நம்முடைய சமயம் | சுவாமி ஹரிதாஸ்கிரி | 06 -08 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 09 -12 |
| பிரதோஷ விரதமும்... | செல்வி செ. ஜடா | 13 -15 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 16 -19 |
| சிவலோக வாழ்வு | சிவ. சண்முகவடிவேல் | 20 -22 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 23 -24 |
| வாழ்வும் வழிபாடும் | இ. ஜெயபாலன் | 25 -26 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 27 -28 |
| இறைபணி செய்பவர்... | பு. கதிரித்தம்பி | 29 -30 |
| நித்திய அன்னப்பணி | - | 31 -32 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 33 -36 |
| சிவம்... தவம்... சுகம்... | திருமதி நா. பரமேஸ்வரி | 37 -38 |
| காளமேகம் பாடல்கள் | - | 39 -41 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 42 -44 |
| மானிட வாழ்க்கை | செல்வி பா. வேலுப்பிள்ளை | 45 -46 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 47 -49 |
| சிறுவர் கதைகள் | - | 50 -52 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 53 -54 |
| திருமுறைக் கதை | ஐ.கோ. சந்திரசேகரம் | 55 -56 |
| வாசகர் போட்டி | - | 57 -58 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 59 -64 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சி. பத்மநாதன் J.P அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும்.

ஞானச்சுடர் மலர் வெளியீட்டில் உள்ள சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமைகளிலும் எதுவித தடையுமின்றி தடம்பதித்து வருகின்றது என்பது யாராலும் இயலாத காரியமாகும் என்று சபையில் இருந்த முருகன் அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

இவ்வளவு காலமும் வெளிவந்த மலர்கள் யாவும் பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளன. அதேபோல் இனிவரும் ஞானச்சுடர் மலரும் பல்வேறு அம்சங்களைக் கொண்டு திகழவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

190ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை சைவப்புலவர் க. நித்திய தசீதரன் (ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரை மதிப்பீட்டுரை செய்வதென்பது யாராலும் இயலாத காரியமாகும். ஆனாலும் என்னால் முடிந்தவரை சுருக்கமாகக் கூறிக் கொள்கின்றேன் என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில் அட்டையின் முன்பகுதியில் ஆச்சிரமத்தின் தோற்றம் அழகாக அமைக்கப்பட்டிருப்பதோடு, அட்டையின் உட்பகுதியில் குறள், நற்சிந்தனைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மனித வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறுவனவாக அமைந்துள்ளன.

அடுத்து அவர் தனது உரையில் இச்சுடரில் அமைக்கப்பட்ட விடயங்கள் மூலம் தெரியாத பல அறிவுக் கருத்துக்களை அறிந்துகொள்ளலாம் எனக் கூறினார்.

தொடர்ந்து அன்றைய நிகழ்வின்போது "ஞானச்சுடர் மலரானது மக்களது அறிவுக்குப் பயன்படும் ஒரு நூல்" என்ற தலைப்பினை மையமாக வைத்துக் கொண்டு, சபையில் இருந்த திருமதி சசிலேகா ஜெயராஜன், இளைப்பாறிய அதிபர் ஆ. வடிவேல், ஆசிரியர் இ. சண்முகசுந்தரம், க. சுப்பிரமணியம் ஆகியவர்கள் ஞானச்சுடர் மலர்பற்றிய தமது கருத்தை சபையில் உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தினார்கள்.

# சுடர் தரும் தகவல்

நம் வாழ்க்கையைப் பற்றி சிறிது சிந்தித்தால் அதில் துன்பங்களைத் தவிர வேறில்லை. வாழ்க்கை எப்போதும் வசதியுடன் இருக்கமுடியாது. அதில் உயர்வு தாழ்வு இருக்கும். உயர்வின் மகிழ்வில் திளைத்திருக்கும் ஒருவன் வீழ்ச்சியின் மூலம் ஏற்படும் துன்பத்தையும் தாங்கவேண்டும். நன்மைகள் கிடைத்து சந்தோஷம் அடையும்போதும் துன்பங்கள் நம்மைச் சூழ்ந்து அழுத்தும்போதும் இறைவன் நம்முடன் இருக்கின்றார் என்ற எண்ணம் எமக்கு இருக்க வேண்டும். இன்பமோ, துன்பமோ இவற்றை அனுபவிப்பவர்கள் இறைவனது அருளுக்குட் பட்டவர்களே. அவற்றில் கடவுளின் அருளை உணருபவனே புண்ணியசாலி.

அவன் தனக்கு வந்த வசதிகளினாலே கர்வம் அடைவதில்லை. சிரமங்களால் மனம் தளர்வதில்லை. தனக்கு வரும் பெருந் துன்பங்களையும் தனது மனோபலத்தினால் எளிதாக ஏற்றுக்கொள்கின்றான். நம் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும்போதுதான் நமக்கு வாழ்வில் சில வழிகள் தென்படுகின்றன. புதிய அர்த்தங்கள், புதிய சக்திகள், புதிய வாய்ப்புகள் நம்மைத் தேடி வருகின்றன.

இதனையே சுவாமி விவேகானந்தர் கூறிய "பலமே வாழ்வு, பலவீனமே மரணம்" எனும் கருத்துக்கமைவாக தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையைச் சந்திக்கும்போது மனம் எந்தவிதமான கடும் எதிர்ப்பையும் சந்தித்து வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைக்கத் துணிகிறது. இத்தகைய செயற்பாடுகளுக்கு இறைநம்பிக்கையும் முயற்சியும் அவசியம். இதனை நாம் உணர்ந்து நடப்போமானால் நம் வாழ்விலும் செயலிலும் முன்னேற்றம் ஏற்படும் என்பது வாழ்வின் அடிப்படையாக விளங்கும். மகாபாரதம் இதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. பேரரசின் நலங்களை அனுபவித்து ராஜசூயயாகம் நடத்திய தருமர் காட்டுக்குச் சென்று வனவாசம் மேற்கொண்டபொழுது இன்பம் துன்பம் இரண்டையும் சமமாகப் பார்க்க முடிகிறது. அத்தகையவருடன் கடவுள் கண்ணன் ரூபமாக துணை இருக்கின்றார். இதனை நாம் எல்லோரும் கருத்தில் கொள்வோமாக.

# கருணையே வடிவான சந்நிதிக் கந்தனிடம் நல்ல தருணமாமிப்போது தூது விட்டோம்

## கிளிகாள்!

மரகதரத் தினமனைய வண்ணநிறக் கிளிகாள்!
மதித்தடியேம் படுந்துயரை மனதிற் கொண்டு பறந்தே
சுரந்து அருள் பொழியுஞ் செல்வச் சந்நிதியா னிடம்போய்
சுடர்நெடுவேற் கையானே, சுப்ரமண்யா வென்று
இருந்த பொருள் அத்தனையும் எல்லாம்விற்று மக்கள்
எத்தனைநாள் இந்தநிலை இருக்கும் என்ற நிலையும்
புரிந்தவனின் செவியார பெட்புடனே உரைத்து
பெருமையுடன் திரும்பிடுவீர் பிரச்சினைப்ப டாதே.

## மேகங்காள்!

வானளாவி மலைகள் தாவி வருகருமே கங்காள்!
வையகமே வாழும்படி வானமிர்தம் பொழிவீர்
ஞானிகாளி தாசன்தூதாய் சென்றதுபோ லின்று
நமது இந்நாள் நிலைமை அந்த ஞானவேலற் குரைத்து
தானதர்மம் தழைத்திடவும் தத்தளிப்பு நீங்க
தமிழோடு கல்விகற்கும் தன்மையெல்லாம் ஓங்க
ஆனதெல்லாஞ் சொல்லி எங்கள் ஆறுமுகற் குரைத்து
அவன்கருணை பெற்றுடனே ஆடியோடி வருவீர்.

## ஆறுகால் பறவைகாள்!

ஆறுகால் சிறுபறவை வண்டுகளே! வாரீர்
அரும்புமலர் தேனுடன்தா தருந்திப்பறந் திடுவீர்
சுறுந்தமிழ் மகளிர்மக்கள் கோலமுதி யோர்கள்
குறித்தபசு முதலான கால்நடைகள் எல்லாம்
வேறுபட்டு பட்டினியாய் மேவுவதும் குகற்கு
வில்லங்கப் பாடெல்லாம் விளக்கமாக வுரைத்து
ஈறில் நல்ல பண்போல ரீங்காரம் பாடி
இனிதுடனே வந்திடுவீர் எங்கள்மனம் சிறக்க.

ஸ்ரீ பெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)
**K. கனகசபேசன்**
(கனடா)
**உரிமையாளர்**
(V.S. பேரம்பலம் அன்சன்ஸ், யாழ்.)
**K. கனகேஸ்வரன்**
(ஆணையாளர், தொழில் அலுவலகம், யாழ்.)
**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)
**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)
**இ. இராஜகோபால்**
(கிளை. முகாமையாளர், நாவலடி, உடுப்பிட்டி)
**T. நந்தகுமார்**
(கொழும்பு)
**ஐ. சிவானந்தம்**
(கிராமசேவையாளர், இராசவீதி, நீர்வேலி)
**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)
**க. தங்கராசா**
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)
**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)
**க. உருத்திரேஸ்வரன்**
(செட்டித்தெரு, நல்லூர்)
**அ. அரவிந்தன்**
(G.P.S. றோட், கல்வியங்காடு)
**ம. தியாகலிங்கம்**
(வியாபாரிமூலை பருத்தித்துறை)

**S. மங்களருபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**K.V. சிவனேசன்**
(சத்ய சாயி நிலையம், கொக்குவில்)
**ம.க. ஸ்ரீதரன்**
(சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**சு. இரத்தினவடிவேல்**
(பழைய சோடாக் கடையடி, வல்வெட்டித்துறை)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**K. கருணாநிதி**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. விஜயகுமார்**
(சந்திரன்கடை, உரும்பராய்)
**து. தில்லையம்பலவனார்**
(இளைப்பாறிய விவாகப் பதிவாளர், புத்தூர்)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**க. புவனேந்திரன்**
(கண்டாவத்தை, அல்வாய்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரன் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**க. கோபாலசுந்தரம்**
(மாருதி மோட்டோர்ஸ், நெல்லியடி)
**பத்மா**
(கொழும்புத்துறை றோட், சுண்டுக்குளி)
**R.V. கந்தசாமி**
(மருத்துவமனைவீதி, யாழ்ப்பாணம்)

ம. பேரின்பநாதன்
(செட்டித் தெரு, நல்லூர்)
சி. கரீந்திரன்
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
N. சங்கரலிங்கம்
(சாந்தம் நவிண்டில், கரவெட்டி)
செ. பாலச்சந்திரன்
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
சுபத்திரா விவேகானந்தன்
(அளகொல்லை, அளவெட்டி)
து. சிவகுமாரன்
(கணேசன் சென்ரர், K.K.S. வீதி, இணுவில்)
மா. கோபால்
(பூதராயர் ஒழுங்கை, பருத்தித்துறை)
ச. வதனி
(நீர்வேலி மேற்கு)
நா. கார்த்திகேசு
(புத்தூர் கிழக்கு)
நீ. மயில்வாகனம் J.P.
(வருணன், அச்சுவேலி)
T.N. இராஜா
(பொன்கிளர், சங்கானை)
சோதிரட்ணம் அனுஷியா
(அரசடி சந்தி, நவாலி)
செ. உமாபதி
(பிராமண வீதி, தும்பளை)
V. சந்தனத்தேவன்
(தூதாவளை, கரணவாய்)
ஐயாத்துரை நடராசா
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
S. செந்தூரன்
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
செல்வி அருளம்பலம் சுசிகலா
(கொத்தியகாடு, தொண்டைமானாறு)
ப. நா. தம்பிராசா
(K.K.S. வீதி, இணுவில்)

**A. பிரதாபன்**

(சந்திரபுரம், உடுவில்)

**ந. இராசேந்திரம்**

(சோதிவாசா, இணுவில்)

**செல்வி செ. நாகமுத்து**

(சிதம்பரம், மட்டுவில் வடக்கு)

**திருநாவுக்கரசு ஜெயக்குமார்**

(செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)

**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**

(சுகவனம், உரும்பராய்)

**V.S. மருதலிங்கம்**

(அரசடி சந்தி, மானிப்பாய்)

**அ. பாலேஸ்வரி**

(கதிரிப்பாய், அச்சுவேலி)

**த. கணபதிப்பிள்ளை**

(சாயி இல்லம், கொல்லோலை, இமையாணன்)

**மு. நவரெத்தினம்**

(வீரப்பதிராஜன், கரணவாய்)

**பொ. ஞானப்பிரகாசம்**

(சித்தம்பாதி, கரணவாய்)

**சிவகுரு குகதாசன்**

(செல்வமதி, ஆவரங்கால்)

**வ. தம்பையா**

(கலட்டி வளவு, புலோலி மத்தி)

**குமாரதாசன் கீர்த்தனன்**

(வல்லிபுரம், புலோலி)

**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**

(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)

**வைத்திலிங்கம் பிரபாகரன்**

(துரைவீதி, கொக்குவில்)

**சி. இளம்பூரணன்**

(நல்லூர், யாழ்ப்பாணம்)

# முருக வழிபாடு

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்



மிகப்பழைய காலத்திலிருந்தே முருக வழிபாடு தமிழ் மக்களிடையே காணப்பட்டுவருகிறது. முருகு என்பது அழகு. முருகன் என்பதன் பொருள் அழகன் ஆகும். அழகு யாராலும் விரும்பப்படுவது. எனவே அழகு பேணப் பட வேண்டியது; பெருமைக்குரியது; உயர்ந்தது. அதனால், அழகு ஆராதிக்கப்பட வேண்டியது என நம் முன்னோர்கள் எண்ணினர் போலும். பண்டைத் தமிழ் மக்கள், அழகுக்குத் தெய்வ வடிவம் அமைத்து முருகன் என அழைத்து அன்போ டும், பக்தியோடும் வழிபட்டனர். அழகு எங்குள்ளதோ அங்கு ஒழுங்கு இருக்கிறது. அலங்கோலத்தில் ஏது அழகு. செம் மையே அழகு, அழகே செம்மை; உண்மையே அழகு; அழகே உண்மை; எனவே அழகு செம்மையும் உண்மையும் ஆனது. அழகுக் கடவுட் தத்துவம் இந்த அடிப்படையிலேயே நம் முன்னோர் களால் கைக்கொள்ளப்பட்டது. இந்த அழகுத் தத்துவமே முருக தத்துவம். முருக தத்துவத்திற்கு முதுமையில்லை; மூப்பும் இல்லை, உதிர்வும் இல்லை. அது நிலையானது, நித்தியமானது, குன்றாத இளமை கொண்டது. எனவே முருகன், எஞ்ஞான்றும் குமரனாகவே காட்சி தருகிறான்.

பழந்தமிழ் மக்கள் நிலத்தை ஐந்தாக வகுத்தனர். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன ஐவகை நிலங்கள். ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வம் இஷ்ட தெய்வமாக வழிபாடு செய்யப்பட்டது. இந்த வகையில், குன்றும் குன்று சார்ந்த இடங்களையும் குறிஞ்சி நிலம் என அழைத்தனர். குறிஞ்சி நிலக் கடவுளாக முருகன் விளங்கினான். “சேயோன் மேய மைவரை உலகமும்” என்று இலக்கியம் கூறும். சேயோன் என்பவன் முருகன். முருகன் தமிழ்த் தெய்வமாகப் போற்றப்படுகிறான்.

வட திசையிலிருந்து தென்னாட்டிற்கு வந்த அகத்தியர், தமிழை முருகனிடமே கற்றுத் தேர்ந்தார் என்று கூறப்படுகிறது.

“குறு முனிக்குத் தமிழ் உரைக்கும் குமர” என்ற பாடல் அடியிலிருந்து இச்சம்பவம் தெரிய வருகிறது.

தமிழ்ச் சங்கம் அமைத்து முத்தமிழையும் வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்கள். மூன்றாம் தமிழ்ச்சங்கம் மதுரையில் இருந்தது. இச் சங்கத்தில் நாற்பத்தொன்பது தலை சிறந்த புலவர்கள் அமர்ந்து தமிழ் வளர்த்தார்கள்; தமிழை ஆராய்ந்தார்கள். அப்புலவர் களுக்கு தலைமை தாங்கிய புலவர்திலகம்தான் நக்கீரனார்.

தர்ம நெறியைக் கடைப்பிடிப்பவன் முத்திநிலையை அடைவான்.

"நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்று இறைவனைப் பார்த்துக் கூறிய நக்கீரர் சிறந்த முருக பக்தர். "திரு முருகாற்றுப்படை" எனும் நூலை முருகன் மீது பாடியவர். முருகனின் திருவருட் கடாட் சம் பெற்ற பழந் தமிழ்ப்புலவர்.

அவர் திருமுருகாற்றுப்படை பாடிய தற்கு ஒரு வரலாறு உள்ளது. நக்கீரர் ஒரு குளக்கரையில் அமர்ந்து பூசை செய்து கொண்டிருக்கும் சமயம், பக்கத்தில் நின்ற ஆலமரத்திலிருந்து ஓர் இலை உதிர்ந்து கீழே வீழ்ந்தது. அவ்வாறு கீழே நிலத்தில் வீழ்ந்த இலையின் ஒரு பகுதி நீரிலும், மறு பகுதி நிலத்திலும் பொருந்திக் காணக்கூடிய வாறு அந்த இலை கிடக்கக் காணப்பட்டது. அப்பொழுது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நீரில் காணப்பட்ட இலைப்பாகம் மீனாகவும், நிலத் தில் காணப்பட்ட இலைப்பாகம் பறவையாக வும் உருமாறி ஒன்றையொன்று இழுத்த நிலையில் அவை காணப்பட்டன. இந்த அதி சயம் யாரைத்தான் கவர்ந்து இருக்காது. இக் காட்சியை நக்கீரர் பார்த்துக் கொண்டிருந் தமையினால், அவர் பூசை நியமத்தில் தவறி விட்டார். புலன்களை ஒடுக்கி ஒருநிலைப் படுத்திக் கொண்டே பூசையில் ஈடுபட வேண் டும் என்பது விதி. புலன்களை அலைய விட்டுப் பூசையில் தவறியமை, பூசை விதியை மீறிய குற்றமாகிவிட்டது. அந்தவேளை, கற்கி முகி என்ற பூதம், நக்கீரரைத் தூக்கிச் சென்று மலைக் குகையொன்றினுள் இட்டு அடைத்துவிட்டது. நக்கீரர் திகைத்துப் போனார். அக்குகையில் நக்கீரரோடு ஆயிரம் மனிதர்கள் பூதத்தினால் அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் சிறிது வேளையில் பூதத்திற்கு உணவாகப் போகின் றனர். இது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அப்பூதம் குளிக்கச் சென்றுவிட்டது. அந்த இடைவேளையைப் பயன்படுத்தி முருகப்பெரு மானை வேண்டுதல் செய்ய எண்ணினார் நக்கீரர். முருகனால் மாத்திரமே, அத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் தாம் காப்பாற் றப்பட முடியும் என நினைத்த நக்கீரர் முரு கன் மேல் பாமாலை தொடுத்தார். அப் பாமா லையே "திருமுருகாற்றுப்படை" நூல் ஆகி யது. பாக்களைக் கேட்டு உவந்த முருகப் பெருமான் நக்கீரரைப் பூதத்தின் பிடியிலிருந்து காப்பாற்றத் திருவுளங்கொண்டு அங்கு தோன் றினார். பூதத்தைக் கொன்றார். குகைக்குள் சிறைப்பட்டிருந்த நக்கீரரைச் சிறைமீட்டு அருளினார். ஏனையோரும் காப்பாற்றப் பட்டனர். தமிழ்ப் பாட்டுக்கு அத்துணை மகிமை. "யாம் இருக்கப் பயமேன்" என்று அபயமளிக்கும் ஆறுமுகப்பெருமானைத், தினமும் தமிழ்ப் பாமாலை சூட்டி வணங்கி, அவனருள் பெற்றுத் தினம் தினம் அஞ்சுதலை நீக்கி ஆறுதலைப் பெற்று உய்வோமாக.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 24 | கார்த். | 08 | ஞாயிறு | ஆறுமுகநாவலர் |
| நவம்பர் | 27 | கார்த். | 11 | புதன் | மெய்ப்பொருள் நாயனார் |
| டிசம்பர் | 07 | கார்த். | 21 | சனி | இராமநாதர் |
| டிசம்பர் | 18 | மார்கழி | 03 | புதன் | சடையர் |
| டிசம்பர் | 25 | மார்கழி | 10 | புதன் | இயற்பகையார் |
| டிசம்பர் | 28 | மார்கழி | 13 | சனி | மானக்கஞ்சாரர் |

மனம் சுத்தமாக இருந்தால் செயல் நல்ல வழியில் செல்லும்.

(தொடர்ச்சி...



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா



மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

ஏற்றார் மூது ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்



**பதவுரை:**

ஏற்றார் மூதூர் எழில் நகை எரியின் வீழ்வித்து ஆங்கு- பகைவர்களுடைய பழைய ஊர் மூன்றினையும் எழுச்சி பெற்றுத் தோன்றிய சிரிப்பில் உண்டான நெருப்பினால் சாம்பராய் வீழச் செய்தாற்போல, அன்று ஒருத்தரும் வாழாமை அடியோம் அடிக்குடில் அருள் பெரும் தீயில் ஒடுக்கினன்- எம்மை ஆட்கொண்ட அந்நாளில் ஒருவரும் தவறிப்போகாமல் அடியோங்களது அடிமைச் சிறு வீடுகளாகிய உடம்புகளைத் தனது அருளாகிய பெருந்தீயினிடத்தே ஒடுங்கச் செய்தனன்; தடகையின் நெல்லிக்கனி போன்று எனக்கு எளிவந்து விளங்கித் தோன்றுவானாயினன். எனக்கு ஆயினன்- வளைந்த கையினிடத்து ஏந்திய- நெல்லிக்கனி

ஏற்றார்- பகைவர். இப்பொருட்டாதலைப் "போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தப" என்னும் பரிபாடலினும் (18:1) காண்க. முதுமை ஊர்- மூதூர் எழில்- எழுச்சி கலி 14:2 நச். எழில்நகை என்றார். போர்க்கருவிகளாயமைந்த தேவர்களின் அறியாமையை உணர்ந்த இறைவன் தேரின் கண் திருவடியை வைத்தலும் அதன் அச்சு முறிந்தமையால் உண்டாகிய எழுச்சி பெற்ற நகையாதலின்.

ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின் வீழ்வித்த வரலாறு:- தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்களும் இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்று உலோகங்களாலான முப்புரங்களை விண்ணிலுடையராய் அவற்றுடன் சென்று தேவர் முதலியோரது நகரங்களை அழித்துத் தீமை செய்து வந்தனர். அம்முப்புரங்களை அழித்து அசுரர்களை வெல்லத் தேவர்கள் எவராலும் ஆகாமையின் இறைவனிடத்துச் சென்று

இறைவனின் பெருமையை அறிந்தவர்கள் மற்ற எதையும் விரும்பமாட்டார்கள்.

வேண்டுதல் செய்து பூமியைத் தேர்த்தட்டாகவும் சூரிய சந்திரர்களை உருளைகளாகவும் நான்முகனைச் சாரதியாகவும் கொண்டு தேர் அமைத்து மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அமைத்தனர். அமைத்த அத்தேவர், தம் எல்லோரதும் உதவியினாலேயே இறைவன் முப்புரங்களை அழிப்பராகின்றார் என்று எண்ணித் தருக்கினர். அஃதறிந்த இறைவன்,

"தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீ பற
அழிந்தன முப்புர மென்றுந்தீ பற"

உந்தி 13.

என்றவாறு தேரில் திருவடியை வைத்தலும் தேரின் அச்சு முறிந்தது. அப்போது இறைவர்க்கு நகை உண்டாயிற்று. அந்நகையிலெழுந்த அக்கினியே முப்புரங்களை எரித்து வீழச் செய்தது என்பதாம்.

"விண்ணிலா ரிமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
எண்ணிலார் முப்புர மெரியுண நகைசெய்தார்"

ஞான 286:7

"தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய்வேவச் சிரித்தானை"

நாவு 294:10

"புரங்கண் அன்றும் வெவ்வழலில் வெந்து பொடியாகி வீழ்க்கண்டானை"

நாவு 274:7

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

எழில்நகை எரியின் வீழ்வித்தாங்கு (159) அடியோம் அடிக்குடில் ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன் என்றது எழுச்சி பெற்ற சிரிப்பாகிய அக்கினியினால் அசுரர்களை விடுத்து அவர்கள் முப்புரங்கள் அன்றினையும் வீழ்வித்தாற்போல அடியார் வீடுபேற்றினைப் பெற அவர்களுடைய அடிமைக் குடில்களாகிய உடம்புகளை அருட்பெருந்தீயில் ஒடுக்கினன் என்றவாறு.

அடியோம் அடிக்குடில் என உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயரால் அடிகள் கூறியிருப்பினும் அடியோம் என்றது அடிகள் ஒழிந்த மற்றைய உடனிருந்த அடியார்கள் எல்லாரையும் குறித்தது. அருட்பெருந் தீயில் ஒடுக்கப்பட்டவர்களில் அடிகள் சேர்ந்தவரல்லர் என்பது,

"ஆற்றே னாக அவையவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்"

(அண்ட 156:7)

என அடிகள் தனக்கு இறைவன் அருட்பெருக்கினைத் தாங்கத் தக்க சிறந்த உடம்பினைக் கொடுத்தனன் என அருளிச் செய்தமையானும்,

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை ஈங்கொழித் தருளி

நான் என்று கூறிக்கொண்டு எதிலும் முன் நிற்காதே.

அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்"

கீர்த்தி 127-31.

என முன்னர் அருளிச் செய்தமையானும்,

"தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்"

திருவண்ட 162.

"கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கினன்"

திருவண்ட 178-9

என பின்னரும் அருளிச் செய்தமையானும் இனிது விளங்கும்.

அடிமைக்குடில் அடிக்குடி என நின்றது விகாரம். "அன்னவற்குரிய வென்ன வடிப்பணி செய்வலென்றான்" (சீவக 552) என்பதன் உரையில் "அடிமைப்பணி விகாரமாம்" என நச்சினார்க் கினியர் உரைத்தமையுங் காண்க. குடில்- சிற்றில். "கூரை குரம்பை குடில் சிற்றிலாகும்" எனத் திவாகரத்து (இடப்பெயர்த்) வருதலுங் காண்க. உடம்பைக் குடில் என்றல்,

"மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை"

சிவபுரா 54

"சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடில்"

ஆசைப் 3

"இருள்திணிந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடில்

அதிசய 10

என வருவனவற்றாலுமறிக. அடிக்குடில் எனக் குடிலுக்குரியாரது அடிமைத் தன்மை குடின்மேலேற்றப்பட்டது. குடில் (160) ஒடுக்கினன் (161) என முடிக்க.

தடக்கையின் நெல்லிக்கனியெனக் காயினன் என்பது நீர் வேட்கையால் வருந்தினாக்கு அதனைத் தீர்த்தற்கு உள்ளங் கையிற் கிடைத்த நெல்லிக்கனி உதவுவது போலவும், அது கையிற் கிடைத்த அளவானே அது நீர் வேட்கையை நீக்கும் தன்மையுடைத் தென்பது அதனை வைத்திருப்பவர்க்கு விளங்குதல்போலவும், இறைவன் தனது பிறவித் துன்பத்தை எளிதிற் போக்குமாறு தமக்குக் கிடைத்தமையையும், கிடைத்த அவ்விறைவன் துன்பத்தைப் போக்கும் அருள்நீமையன் என்பது தமக்குத் தெற்றென விளங்குகின்றமை யையும் உணர்த்தியவாறு. "மறவா மனத்தார்க்கெலாம் கையில் ஆமலகக் கனியொக்குமே" என அப்பரடிகள் (தே. நாவு 186:2) அருளியமையுங் காண்க. தடக்கை என்றது உள்ளங்கையை.

(தொடரும்...

**நீர்மேல் குமிழ்**

தேர், யானை, குதிரை முதலிய ஊர்திகளின்மீது ஊர்ந்து உலாவரும் பெருந்தகவுடைய அரசர்களது செல்வம் யாவும், நீர்மேல் எழுதிய எழுத்து எவ்வாறு ஒரு கணத்துக்குள் மறையுமோ அவ்வாறு நிலையற்றதாகும்.

-அறநெறிச் சிந்தனைகள்-

# நம்முடைய சமயம்

சுவாமி ஹரிதாஸ்கிரி அவர்கள்

தெய்வம் என்று ஒன்று உண்டு. தெய்வத்திற்கு பிரத்தியோகமாக உருவமோ அல்லது பெயரோ கிடையாது. எந்த உரு வத்தை தியானித்து எப்பெயர் இட்டு அழைப் போமோ அவ் உருவம் தாங்கி அப்பெயர் கொண்டு அருளுவதுதான் ஆண்டவனுக்கு உரித்தான தனிச்சிறப்பு.

உலகத்தின்கண் அனேக சமயங்கள் ஆங்காங்கே தோன்றி அதன் அமைப்பு களுடன் ஆண்டவனை அடைய வழிகளைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால் எப் பொழுது தோன்றியது என்று அறியமுடியாத நிலையில் உலகம் தோன்றிய நாள் முதல் சுயம்புவாக தானே தோன்றி பரிபூரண அரு ளோடு நிறைந்து நிற்கும் சமயம், மகா புனிதமான நமது இந்து சமயம். மற்ற சமயங் களில் இறைவனை இப்படித்தான் வணங்க வேண்டுமென்று சட்ட திட்டங்கள் உண்டு. ஆனால் நமது பழம் பெரும் இந்து சமயத் திலோ, சைவம் என்றும், வைணவம் என்றும், சாக்தம் என்றும், காணபத்தியம் என்றும் இன்னும் இதுபோல் எத்தனையோ வழிகள். எமது சமயம் சட்டதிட்டங்களுக்கு அப்பாற் பட்டது. அந்த இறைவனை எப்படியும் வழி படலாம் என்று எளிமையான வழிமுறை களைக் காட்டிக்கொடுப்பதுதான் எம்முடைய சமயம். இதைவிட உயர்ந்ததொரு சமயம் இந்த உலகத்தின்கண் இதற்கு முன் தோன் றியது இல்லை, இனிமேல் தோன்றப்போவ தும் இல்லை.

இந்த உருவ அருவ வழிபாட்டினை நமக்கு எளிமையான முறையில் எடுத்துக் காட்டும் வழிபாடுதான் உருவவழிபாடு. இதை உணர்ந்துதான் அருணகிரிநாதர் “உருவாய் அருவாய் உளதாய் இலதாய்” என்று கூறி குருவாய் வருவாய் என்று ஒரு வழிபாட்டி னாலே “அருள்வாய் குகனே” என்று பாடி முடித்தார். அனைத்து உலகங்களுக்கும், அனைத்து சமயங்களுக்கும், அனைத்து மக்களுக்கும் ஆண்டவன் ஒருவனே. மூலப் பொருளாகிய அவன் எல்லாவற்றிற்கும் காரணமாய் நிற்கின்றான். அரிசி, உழுந்து இந்த இரண்டு தானியங்களையும் ஊற வைத்து அரைத்து மாவாக்கி சின்னச் சின்னத் தட்டுக்களிலே ஊற்றி நீராவியில் வேக வைத்தால் அதை இட்டலி என்கிறோம். இந்த மாவையே தோசைக் கல்லிலே ஒரு கரண்டி விட்டு வட்டமாகத் தேய்த்தால் தோசை என் கின்றோம்.

இட்டலி, தோசை இவையெல்லாம் பெயர்களினால் மாறுபட்டிருக்கலாம். உருவத் தினாலும் மாறுபட்டிருக்கலாம், ஆராய்ந்து பார்ப்போமானால் இந்த இரண்டு தின் பண்டங் களுக்கும் மூலப்பொருள் ஒன்றுதானே. இந்த தத்துவங்களைக் கருத்தில் கொண்டு தான் எமது சமயத்திலொன்றான மூலப் பரம்பொரு ளுக்கு அனேக உருவங்களைக் கொடுத்து அனேக பெயர்களைக் கொடுத்து வழிபடு கின்றோம். புராணங்களையும் இதிகாசங்களை யும் படிக்கும்போது ஆனைமுகனுக்கு அப்பன் சிவன், அம்மை கௌரி, தம்பி முருகன், மாமன் நாராயணன் என்று உறவுகளை வைத்து வழிபடுகின்றோம். ஒரு சிலர் இதைக் கேலியாக சொல்லுவார்கள். உறவு என்றால் நெருக்கம் உடைய தொடர்பு என்று கருத்துக் கொண்டால் அதுவே இதற்கு பதிலுமாகும்.

பகைவரிடமிருந்தும் பல விஷயங்களை அறிஞர் கற்றுக்கொள்வர்.

எல்லாம் வல்ல அந்த இறைவனைத் தந்தையாகவும், தாயாகவும், அண்ணனாக வும், தம்பியாகவும், மாமனாகவும், மாமியாக வும் இப்படி மனத்தினால் கற்பனை செய்து கொண்டு வழிபாடு செய்யும்பொழுது எதோ நம்மையும் அறியாத நெருக்கம் இறை வனுடன் ஏற்படுவதனை அறியலாம். மற்ற சமயங்களில் பிறப்பிற்கும், இறப்பிற்கும் உட் பட்ட ஏதோ ஒரு சில அவதார புருஷர்களை வைத்து அவர்கள் பெயரில் சமயங்கள் தோன்றியிருக்கின்றன, ஆனால், பிறப்பையும், இறப்பையும் அறுத்து நிலையான பேரின் பத்தை கொடுக்கும் ஆண்டவனை முன் வைத்தே இந்து சமயம் தோன்றியிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட உயர்ந்த ஒரு சமயத் தில் அருவ உருவ அனைத்து வழிபாடு களுக்கும் இடமுண்டு. ஒரு சிலர் கேள்வி கேட்பார்கள். அங்கிங்கெனாதபடி எங்கும் பிர காசமாய் விளங்கும் இறைவனுக்கு உடலே ஷேத்திரம், உள்ளமே கோவில், எண்ணமே பூசை என்றெல்லாம் கூறுவார்கள். இது முற் றிலும் உண்மைதான். ஆனால் அந்த நிலையை அடைகின்ற வரையில் ஆலயங்களைக் கட்டி வழிபடுதல், உருவங்கள் சமைத்து வழிபடு தல் இவைகள் எல்லாம் அவசியம்தான். ஒரு அறைக்குள்ளே ஒருவன் சென்றான், நல்ல வெய்யில்காலம், ஒரே புளுக்கம், ஐயகோ! ஐயகோ! என்ன புளுக்கம், இந்த அறையில் காற்றே இல்லையே என்று கூறுவது வழக் கம். அந்த வீட்டுக்காரர் வந்தார், சுவரிலே உள்ள சுவிற்சினைத் தட்டினார், அந்த அறை யில் உள்ள மின்சார விசிறி சுற்ற ஆரம் பித்தது. காற்றே இல்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்த இந்த மனிதன்மீது காற்றுப்பட்டது. அப்பாடா, அப்பாடா இப் போதுதான் காற்று வந்தது என்று மகிழ்ச்சி அடைகின்றான். மின்சார விசிறி சுற்றுவதற்கு முன் அந்த அறையில் காற்று இருந்தது, அக்காற்றினை உணரும் தன்மையில் இவன் இல்லை. மின்சார விசிறி சுற்றியதும் அது எங்கோ காற்றினை வாங்கி வரவில்லை, அங்கு இருக்கும் காற்றினை அது உணரும் படி செய்தது.

காற்றில்லாமல் நம்மால் வாழமுடி யாது, அதுபோல கடவுள் இல்லாமல் நமக்கு மோட்ஷம் கிடையாது. காற்று எங்கும் நிரம்பி யுள்ளது. அதுபோல் கடவுள் எங்கும் பரவி இருக்கிறார். எங்கும் பரவி இருக்கும் காற் றினை ஒருசில சமயங்களில் நம்மால் உணர முடிவதில்லை. அதுபோல் எங்கும் பரவி இருக்கும் இறைவனையும் நம்மால் உணர முடிவதில்லை. மின்விசிறி சுற்றத் தொடங்கிய தும், காற்று இருக்கிறது என்று உணரு கிறோம், அதுபோல் எங்கும் இறைவன் பரவி இருந்தாலும் உணராத தன்மையில் இருக்கும் பொழுது இந்த மின்விசிறியைப்போல் நமக்கு இறைவன் எங்கும் இருக்கிறான் என்று உணர்த் துவது நல்ல குருநாதர்களும், தன்னை அறிந்த ஞானிகளும், அவர்களின் அருட்சொற் களும், அதே வழியில் ஆலயங்களும், திரு விழாக்களும், ஏனைய சிறப்புடைய வழிபாடு களும் அவ்வப்போது நமக்கு உணர்த்திக் கொண்டு இருப்பதுதான் நமது சமயத்தின் மாபெரும் உண்மை.

இந்த நிலையில்தான் நம்முடைய சான்றோர்களான ஆன்றோர்கள் ஆங்காங்கே திருத்தலங்களைக் கட்டி நாம் இறைவனை வழிபடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்திருக் கிறார்கள். என்னே! என்னே! நமது சமயத்தின் கருணை. என்னே! நமது சமயத்தின் பெருமை! என்னே நமது சமயத்தின் தூய்மை! இப்பேர்ப்பட்ட சனாதன தர்மமாகிய இந்த இந்து சமயத்தில் பிறந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள். இந்தச் சமயத்தின் நோக்கத் தைப் புரிந்துகொண்டு அவ்வழி செல்ல விரும்பும் அனைவரும் புண்ணியவான்கள்.

நம்முடைய சமயத்தில் ஆட்களைச் சேர்ப்பதில்லை, நம்முடைய சமயத்திற்குப்

நம்பிக்கை ஒன்றுதான் மனிதனுக்கு நேரும் சகல நோய்களுக்கும் மருந்து.

பிரச்சாரம் தேவையில்லை, நம்முடைய சமயம் தேனைப் போன்றது. எப்படித் தேன் இருக்கும் இடம்தேடி தேனீக்கள் வருமோ அதுபோல் நம் சமயத்தின் பெருமையை உணர்ந்தவர் கள், அவர்கள் எங்கு இருந்தாலும் எப்படி இருந்தாலும் நமது சமயத்தின் பண்பாட்டினை அறிந்து அவ்வழி செல்ல அவர்களே வருவார் கள்.

இந்த உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் சுகமாக வாழவேண்டும் என்று இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய் கின்ற ஒரே மதம் நம்முடைய மதம்தான். பிற சமயங்களைப்பற்றி குறைகூறாத சமயம் நம்முடைய சமயம்தான். பிறசமயங்களில் உள்ளவர்களின் அறியாமையை பயன்படுத் திக்கொண்டு அவர்களின் அறிவையும் மனத்தையும் பேச்சுச் சாதுரியத்தினால் மாற்று கின்ற பாவச் செயலான துர்க்குணம் நம் சமயத்திற்குக் கிடையாது. வாழ்க! இந்த உலகத்தின் மக்கள் வாழ்க! இந்த உலகத் தில் உள்ளோரின் அறியாமை நீங்குக. அனைவருக்கும் இறையருள் கிட்டுவதாக.

## சோதிக் கந்தா சந்நிதியானே

ஆற்றங்கரையானுக்கு அரோகரா
சோத்துக் கந்தனுக்கு அரோகரா
எனும் பேச்சு மொழியால்
பாமரர் தொட்டு பண்டிதர் வரை
கூவியழைத்து ஆன்மீகப்
பயிர்வளர்க்கும் திருத்தலம் செல்வச்சந்நிதி

காலவோட்டத்தின் நவநாகரிகச் செயல்களால்
ஆன்மீகத்தின் புனிதம் அழிந்துவரும் வேளையில்
ஆன்றோர்கள் கூறிவைத்த வரையறைகளை
கட்டிக் காத்து நிற்பது செல்வச்சந்நிதி

மேலைத்திசைப் பூச்சு நெடிகளும் ஆடை அணிகளும்
வாலைப் பருவத்து உணர்வுகளைத் தூண்ட
காலச்சக்கரம் கலாச்சாரத்தைச் சீரழிக்கும்
களம் அமைக்காது.
கந்தனின் நீற்றுமணம் கண்ணீரை மல்க வைக்கும்
திருத்தலம் செல்வச்சந்நிதி

மறுமையின்பம் வேண்டி வழிபாடு செய்வோரும்
வறுமையின் கொடுமை தரும் பசிதீர்க்க வருவோரும்
ஒருசேரக் கூடி உருகும் புனிதநிலம் செல்வச்சந்நிதி

கந்தனின் புகழ் பேசும் கவிவரிகள்
சந்தம் பிசகாத இசைவடிவில்
நெஞ்சம் உருக்கும் பசனையொலி
எங்கும் பரவும் இசைநிறை பூமி செல்வச்சந்நிதி

சந்நிதிக் கந்தன் எந்நிதியும் தருவான்
சந்நிதியான் சஞ்சலம் அணுகச் சம்மதியான்
எனும் புனித வரிகளைத் தினமும் பாடி, அகநோயும், புறநோயும்
தீர்ந்து புனிதராய் வாழ்வோம்

- கி. தில்லையம்பலவாணர் -

நம்முடைய நண்பர்களை வைத்துத்தான் உலகம் நம்மை மதிப்பிடும்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



33. சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணா கரனே.

## பதவுரை

மந்தாகினி தந்த- கங்காநதி தாங்கிக் கொடுத்த, வர உதயனே- தேவர்கள் கேட்ட வரத்தின்படி சிவ மூர்த்தி யிடத்தில் உதித்தவரே! கந்தா- கந்தக் கடவுளே! முருகா- முருகப் பெருமானே! கருணாகரனே- கருணைக்கு உறை விடமானவரே! சிந்தை ஆகுலம்- மனதில் துன்பத்தைத் தருவதற்கு ஏதுக்களாயுள்ள, இல்லொடு செல்வம் எனும்- மனைவி செல்வம் என்கின்ற, விந்த அடவி- விந்தமலைக்காடு போன்ற இத் துயரத்தை, என்று விட பெறுவேன்- அடியேன் என்று நீங்கப் பெறுவேன்?

## பொழிப்புரை

கங்காநதியின் மைந்தரே! வரத்தால் தோன்றியவரே! கந்தக் கடவுளே! முருகவேளே! கருணைக்கு இருப்பிடமானவரே! மனதில் துயரத்தைத் தருகின்ற மனைவி செல்வம் என்கின்ற இந்த விந்திய மலைக்காடு போன்ற, அச்சத்தைத் தரும் சூழலை அடியேன் என்று நீங்கப் பெறுவேன்?

## விரிவுரை

**சிந்தாகுல:-**

சிந்தை ஆகுலம்- மனதில் உள்ள துன்பம். வடமொழி தீர்க்கசந்தி.

**இல்லொடு செல்வமெனும்:-**

இல்- வீடு. இது இடவாகு பெயராக வீட்டிலுள்ள

மனைவியைக் குறிக்கின்றது. இனம் பற்றி மனைவி மக்கள் செல்வம் முதலியவை துன்பம் பயக்கும் பொருள்கள்.

"உலக பசுபாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசல சுவாச சஞ்ச லமதால்என்
மதிநிலை கெடாமலுன்றன் அருள்தாராய்"

-திருப்புகழ்.

மனைவி மக்கள்- உயிர்ப்பற்று; செல்வம்- பொருள் பற்று.

இந்தப் பற்றுக்களால் மனிதன் சதா அலைந்து திரிந்து அமைதியின்றிக் கெடுகின்றான்.

**விந்தாடவி:-**

விந்த அடவி- விந்தியமலைக் காடு.

நமது பாரத நாட்டின் வட பாகத்துக்கும் தென் பாகத்துக்கும் இடையில் உள்ள பெரிய மலை விந்தியம்.

இம்மலையில் வானளாவிய மரங்கள் செறிந்த காடு. அச்சத்தைத் தந்து கொண்டிருக்கும் கடத்தற் கரியது. இதனுள் சென்றவர் திரும்ப வழிதெரியாது திகைத்து வாடி வருந்துவர்.

அதனால் குடும்ப வாழ்வில் சிக்கியவர்க்கு இது உவமையாயிற்று.

**என்று விடப் பெறுவேன்:-**

மேலே கூறிய துன்பங்கட்கு ஏதுவான இருவகைப் பற்றுக்களை என்று விடப்பெறுவேன்?

பற்றுக்களை விட்டாலன்றி அநுபூதி விளையாது.

"மனை மக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடிநாயேன்
விழலுக் கிறைத்து விடலாமோ"

-திருப்புகழ்.

ஞான நெறியிலே முதலிலிருந்து முடிவு வரை இன்பந்தான். உலக நெறியில் முதலிலிருந்து முடிவு வரை துன்பந்தான்.

**பெண்ணால் வரும் துன்பம்:-**

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகம் கிடைக்கும்; காம

வெட்டையிலே மதிமயங்கும்; சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே.

**மக்களால் வரும் துன்பம்:-**

மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோயடையில் துன்பம் வியன்பரு வத்துத் துன்பம்
கதமுறு காலர்வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறு பாலர் தம்மால் எந்நாளும் துன்பமாமே.

-குசேல உபாக்யானம்.

**செல்வத்தால் வரும் துன்பம்:-**

ஈட்டலும் துன்பம்; மற்றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடின் துன்பம்; கெடின் துன்பம்; துன்பக்கு
உறைபதி மற்றைப் பொருள்.

-நாலடியார் (280)

**மந்தாகினி தந்த வரோதயனே:-**

மந்தாகினி- இது கேதாரத்தில் அமுதம்போல் ஓடுகின்ற அரிய நதி. கங்கா நதி அவ்விடம் மந்தாகினி என்ற பெயருடன் ஓடுகின்றது. சிவபெருமானிடம் மாலயனாதி வானவர்கள் சென்று, சூராதியவுணர்களின் கொடுமையைக் கூறி ஒரு புதல்வனைத் தந்தருளும் என்று முறையிட்டார்கள்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல! ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.

-கந்தபுராணம்.

அவர்களுக்களித்த வரத்தின்படி ஐம்முகச் சிவனார் ஆறுமுகங் கொண்டு ஆறு அனற்கண்களிலிருந்து ஆறு அருட்சுடர்களை அளித்தருளினார்.

அந்த அருட்சோதிகளை வாயுதேவனும் அக்கினி தேவனும் சுமக்க முடியாது சுமந்து கங்கா நதியில் சேர்த்தார்கள். கங்கை அதனையேந்திச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள்.

அரனருள் முறையினை அறிந்து கங்கைதன்
சிரமிசை ஏந்தியே சென்றோர் கன்னலில்
சரவண மெனுந்தடம் தன்னில் சேர்த்தனள்
மரையித மூயிடை மல்குற் றாலென.

-கந்தபுராணம்.

இதனால் "மந்தாகினி தந்த" என்றார்.

தேவர்கள் சிவபிரான்பால் கேட்ட வரத்தினால் தோன்றியபடியால் "வரோதயன்" என்றார்.

வரோதயன்- வரங்கட்குப் பிறப்பிடமானவன் என்றும் பொருள்படும்.

**கந்தா முருகா கருணாகரனே:-**

கருணைக்கு இருப்பிடமானவன்.

கந்தன், முருகன் என்ற பெயர்களுக்கு முன்னரேயே பொருள் கூறப்பட்டுள்ளது.

**கருத்துரை**

கந்தவேளே! உலகப் பற்றுக்களாகிய கவலைகள் என்று நீங்கப் பெறுவேன்? விரைவில் நீக்கியருள் செய்.

(தொடரும்...

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரனுக்கு இந்திய விருது கிடைத்திருக்கிறது என்பதனை ஞானச்சுடர் வாசகர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழகம், திருவையாறு, ஔவை அறக்கட்டளை ஔவைக் கோட்ட தமிழ் ஐயா கல்விக்கழகம் நடாத்திய திருக்கோயில்கள் வளர்த்த தெய்வத் தமிழ் அனைத் துலக 11ஆவது ஆய்வு மாநாட்டில் வைத்து எமது இலங்கை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன சமயப் பிரசாரகரான வில்லிசைக் கலைஞரும் எமது ஆன்மீக எழுத்தாளருமான கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் அவர்களுக்கு ஈழத்துத் திருக்கோயில்களில் தெய்வத் தமிழ்க் கலையகம் வில்லிசைக்கலை என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த வகையில் "தெய்வத்தமிழ்ச்சுடர்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு ஞானச் சுடரும், சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரு மாகிய நாமும் மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

கவலைப்படுவதன்மூலம் வாழ்வில் உயரமுடியாது.

# பிரதோஷ விரதமும் அனுட்டான முறைகளும்

செல்வி செ. ஜடா அவர்கள்

சுக்கிலபட்சம், கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்தும் வருகின்ற திரியோதசி திதியிலே சூரிய அஸ்தமனத்துக்கும் முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையுமாக உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் பிரதோஷ விரதமாகும். இவ் விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாதங்களுள் ஒன்றிலே "சனிப்பிரதோஷம்" முதலாகத் தொடங்கி அனுட்டித்தல் வேண்டும். பகலிலே போசனஞ் செய்யாது சூரியன் அஸ்தமிக்க நான்கு நாளிகை உண்டு என்னும் அளவிலே ஸ்நானஞ் செய்து சிவபூசை பண்ணித் திருக்கோயிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து கொண்டு பிரதோஷ காலம் கழிந்தபின் சிவனடியாரோடு போசனம் பண்ணல் வேண்டும்.



பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம் விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திர செபம், நூல் படித்தல் என்னும் இவ்வெட்டுஞ் செய்யலாகாது. பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனஞ்செய்து கொண்டு வருவோர்க்கு கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், மரணவேதனை, பாவம் என்னும் இவைகள் எல்லாம் நீங்கும். அஸ்தமனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாளிகையே சிவ தரிசனத்திற்கு உத்தம காலம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவவினாவிடை எனும் நூலிலே பிரதோஷ விரதத்திற்கு மேற்கூறிய நல்லதோர் விளக்கம் தந்துள்ளார். பிரதோஷ விரதம் சிவ விரதங்களுள் முதன்மை வாய்ந்தது. ஆதலால் உலகில் வாழ் சைவர்கள் யாவரும் இவ்விரதத்தினைப் பக்தி சிரத்தையுடன் நோற்று வருகின்றனர். தற்போது அலுவலகங்களில் வேலை பார்க்கும் அலுவலர்கூட இம் மஹோன்னத விரதத்தினை நோற்று வருவது பக்தி மேம்பாட்டிலேயாகும்.

இப் பிரதோஷ விரதம் வரக் காரணம் யாதெனில் அமுதம் வேண்டித் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தவேளை அமுதத்திலே நஞ்சு கலந்துவிட்டது. இதனால் தேவர்கள் செய்வதறியாது அங்கும் இங்கும் எங்கும் ஓடினார்கள். அச்சம், பீதி என்பவற்றால் மனம் நொந்தார்கள். மூவுலகிற்கும் இந்நஞ்சு சென்றால் பெரும் அனர்த்தம் விளையும் என எண்ணினார்கள். ஆலகால விஷமான நஞ்சினைக் கண்டு அல்லற்பட்டுத் தேவர்கள் கலங்கிச் சிவபெருமானைத் துதி செய்த காலம் "பிரதோஷ காலம்" ஆகும். பிரதோஷ காலம் மாலை 4.30 முதல் 6.30 மணி வரை உள்ள காலமாகும்.

பிரதோஷ காலத்தில் சிவபெருமான் செய்த அற்புதம் யாதெனில் திருப்பாற்கடலிலே நஞ்சு வந்துவிட்டது. இந்த நஞ்சு ஆலகால விஷம் ஆகும். இது உயிர்களுக்கு அபாயகரமானது. ஆதலால் உயிர்களை வாழச் செய்ய பரமனே அந்த நஞ்சினை உண்டார்.

இதனைக் கண்ணுற்ற உமாதேவியார் தனது நாயகனைக் காப்பாற்ற தொண்டைக்கப்பால் நஞ்சு செல்லாது சிவனின் தொண்டையைத் (கழுத்து) தனது கையால் பிடிக்கவே நஞ்சு தொண்டைக்கு அப்பாற் செல்லவில்லை. அவ்விடம் நஞ்சு நீலம் ஆகிப் பின்னர் கருமை நிறமாயிற்று. இதனால் சிவபெருமான் "நஞ்சு உண்ட கண்டன்" ஆனார்.

நஞ்சு உண்ட கண்டனின் தத்துவப் பொருள் தன்னை அடைக்கலம் அடைந்தோரின் இன்னல்களை இறைவன் களைகின்றான். நஞ்சு உண்ட கறுப்பு நிறம் ஒரு மறையாகத் தோன்றுகிறது. இதனை இறைவன் உயிர்கள்பாற் கொண்ட அன்புச் சின்னமாகவும் கொள்ளலாம். ஆதலால் இதனைத் "திருநீலகண்டம்" எனவும் சுருங்கக் கூறுவார். சேக்கிழார் பெருமான் "திருநீலகண்டர்" எனப் போற்றுகின்றார். இதனாலே "திருநீலகண்டத்து அடியார்க்கும் அடியேன்" என வரலாயிற்று.

தத்துவார்த்த முறையில் "பிரதோஷம்" காட்டுவது என்னவெனில் பிரதோஷத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தேவர்கள், அவர்கள் வேண்டியது அமிர்தம். அவர்களைப் பயப்படச் செய்தது விஷம். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை மறந்து அவர்கள் செயற்பட்டார்கள். இது மானிடராகிய எமக்கும் பொருந்தும். பதவி, பணம் இருக்கும் போது கூட சில வேளைகளில் இறைவனிடம் செல்வது இல்லை. வேலைப்பழு அசதியே இதற்குக் காரணம். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது முதுமொழி. ஆதலால் இறைவழிபாடு, இறை தியானம் இன்றியமையாதவை என்ற தத்துவம் நிருபணம் ஆகின்றது.

பிரதோஷ விரதத்தை சைவர் யாவரும் அனுஷ்டிக்கலாம். சைவசமயம் கூறுவதுபோல புலால், மது, புகை, முதலான பஞ்சமா பாதகங்களிலிருந்து விடுபடல் வேண்டும். சமய தீட்சை பெறல் வேண்டும். இது சைவர் எல்லோருக்கும் உரிய பொது விதி. இந்த விதிகளுக்கமைய ஆலயங்கள், சமய நிறுவனங்கள் பாடசாலைகள் என்பன சமய தீட்சை அளித்து வருவது ஓர் சிவச் செயலாகும்.

என்றாலும், சமய தீட்சை பெறாதாரும் பலர் உள்ளனர். அவர்கள் சைவ ஆசார சீலர்களாக உள்ளனர். அவர்கள் அவ்வாறு இருந்து பிரதோஷ விரதத்தை அனுஷ்டிப்பது சிறந்த விரத முறையாக உள்ளது. பிரதோஷ பூசையில் முதலில் நந்தீஸ்வரப் பெருமானுக்கு விரிவான சிறப்பான பூசை நடைபெறும். அதேவேளை சிவனுக்கும், அம்பாளுக்கும் அதிசிறப்பான அபிஷேக பூசை இடம்பெறும். சிவன், அம்பாள், நந்தி ஆகியோருக்கு நெய்தீபம் ஏற்றி வழிபடும் முறை உள்ளது.

சிவபெருமான் அருந்திய விஷத்தின் ஒரு சிறு துளி விஷத்தினை நந்தீஸ்வரப் பெருமான் சற்று ருசித்துப் பார்த்தார். அதனால் அவரது நாக்கில் புண் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் நீரில் நனையவிட்ட சிவப்பு பச்சை அரிசி, சர்க்கரை, வெல்லம் கலந்து காப்பரிசியாக பிரதோஷ காலத்தில் நந்திக்கு நிவேதிக்கப்படுகின்றது. இக்காப்பரிசி பிரதோஷ பூசையின் முடிவில் அடியார்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

பிரதோஷ காலத்தில் வீதிவலம் வரும் முறை இல்லை. "சோமசூத்திரப் பிரதஷண" முறைப்படியே வீதி வணக்கம் கூறப்படுகின்றது. சுவாமியுடன் வீதிவலம் வருதலே வழமையாக உள்ளது.

திருப்தி கொள்ளும் இயல்பே மனிதனின் மகத்தான பலம்.

1. முதலில் திருநந்தியை வணங்கி பின்பு ஆலயத்தில் இடப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்குதல்.

2. இரண்டாவதாக சண்டேஸ்வரர் சந்நிதியில் இருந்து வந்த வழியே வந்து திருநந்திதேவரை வணங்குதலின்மேல் கோவிலை வலமாகக் கோமுகை வரை சென்று வணங்குதல். (கோமுகை கடத்தல் ஆகாது)

3. கோமுகையில் இருந்து வந்த வழியே கோவிலின் இடப்புறமாக வந்து திருநந்தியை வழிபட்டு அங்கிருந்து இடப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்தல்.

4. அங்கிருந்து வந்தவழியே திரும்பித் திருநந்தியை வழிபடாது வலப்புறமாகவே சென்று கோமுகப்பதம் வரை சென்று வணங்குதல்.

5. மீண்டும் வந்தவழியே வந்து இடபதேவரின் இரு கொம்புகளுக்கும் மத்தியில் பிரதோஷ காலத்தில் மட்டும் வீற்றிருக்கும் ஸ்ரீ நடராஜரை "ஓம் ஹர ஹர" என்று சொல்லி வழிபடுதலே சோமசூத்திரப் பிரதஷணம் எனப்படும்.

ஒருநாள் பிரதோஷம் பார்த்தால் பதினைந்து நாட்கள் கோவிலுக்குச் சென்று வந்த பலன் கிடைக்கும். பதினொரு நாள் பிரதோஷம் பார்த்தால் ஒரு கும்பாபிஷேகம் பார்த்த பலன் கிடைக்கும். நூற்றியிருபது பிரதோஷம் பார்த்தால் அவர்களுக்கு மறு பிறவியே கிடையாது.

எம்பெருமான் விஷமுண்ட நாள் சனிக்கிழமை. அதனால் அந்நாளில் வரும் "பிரதோஷம்" மிகுந்த சிறப்பும் மகிமையும் வாய்ந்தது ஆகும். சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷத்தன்று உபவாசம் இருந்து பிரதோஷ வேளையில் வழிபாடு செய்தால் ஐந்தாண்டு கள் வழிபாடு செய்வதற்கு சமன் ஆகும். மேலும் "பஞ்சமாபாதகங்களும்" நம்மைவிட்டு விலகும். இலங்கையில் பிரதோஷ வழிபாடு முன்னதிலும் பார்க்க அதிசிறப்பாக உள்ளது. சிறியோர் முதல் முதியோர் வரை இவ்விர தத்தை அனுஷ்டிப்பது ஓர் சிறப்பம்சமாகும். எல்லாச் சிவாலயங்களிலும் பிரதோஷ பூஜை மிகவும் சிறந்த முறையில் இடம்பெற்று வருகின்றது.

"சித்தம் சிவமானால் சித்திகள் வச மாகும்" என்பது பழமொழி. நம்முடைய மனது எப்போதும் சிவபெருமானை எண்ணிக் கொண்டிருந்தால் நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் எவ்வித தடையுமின்றி நடை பெறும்.

## ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு

**வணக்கம்! தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். ஞானச்சுடரின் மலரின் தயாரிப்புச் செலவினங்களும், அஞ்சல் கட்டண உயர்வும் பல மடங்கு உயர்ந்துவிட்ட இவ்வேளையிலும், மாதந்தவறாது ஞானச்சுடரினை வெளிக்கொணர்வதில் நாம் மிக்க ஊக்கமாகவே உள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் உங்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றுதான்.**

**2014ஆம் ஆண்டுக்கான நுழை வாசலிலே நாம் நிற்கிறோம். உங்களுடைய வருடாந்த சந்தாப் பணத்தினைச் செலுத்தி தாங்கள் சந்தாப் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், புதிய ஆண்டில் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது சரியான முகவரியைத் தபால் மூலமோ – தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**சந்நிதியான் ஆச்சிரம**
**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

வெறும் சொற்கள் எந்தக் கடனையும் தீர்ப்பதில்லை.

(தொடர்ச்சி...

# வட இந்திய தல யாத்திரை

-செ. மோகனதாஸ் சுவாமிகள்-

**காலம்: 07.06.2013 வெள்ளிக்கிழமை**

பகல் முழுவதும் எமக்கென ஒழுங்கமைக்கப்பட்ட அறைகளில் இருந்தபடி அன்று மாலை வட இந்திய யாத்திரையின் முதல்படியாக சென்னையிலிருந்து டில்லி போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தோம். நண்பகல் ஒரு மணி அளவில் எமது யாத்திரையின் நிமித்தம் உணவு தயாரிப்பவர்கள் இருவரும் அவர்களோடு எமக்கு வழிகாட்டியாக வருகின்ற முத்துக்குமாரும் இணைந்து கொண்டனர். நாம் எல்லோருமாக மாலை ஐந்து மணியளவில் டில்லி செல்லும் புகையிரதத்தில் அவரவர்க்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்துகொள்ள பிரயாணம் ஆரம்பமாயிற்று. அன்றைய இரவு உணவாக எமது குழுவினர் அனைவருக்கும் முன்னேற்பாடாகத் தயார் செய்யப்பட்டு வந்த றொட்டியும் கறியும் உணவாகக் கிடைத்தது. வெள்ளிக்கிழமை இரவும் சனிக்கிழமை முழுநாளும் ஞாயிறு அதிகாலை வரை ஓடும் புகையிரதத்தில் எமது பொழுது கழிந்தது. புகையிரதத்தில் உணவு வகைகளாக பாண், பறோட்டா என்று சொல்லப்படுகின்ற றொட்டி, பழவகைகள் என்பன வாங்கக் கூடியதுமாக இருந்த வகையில் உணவுப் பிரச்சினை ஒரு வழியாக சீர் செய்யப்பட்டது. அந்த வகையில்,

**காலம்: 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை**

அதிகாலை டில்லி வந்தடைந்த புகையிரதம் தனது நீண்ட பெருமூச்சினைவிட்டு பிரயாணத்தை முடித்தது. நாம் அனைவரும் முதல் இரண்டு தினங்களும் புகையிரதத்தில் கழித்த சோர்வு நீங்கும்வண்ணம் புதிய தெம்புடன் டில்லி மாநகரில் கால் பதித்தோம். உடனடியாக நாம் தங்கும் இருப்பிடத்தை அடைந்து நீண்ட பயணத்தின் களைப்பு நீங்கும் வண்ணம் கை, கால், முகம் கழுவி உடல் அசதியினைப் போக்கினோம். எம் குழுவினரோடு வந்த உணவு தயாரிப்பவர்கள் நாம் வட இந்தியாவில் இருக்கின்றோம் என்ற எண்ணம் தோன்றாத வகையில் நாவுக்கு ருசியான உணவு வகைகளைத் தயார் செய்து இரு நாட்களாக நாம் புகையிரதத்தில் அடைந்த சோர்வைப் போக்கும் வண்ணம் எமக்கு வழங்கினார்கள்.

பகல் 10மணி அளவில் தனியான சொகுசு வாகனத்தில் எமது டில்லி சுற்றுலா ஆரம்பமானது. டில்லியில் உள்ள முருகன் ஆலயத்திற்குச் சென்றோம். அம் மாநகரில் இருக்கும் முருகன் ஆலயம் இது ஒன்றுதான். இவ்வாலயத்திற்கு டில்லியின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் கூட்டம் வருகைபுரிவதைக் காணக்கூடியதாகவும், அரோகரா எனும் சப்தம் எமது காதில் கேட்கும் ஒரு ஆலயமாகவும் மிளிர்கின்றது. மிகவும் அழகான கட்டிட அமைப்புடன் சிற்பவேலைப்பாடும் கொண்டதுமாக அமைந்துள்ள இவ் ஆலயமானது உயரமான இடத்தில் அமைந்திருந்தது. ஏனோ தெரியவில்லை, இந்த இடங்களுக்குப் போனவுடன் மனதில் பக்தியும், மன அமைதியும் கிடைக்கின்றது. சிறிது நேரம் ஆலய முன் மண்டபத்தில் அமர்ந்திருந்து பூசை வழிபாடுகளில் ஈடுபட்டோம்.

ஆலயத்தில் ஒலித்துக்கொண்டிருந்த "கந்தஷஷ்டி கவசம்", எமது வழிபாட்டுக்கு புத்துணர்ச்சியை அளித்தது. அடுத்து மகாத்மா காந்தியினுடைய சபர்மதி ஆச்சிரமம் சென்றிருந்தோம். மகாத்மா காந்தியோடு சம்பந்தப்பட்ட பல நினைவுச் சின்னங்களையும் பார்வையிட்டோம். பின் இந்திராகாந்தி வாழ்ந்த இல்லம் முதலியவற்றையும் அவர் சுடப்பட்டுக் கீழே விழுந்த இடத்தையும் பார்வையிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினோம்.


இதனைத் தொடர்ந்து பவஹாய் வழிபாட்டு இல்லம் சென்றோம். விரிந்த தாமரைப்பூ வடிவினால் மிகவும் பிரமாண்டமாக பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட மண்டபமும், அதனைச் சூழ உள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள பூந்தோட்டமும் எல்லோரது மனதையும் கவரக்கூடிய வகையில் அமைந்திருப்பதுடன் மனதை அடக்கித் தியானம் செய்யும் சூழ்நிலையை இம் மண்டபம் இயல்பாகவே ஏற்படுத்துகிறது. அடுத்ததாகப் பல ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட பல பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்த வளாகத்தை வாகனத்தில் அமர்ந்தபடியே சுற்றிப் பார்த்தோம். இடையே வாகனத்தை நிறுத்தி அந்த வளாகத்தினுள் அமைந்திருந்த விசுவநாதர் ஆலயத்தையும் தரிசித்து மாலை நாம் இருக்கும் விடுதியை அடைந்து இரவுப் பொழுதைக் கழித்தோம்.

**காலம்: 10.06.2013 திங்கட்கிழமை**

அதிகாலை எமது குழுவினர் ஆக்ரா, மதுரா முதலிய இடங்களைப் பார்வையிடுவதற்குரிய ஒழுங்கினை முகவர் ஸ்ரீரெங்கநாதன் ஏற்பாடு செய்திருந்தார். அந்தவகையில் எமக்குரிய உணவுவகைகளோடு காலை ஆறு மணியளவில் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பார்ப்பதற்காக ஆக்ரா நோக்கி எமது பிரயாணத்துக்கென ஏற்பாடு செய்த சொகுசுப் பேருந்தில் பயணித்தோம். பகல் பத்து மணி அளவில் முற்றிலும் பளிங்குக் கற்களால் உருவான தாஜ் மஹாலைப் பார்வையிட்டபின், கண்ணன் பிறந்து வளர்ந்த இடமான மதுரா நோக்கி எமது பிரயாணம் தொடர்ந்தது. இடையில் நாம் விடுதியில் இருந்து தயாரித்துக் கொண்டு வந்த உணவை உண்டு சிரம பரிகாரம் செய்தோம். மதுராவுக்குப் போகும் வழியில் உள்ள, முற்றிலும் செங்கற்களால் உருவாக்கப்பட்ட



ஒரு பிரமாண்டமான கோட்டை ஒன்றினைப் பார்வையிட்டோம். மாலை 4 மணி அளவில் கண்ணன் பிறந்த இடமான மதுரா வந்து சேர்ந்தோம். முற்றிலும் கண்ணன் சரிதத்துடன் கூடிய இவ்ஆலயம். பழமையான நிகழ்வுகளை எல்லாம் உயிரோட்டமாக காணக்கூடிய வகையில் பார்ப்போரை மெய் சிலிர்க்க வைக்கும். பிரமாண்டமான அரங்க அமைப்பு. மேல் விதானம் முழுவதும் கண்ணன் சரிதம் அழகிய வர்ணத்தில் கீறி வைத்துள்ளார்கள். அந்த ஆலய தரிசனத்தில் பிரமிப்புடன் ஈடுபட்டோம். பலத்த உடற் சோதனையின் பின்தான் நாம் உட்புகுந்தோம் என்பதைக் கூறிக்கொள்ள வேண்டும். தரிசனம் முடிந்து இரவு 11மணி அளவில் விடுதியை அடைந்தோம்.



அன்று முழுநாளும் பிரயாணம் செய்த களைப்பு நீங்கும் வண்ணம் மறுநாள் காலை பத்து மணிவரையில் விடுதியில் தங்கி இருந்தோம். ஆனாலும் எனது மனதில் பஞ்சலிங்க தரிசனம் எப்போது செய்வோம் என்ற எண்ணம்தான் வலுப்பெற்றிருந்தது.

**காலம்: 11.06.2013 செவ்வாய்க்கிழமை**

காலை 10 மணியளவில் ஹரியானா மாநிலத்திலுள்ள குருஷேத்திரம் நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று. இவ்விடத்தில்த்தான் மகாபாரதத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தம் நடைபெற்றது. அதாவது பாண்டவருக்கும் கௌரவருக்கும் யுத்தம் நடைபெற ஆயத்தமாகிய பொழுது கண்ணபிரானால் அருச்சுனனுக்கு கீதா உபதேசம் வழங்கப்பட்ட இடம். அன்றுமாலை 4மணி அளவில் எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட ஜாட் விடுதியில் தங்கினோம். ஏற்கனவே முன்பு இரு தடவை குருஷேத்திரம் போயிருந்தமையால் நானும் கார்த்திகேசனும், ஆறுமுகானந்தனும் விடுதிக்கு அயலில் உள்ள இடங்களுக்கு காலாற நடந்து சென்று ஒரு சில இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். நாம் பார்த்த இடங்களில் எல்லாம் மகாபாரத யுத்தம் நடந்த இடமாகையால் அச்சம்பவங்களை



உடல் வேதனையைவிட மனவேதனை மோசமானது.

நினைவுகூரும் வகையில் பல அழகான நினைவுச் சின்னங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அவற்றினைப் பார்வையிடும்போது ஏற்பட்ட பிரமிப்பு சொல்லுந்தரமன்று. ஒவ்வொரு சின்னங்களும் தத்ரூபமாகவே அமைக்கப்பட்டிருந்தது. மறுநாள்காலை எமது குழுவினர் அங்கே உள்ள பிரமாண்டமான குளத்தில் குளித்துவிட்டு அயலில் உள்ள ஆலயங்களில் தரிசனத்தில் ஈடுபட்டோம்.

இவ்விடத்தில் நாம் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறவேண்டியது அவசியம். தென் இந்தியத் தல வழிபாட்டிற்கும் வட இந்தியத் தல வழிபாட்டிற்கும் மிகுந்த வேறுபாடு ஒன்றுண்டு. தென் இந்தியத் தலங்களில் நாம் வழிபாட்டில் ஈடுபடும்பொழுது அந்தத் தலச்சூழலில் இடம்பெறும் சம்பவங்கள் எமது மனதை இறை வழிபாட்டிலிருந்து விலகிச் செல்ல வைக்கிறது. ஆனால் வட இந்தியத் தலங்களில் எவ்வளவு சனக்கூட்டம் இருந்தாலும் வழிபாட்டின்போது அங்கே காணப்படும் அமைதி வேறு ஓரிடமும் காண இயலாது. வழிபாட்டிற்கு வரும் அன்பர்கள் அந்தந்த ஆலயச் சூழலுக்கு ஏற்றவகையில் தமது வழிபாட்டை மேற்கொள்வர். இது நாம் கண்ட அனுபவம்.

குருஷேத்திர வழிபாட்டை முடித்துக் கொண்டு பிற்பகல் 2மணி அளவில் எமது குழுவினர் ஹரித்துவார் நோக்கி பயணமானோம். வழிநெடுக உள்ள ரம்மியமான காட்சிகளைப் பார்த்துக்கொண்டு இரவு 9மணி அளவில் ஹரித்துவார் வந்தடைந்து எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட விடுதியில் தங்கினோம்.

(தொடரும்...




பொறாமை மனித மேன்மைகளை தேய்த்து விடுகிறது.

# சிவலோக வாழ்வு

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

மண்ணினாலான உலகம் மண்ணுலகம் என்பது போல விண்ணிலுள்ள உலகம் விண்ணுலகம் என்று அழைக்கப்படும். இவைபோல அண்டவெளியில் அளவு கடந்த உலகங்கள் உண்டு. விண்மீனை எண்ணி இத்தனை என்று கணக்கிட முடியாதது போல அண்டப் பரப்பில் உலகங்கள் அமைந்துள்ளன. அதனைத் திருவாசகம்,

“அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்ப ரும்தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றுஎழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த”

என்று திருவண்டப் பகுதியைப் பாடத் தொடங்கும்.

அண்டவெளியில் அமைந்துள்ள அண்டங்கள் ஆயிரமாயிரமானவைகளில் ஆயிரத் தெட்டு அண்டங்களைச் சூரபன்மன் வரத்தினால் பெற்று நூற்றியெட்டு யுகங்களாக ஆட்சிபுரிந்தான் என்று கந்தபுராணம் கட்டுரைக்கும்.

சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்குச் சென்று திரும்புவதற்குச் சிவபெருமான் இந்திரஞாலம் என்னும் தேரையும் ஈந்தருளினார் என்னும் செய்தியையும் கந்தபுராண வாயிலாகக் காணலாம்.

அண்டவெளியில் அமைந்த உலகங்களைச் சிவலோகம், புவலோகம், பவலோகம், உருத்திரவுலகம், சத்தியலோகம் வைகுந்த லோகம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

சிவன் உறையும் உலகம் சிவலோகம். சி- சிவபெருமான். சிவசக்தி பார்ப்பதியம்மை.

சிவன்- பரமேஸ்வரன், சிவசக்தி பார்ப்பதியம்மை சமேத பரமேசுவரன் உறையும் உலகம் சிவலோகம் எனலாம். அதுபோல இந்திரனுக்கு உரியது இந்திரலோகம். வானவர் வாழ்வது வானுலகம். விண்ணுலக வாழ்வை- மண்ணுலகில் காணும் கண்ணுள்ளார் இதனைப் பூலோக சிவலோகம் என்பர்.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பொற்கட்டிகள் பெற்றுக்கொண்ட திருப்புகலூர்ப் பதிகத்தில் எட்டு இடங்களில் சிவலோக வாழ்வை அழுத்தம் திருத்தமாக அழுத்திப் பாடி அருள்வார். அதனால் சிவலோக வாழ்வு பொய்யன்று என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

“அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

“அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே

“ஆணி யால்அமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே

“அரைய னாய்யமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே

"அலம ராதமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே
"ஆயம் இன்றிப்போய் அண்டம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே
"அத்த னாய்அமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே
"ஐய னாய்அமர் உலகம் ஆள்வதற்கு
யாது மையுற வில்லையே

ஏழாம் திருமுறையைப் போல எட்டாம் திருமுறைத் திருவாசகத்தில் திருவாதவூரடிகளார் சிவலோக வாழ்வை நிலை நாட்டுகின்றார்.

"........ ஓ......... என்று அலறி, சொல்லால் உணர்த்த இயலாத பெருமானைச் சொல்லிப் பாராட்டி அவருடைய திருவடிக்கீழ் நின்று பாடிய சிவபுராணத்தினுடைய பொருளை உணர்ந்து உரைப்பவர்கள் சிவஞானச் செல்வர்கள் ஆவார்கள்.

அவர்கள் சிவலோகத்தில் சிவபெருமானுடைய திருவடி நீழலின் கீழ்ப் பல்லோரும் பணிந்து ஏத்த இன்புற்று இனிது இருப்பார்கள்.

"........ ஓ என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

-சிவபுராணம் வரி 91-95.

இன்னும் அண்டவெளியின் உண்டைப் பரப்பைத் திருவண்டப் பகுதி பின்வருமாறு பேசும்:

"அண்டமாகிய பேருலகின் பகுதிகளின் உருண்டை வடிவமான விளக்கமும் அவற்றின் எல்லையற்ற இயல்புகளும் பலவகை வளம்பொருந்திய பெருமைமிக்க தோற்றங்களும் அவை ஒன்றிக்கொன்று மேலாக நின்ற எழுச்சியின் வேறுபாடுகளைப் பகரின் நூற்றொரு கோடிக்கதிகமாக அளவில்லாமல் பரந்து பெருகி உள்ளன.

-திருவண்டப் பகுதி 1-4.

"அவன் அருளாலே அவன்தாள் வணங்குவது" போல அவன் அருளாலேதான் அந்த சிவலோக வாழ்வை அறியலாகும் என்பதை அறிந்த ஆளுடைய அரசு நமக்கு அருளுகின்றார்.

"தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறிச் சிந்தை தந்த
அருளானை......"

-திருப்புள்ளிருக்கு வே;ர்- 4

"எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

-பலகைத் திருத்தாண்டகம் 10

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் பல பதிகங்களில் பரலோக வாழ்வைப் பதிக்கின்றார்.

"........ உயர்வானடை வாரே.
"ஏரார் வானத் தினிதா விருப்பாரே.
"பூமலி வானவ ரோடும் பொன்னுல
கிற்பொலி வாரே.

இவ்வாறான அரியதில் அருமையான சிவலோக வாழ்வின் பெருமையைத் திருவிளையாடற் புராண வாயிலாகத் தெட்டத் தெளிவாக அறிய முடிகின்றது.

சோமசுந்தரக் கடவுள் அன்பின் மிக்க வரகுண பாண்டிய மன்னனுடைய விருப்பத்திற்கு இசைவாக அச் சிவலோகத்தை இந்த நிலவுலகத்தில் வருவித்துக் காட்டியருளினார். காவலன் கண்ணாரக் கண்டு களித்தான்.

திருநந்தி தேவர் சிவ ஆணையினால் காட்டினார். காவலன் காண்பான்.

தேவர்கள் வாழ்கின்ற பதங்கள், நாள்தோறும் நான்கு வகை உணவுகளும் யாழும் சந்தனமும் பொன் மாலைகளும் ஆடற் செல்வமும் சித்திரப் பாவையை ஒத்த மகளிரும், உருத்திரர்கள், உருத்திர மகளிர் கவலையின்றித் துய்க்கும் போகங்களும் காட்டி, திக்குப் பாலகர்கள் இருப்பிடங்கள் இவையாகும். போகம் துய்த்திருப்போர் இவர் காண். சிவபிரான் எளிமையில் உறையும் பதத்தினர் இவர் காண். இறைவனுடைய வடிவத்தை அடைந்தவர் இவர் காண். நிராசையுடன் அறம் ஆற்றியவர் இவர்காண். வினைவலி கெடுத்தவர் இவர் காண்- பிறவியின் மூலத்தை அறுத்தவர் இவர் காண்- அடியார் பணி செய்தலே தவமென்று கருதிச் செய்து மேன்மை அடைந்தோர் இவர் காண். சிவபெருமான் முன்பு சென்று நிற்க வைத்தார். வரகுணன் இறைவனை வணங்கினான். இவ்வாறு வரகுணதேவன் சிவலோக வாழ்வு தரிசிக்கும் பேற்றுக்கு உரியனானான்.




(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 11. தயாபர ரமணன்

ஆச்ரமத்தில் வசிப்பவர்களும், அருணாசலத்தை நாடி வருபவர்களும் பகவான் அருளிய அருணாசல விளக்கத்தை சதா மனதில் போற்ற வேண்டும். புனிதமான அண்ணாமலையை நோக்கியபடி பகவான் ஒரு சமயம் சொன்னது, "இதை என்னவென்று எண்ணி விட்டீர்கள்? கல்லால் ஆன மலையென்றா? அருணாசலம் ஆன்மாவேயாகும். அருள் பொதிந்த உருவாக நிற்பது அது. அதைப் போற்றித் துதித்துப் பாடிய ஞானிகளில், குழந்தைப் பெரியோன் ஞானசம்பந்தனின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. ஒரு பாட்டில் அருணாசலத்தின் உண்மை ஸ்வரூபத்தை அற்புதமாக "ஞானத்திரள் உரு" வாகக் கண்டு பாடுகிறார். அறிவுக் குன்றை இதைவிடச் சரியாக உத்தமமாக வருணிக்க முடியாது.



சொல்லாலும் கவிதையாலும் மட்டுமின்றி பகவான் எண்ணற்ற முறை மலையை வலம் வரும் செயலாலும் அதை அனுபவித்துப் போற்றி இருக்கிறார். அதற்கு (பகவானுக்கு) முதன்மையானது ஆன்ம விசாரம் என்றால், இரண்டாவது, மலையைச் சுற்றுவதாகும். தானே முன்னுதாரணமாகச் செய்ததோடல்லாமல் வெளிப்படையாகப் பிறருக்கு சிபாரிசும் செய்தது.

பகவான் மலைமேலிருந்த காலத்திலும், அடிவாரத்தில் ரமணாச்ரமத்தில் வசிக்க வந்தபின் ஆதி நாட்களிலும் ஒரு வழக்கம் இருந்து வந்தது. யாராவது ஆச்ரமத்தில் பிக்ஷை அளித்தால், அவருக்கு பகவானுடன் அன்று கிரிவலம் செய்யும் பெருவாய்ப்பு கிட்டும். அந்நாட்களில் ஆச்ரமத்தில் பிக்ஷை என்றால் பகவான் கிரிபிரதட்சணம் செய்கிறார் என்று அர்த்தம். அதனால் சில சமயம் அடுத்தடுத்து பகவான் இரண்டு மூன்று நாட்கள் கிரிவலம் செய்ய வேண்டி வரும். அனேகமாக இரவில்தான் வலம் வருவார்கள். இரவு முழுவதும் நடப்பார்கள். பகவானோ பகலில் உறங்குவதோ, ஓய்வெடுப்பதோ கிடையாது. இதனால் மூன்றோ அல்லது அதற்கும் அதிகமான நாட்கள் பிக்ஷைகள், பிரதக்ஷிணங்கள் தொடர்ந்தால் பகவானுக்கு அத்தனை நாட்கள் தொடர்ந்து ராப்பகலாக சற்றும் ஓய்வேயில்லை என்றாகிவிடும். ஓரோர் சமயம் முந்தின இரவுகள் பகவான் வலம் வந்ததை அறியாமல் அடியார் எவராவது பிக்ஷை செய்ய முன்வந்தால், ஆச்ரமவாசிகள் பகவானுக்கு முதல் நாளிரவு ஓய்விருக்கவில்லை என்று தெரிவிக்க முயல்வார்கள். மின்னலென பகவான் முந்திக்கொண்டு அவர்களைத் தடுத்துவிடும். "பாவம்! அவர் என்னுடன் பிரதக்ஷிணம் செய்வதற்காகவே வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறார். அதற்காகத்தான் பிக்ஷையும் செய்கிறார். மூன்று நாட்கள் நான் தொடர்ந்து வலம் வந்தேன். எனக்கு ஓய்வு தேவை என்று நீங்கள் சொன்னால்,

இன்று இரவு நிச்சயமாக என்னைப் பிரதக்ஷி ணம் செய்ய அவர் அனுமதிக்க மாட்டார். ஆனால் அவர் மனத்துள் ஏமாற்றம் இருக்கும். அதனால்த்தான் நான் உங்களை அவரிடம் விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்று தடுத்தேன்" என்று விளக்கம் சொல்வார்.

"மூன்று இரவுகள் தொடர்ந்து தூக்க மின்மை உங்களைப் பாதிக்கவில்லையா" என்று கேட்டால், உறக்கம் என்பது என்ன? மனதிற்கு ஓய்வளிப்பதுதானே? மனம் இருந் தால்தானே அதற்கு ஓய்வளிப்பதற்கு! எனி னும் இரவு முழுவதும் விழித்தால் கண்ணுக்கு சிரமமும் வலியும் உண்டாகும். அது இயற்கை. ஆனால் சிறிது நேரம் கண்களை மூடி அமைதி யாக இருந்தால் அது சரியாகிவிடும். பின் ஏது பிரச்சினை? இதிலிருந்து பகவானின் நிலை அனுமாத்திரம் நமக்குப் புலப்படுகிறது.

சிறிது தூரம் நடப்பதற்கே சிரமப்படு பவர்களைக்கூட மலையைச் சுற்றி எட்டு மைல் வலம் வர பகவான் உற்சாகப்படுத்து வதுண்டு. சூரி நாகம்மாவின் சகோதரர் சேஷாத்ரி சாஸ்திரி பகவானைத் தரிசிக்க வரும்போதெல்லாம் அவர் மனைவியும் கூட வருவார். சாஸ்திரியும் மற்றவர்களும் பிரதக்ஷி ணம் போகும்போது அந்தம்மாள் மட்டும் போகமுடியாது. அவரது உடல் மிகப் பரும னாக இருந்ததனால் சிறிது நடந்தால்கூட அவருக்கு மூச்சுத் திணறும். அவர் ஒருநாள் அழுதுகொண்டே, "பகவானே! எனக்கு ஏனிந்த அவலட்சண சரீரத்தைத் தந்தாய்? இதனால்த்தானே நான் பிரதக்ஷிணம் போக முடிவதில்லை" என்று பரிதாபமாக முறையிட் டார். மறுநாள் சாஸ்திரி கிரிவலம் செய்யப் புறப்பட்டதும் பகவான், "உன் மனைவியை யும் அழைத்துப் போ" என்றது. பகவான் விளையாட்டாக சொல்வதாக நினைத்த சாஸ் திரி சிரித்துவிட்டு பிறகு பகவான் நிஜமாகத் தான் சொல்கிறது என்றறிந்ததும் "அவளுக்கு இங்கிருந்து எதிரிலுள்ள கட்டிடத்திற்குக்கூட நடக்க முடியாது, பின் எப்படி எட்டு மைல் நடப்பாள்?" என்று கேட்டார். பகவான் விடா மல், "அவளைக் கூட்டிப் போ, கூடவே வாடகை வண்டி தொடர்ந்து வரட்டும். நடக்க முடிய வில்லையென்றால் வண்டியில் ஏறிக்கொள் ளட்டும். அவள் பிரதக்ஷிணம் செய்வதற்குத் தடை செய்யாதே" என்றது. அன்று மனைவி சகிதம் வாடகை வண்டி பின்தொடர சாஸ்திரி கிரிவலம் வந்தார். அவர் மனைவி வண்டி யைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் முழு எட்டு மைல் தூரத்தையும் நடந்தே கிரிபிரதக்ஷிணம் செய்தாள். தள்ளாடியபடி, ஆனால் நிறைந்த மகிழ்வுடன் ஹாலில் நுழைந்த அவளைப் பகவான் பரிவு ததும்பும் புன்னகையுடன் வர வேற்றது. தாயினும் மிக தயாபரனன்றோ ரமணன்!

(தொடரும்...

**உயிர்மூச்சு**

இறைவன் என் உயிர் மூச்சாகட்டும். குரு அளித்த மந்திரம்தான் நம்மைத் தூய்மைப்படுத்த வல்லது. அம்மந்திரத்தை ஓத ஓத அது இறைவனுடன் நம்மைச் சேர்க்கும் பாலமாகிறது. வாழ்க்கை எனும் ரயில் பயணத்தில் இறைவன் பச்சைக் கொடி காட்டிக் கொண்டிருக்கும் வரை நமது மூச்சுக்காற்று நம் உயிரைக் காத்து வருகிறது. அவனது இச்சைமாறி அது சிவப்புக் கொடியானால் இந்த உடலைவிட்டு உயிர் பிரிகிறது. நமது உயிர் காக்கும் கவசமாக நமது நாடி நரம்புகளை இறை நாமத்தால் நிரப்ப வேண்டும்.

பகவானுக்கும் அவனது திருநாமத்திற்கும் வித்தியாசமே கிடையாது.

-கோபுரம்-

இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.

# வாழ்வும் வழிபாடும்

திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள்

இந்துசமயம் இயற்கையாகவே தோன்றிப் பரிணாமமடைந்த இயற்கை சார்ந்த சமயம் தவிர இயற்கையின் தோற்ற பரிணாமத்தையும் சமகாலத்தில் இரண்டறக் கலந்து வழிபாடுகளின் தோற்ற பரிணாமங்களுடன் இலக்கிய இதிகாச புராணங்களாகவும் தருகிறது. மேலும் பல்வேறு வரலாற்றுத் தகவல்களையும் விழுமியங்களாக எதிர்காலச் சந்ததிகளுக்கு செய்திகளை எடுத்துச் செல்லும் ஊடகமாகவும் வாழ்க்கையை வளம்படுத்தி நெறிப்படுத்தும் களமாகவும் இந்துசமயம் திகழ்ந்து வருகிறது.

வழிபாடு என்பது வாழ்வின் தேவைகளின் கூறுகளுடன் தவிர்க்க முடியாது பின்னிப் பிணைந்தவை. மேலும் மனிதர்கள் குழுக்களாக இயற்கை சார்ந்து வாழ்ந்தபோது தோன்றிய வழிபாடுகளை ஐந்துவகை நிலப் பண்புகளுடனும் ஆறாவதாக ஆகாயத்தையும் இணைத்து அறுவகைச் சமயங்களாக வகைப் படுத்தினாலும் தத்துவங்களின் தோற்றம் படையெடுப்புக்களால் இவை இடம் மாறியும் கலப்படைந்தும் பரிணாமமடையத் தவறவில்லை. எவ்வாறாயினும் வழிபாடுகளின் தோற்றங்கள் இயற்கை சார்ந்தவையே யாகும்.

மேலும் இந்துசமய வழிபாடு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பிரபஞ்சத்தையும் முதற்கூறான பஞ்ச பூதங்களையும் அதனில் இருந்து தோன்றிய அனைத்து உயிர்களையும் தவிர மனிதர்களின் அனைத்துப் பருவங்களையும் ஆண் பெண் முதற்கொண்டு அனைத்து வேறுபாடுகளையும் ஒரே இறைவனில் ஏகதத்துவமாகக் கண்டு வழிபடும் சமயம் இந்துசமயம்.

உதாரணமாக கந்தபுராணத்தை எடுத்து நோக்கினால் படைப்பின் பரிணாமமும் அருவம் அருவுருவம் உருவம், வழிபாடுகளின் பரிணாமமும் அருவம் அருவுருவம் உருவம் அதாவது ஒரு பொருள் காற்றாக இருக்கிறபோது அருவம் நீராக மாறுகிறபோது அருவுருவம் பனிக்கட்டியாக மாறும்போது உருவம் ஆனாலும் இயற்கையென்பது மாயைதான். அது தோற்றம் வளர்ச்சி மாற்றம் அழிவு மறைவுக்கு உட்பட்டு எம்மை வாழ்வில் மயக்கமுற வைத்து வாழத்தூண்டுகிறது. துன்பத்தையும் தருகிறது. ஆகவே ஆன்மா அறியாமையால் ஆணவ மலத்தால் அல்லற்பட்டு இறைவனை அடைவதைக் காட்டுகிறது.

அதாவது முருகன் பஞ்சபூதத்தில் தோன்றுகிறான். இது பஞ்சபூதங்களின் வழிபாட்டைக் குறிக்கிறது. மேலும் சூரன் சேவலும் மயிலுமாக முருகனை சேருகிறான். இது உயிர்கள் வழிபடுதல்களைக் குறிக்கிறது. வேலில் தாய் இருப்பதால் சக்தியைப் (பெண்ணை) வழிபடுதலையும் முருகன் குழந்தையாகவும் வள்ளியை மணமுடிக்க கிழவனாகவும் காட்சி தருவதை பருவங்களையும், மாம்பழத்துக்கு ஆண்டியாகவும் அரசனாகவும் எனப் பல்வேறு வேற்றுமைகளையும் உள்ளடக்கி ஒருதிரு முருகனாகக் காண்பது ஏக தத்துவம். ஒரே இறைவன் என்ற கொள்கையும் ஆகும் அத்துடன் முருக வழிபாடு இலங்கையில் பல்வேறு வரலாற்றுப் பதிவுகளையும் கூடத்தருகிறது.

அடுத்ததாக இதிகாசமான இராமாயணத்தை எடுத்து நோக்கினால் இராவணன்

வினைப்பயன் வாழ்வைப் பின்பற்றி வருகிறது.

பிரம்மனின் வம்சத்தில் குறிப்பாக ரிஷிகளின் வம்சத்தில் பிறந்தமையால் இராவணன் பிறப்பினால் பிராமணன் ஆகிறான். மேலும் இராவணனை இராமன் கொன்றமையால் பிரம்மகத்தி தோஷத்திற்கு ஆட்படுவதும், இராவணன் பிராமணன் என்பதாலேயே. ஆனாலும் இராவணனின் ஆணவத்தாலும் நேர்மையின்மையாலும் அரக்கனாக அழிய வேண்டியேற்பட்டாலும்கூட இந்துசமயம் எவரையும் ஒதுக்கிவிடவில்லை என்பதற்கு ஆதாரமாக அந்தண குலத்தவரான திருஞான சம்பந்தர் இராவணன்மீது பல்வேறு பதிகங் களைப் பாடியுள்ளமை சான்றாகும்.

மேலும் விஸ்வாமித்திர முனிவர் பிறப்பினாலே பிராமணன் அல்லாத இடத்தும் தனது கடும் தவத்தினாலே பிரம்ம மகரிசிப் பட்டத்தைப் பெறுகிறார். ஆனாலும் ஒழுக்க நெறியில் பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டியேற்பட்டமை இந்துசமயம் தருகின்ற பரீட்சையாகும். அதுபோல் இராமனுடைய வாழ்க்கை சிறந்த அரசனுக்குரிய வாழ்க்கை யாகவே இந்துசமயம் காட்டுகிறது.

எனவே ஆலயங்கள் என்பது வழிபாட் டையும் வரலாற்றையும் மட்டுமல்லாது மனித வாழ்வை மையப்படுத்தி மேன்மைப்படுத்து வதையும் நோக்கமாகக் கொண்டது. அதாவது அறிவியல் விருத்தியில் மொழியின் பங்கு முக்கியமானது. மொழியென்பது சைகைகளாலும் கவிதை வடிவான சிறுசிறு உச்சரிப் புக்களாகவும் பரிணாமமடைந்தமையை ஆலயக் கிரியை முறைகளினூடாக அறிந்து கொள்ள முடியும். மேலும் மனிதர்கள் பல் வேறு குழுமங்களாக தொடர்பாடல் அற்று இருந்த காலத்தில் மனித நாகரிக வளர்ச்சியில் பொது மொழித் தொடர்பாடல் ஏற்பட்டமையால் மனிதர்களால் மனிதர்கள் என்ற அடிப்படையில் இணைந்து முன்னேற முடிந் தமையாகும். மேலும் மனிதத்துவத்தை மேன்மைப்படுத்தவும் யுத்த தருமங்களை மனிதரிடையே ஏற்படுத்தி வீண் பிணக்கு களையும் முடிவுக்குக் கொண்டுவரமுடிந் தமையுமாகும். அதாவது ஒரு மனிதக் குழுமத்தின் கருத்தை மற்றைய மனித இனக் குழுமம் புரிந்து கொள்ள முடிந்தமை உலக சமாதானத்திற்கும் இன்றியமையாததாக இருந்தமையும் ஆகும்.

மேலும் இலகுவாக எழுதிவைத்து பாதுகாக்க முடியாத காலத்தில் தேசவளமை அடிப்படையில் சமூகசாட்சியங்களை மட்டுமே நம்பியிராது தெய்வ சாட்சியங்களையும் பெற் றுக்கொண்ட காலத்தில் ஆலயங்களே நீதி மன்றங்களாகவும் அறிவுச் சாலைகளாகவும் இந்துசமயம் மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்து இன்றியமையாதவையாக இருந்து வந்துள்ளது. அதாவது அரங்கேற்றங்கள்கூட ஆலயங்களிலேயே செய்யப்பட்டன.

ஆனாலும் இந்து மதத்தில் கடுமையான ஆசாரங்கள் மத மறுமலர்ச்சிகளின் போது உட்படுத்தப்பட்டமையால் மத நம்பிக் கைகளில் பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றிவித்திருந்தமை மனமகிழ்வுக்குரியவை இல்லை. குறிப்பாக, இந்துசமய புராணங் களையும் இதிகாசங்களையும் மக்கள் சீராகத் தெரிந்து அதற்கு இசைவாகச் செயற்பட முடியாமைக்கு ஒருவரை ஒருவர் பின்பற்று கின்ற மரபியல் சிந்தனைகளே காரணம். இன்று இவைகளைப் புரிந்துகொள்ள மாற் றங்கள் எமக்குக் கைகொடுக்கின்றன.

**நன்றியை எதிர்பார்க்காதிருக்கப் பழகிக் கொள்வோம்.**
**எப்போதாவது அது கிடைக்கும்போது, எதிர்பாராத பரிசாக அது இன்பந்தரும்.**

தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.

(தொடர்ச்சி...

# திருமந்திரக் கதைகள்

திரு கே.வீ. குணசேகரம் அவர்கள்

"வைச்சு அகல்வு உற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது என நாடும் அரும்பொருள்
பிச்சு அதுவாய்ப் பின் தொடர்வுறும், மற்று அவர்
எச்சு அகலாநின்று, இளைக்கின்ற வாறே"

இறந்தவர்களது உடலைக் கண்ட போதும் உடம்பின் நிலையாமையை உணராது தத்தமது உடல்கள் நிலைத்து இருக்குமென்று நினைத்து வாழ்பவர் பலர். ஆனால் அவர்களது திடமான அழகிய உடல் உருக்குலைந்து அழிந்துபோகும்.

அன்று நாகநாதனின் மகன் பகீரதன் வயலில் உள்ள கிணற்றில் தவறுதலாக விழுந்து இறந்து போனான். அவனுக்கு வயது இருபத்தைந்து. நாகநாதன் பெரும் விவசாயி. அவனிடம் ஆயிரக்கணக்கில் மந்தைகள் நின்றன. பல ஆயிரம் ஏக்கர் வயல்நிலம் இருந்தது. கரும்புத் தொழிற்சாலையிருந்தது. இருந்தும் அவனது ஒரே ஒரு மகன் பகீரதன் இறந்ததை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

ஊர்ச் சிவன்கோயிலின் தலைவன் நாகநாதன். அவ்வூர் பெரும் பணக்காரர்கள் வாழும் ஊர் அல்ல. நாகநாதனை நம்பித் தான் அவ்வூரவர்கள் வாழ்ந்து வந்தனர். சிவன் கோயிலுக்கு நாகநாதன் தலைமையில் ஒரு நிர்வாக சபை இருந்தது. அதன் அங்கத்தவர்கள் கூட்டங்களுக்கு மட்டும் வந்து செல்வார்கள். மற்றும்படி நிதிஉதவி செய்ய மாட்டார்கள். நிதி கொடுக்குமளவில் அவர்களிடம் பொருள் இல்லை. அதனால் நாகநாதன் தான் சிவன் கோயிலின் சகல தேவைகளைக் கவனித்து வந்தான். அவனுக்குத் திருமணமாகிப் பத்து வருடங்கள் ஆகியும் குழந்தைகள் பிறக்கவில்லை. அதனால் அவன் சிவன்கோவிலில் விரதம் இருந்தான். வாயிற் கோபுரத்தைக் கட்டினான். அதன் பின்பு தான் பகீரதன் பிறந்தான்.

பகீரதனை அவன் மிகுந்த செல்லமாக வளர்த்தான். அவன் கேட்டதெல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தான். அதனால் அவன் உலகம் புரியாது வளர்ந்து வந்தான். அன்று அவனது நண்பர்கள் வயலில் உள்ள கிணற்றில் இறங்கிக் குளிக்க விரும்பினர். அவர்களுடன் சென்று கிணற்றில் இறங்கிக் குளித்த பகீரதன் நீரில் மூழ்கிப் பலியானான்.

அதை நாகநாதனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஊரவர்கள் எல்லோரும் நாகநாதனின் வீட்டில் குழுமியிருந்தனர். நாகநாதன் அழுதழுது மயக்கமடைந்தான். நாகநாதனது பெற்றோரும் அவனது மனைவியின் பெற்றோரும் உறவினர்களும் துக்கத்தை தாங்கமுடியாது அடிக்கடி மயக்கமடைந்தனர். பகீரதனின் மாமன் மகள் ஆரணி. அவளைப் பகீரதனுக்குத் திருமணம் செய்ய நிட்சயித்திருந்தனர். பல மணிநேரம் சுய நினைவில்லாது இருந்தாள் ஆரணி.

நாகநாதனின் தந்தை சிவகுரு நாதனுக்கு எண்பது வயது. அவரது உடல்

ஆசை வழிந்த இடத்தில் நரகவேதனை இல்லை.

எங்கும் சுருக்கங்கள் இருந்தன. நடக்க முடியாத அவரை இருவர் கைத்தாங்கலாக அழைத்து வந்தனர். அவரால் நடந்ததை உணர்ந்துகொள்ள முடியவில்லை. பிரேதத்தின் அருகே வந்து நின்று எதையோ முணு முணுத்தார். சொற்கள் வெளியே வரவில்லை. ஆனால் எதையோ சொல்கிறார் என ஊகிக்க முடிந்தது.

அன்று நடைபெற்ற மரணவீட்டிற்கு அயலூரில் உள்ள வர்த்தகர்கள் இரண்டு பேர் வந்திருந்தனர். அவர்கள் வந்ததும் சென்று பிரேதத்தைப் பார்த்து நாகநாதனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டுத் தூரத்தில் இருந்த வேப்பமர நிழலில் வந்தமர்ந்தனர். அவர்களைத் தெரிந்த வேறு சிலரும் அவர்களின் அருகே வந்து அமர்ந்தனர்.

"எனது மகளுக்கு வாற திங்கட்கிழமை திருமணம். மாப்பிள்ளை வெளிநாட்டில் வைத்தியராகப் பணிபுரிகிறார். ஒரு கோடி ருபா சீதனமாகக் கொடுத்துள்ளேன். அவர்கள் சகல வசதிகளுடனும் சந்தோஷமாக வாழ வேண்டும். உங்களுக்கெல்லாம் திருமண அழைப்பிதழ் கொண்டு வந்துள்ளேன்" என்றார் அடுத்த ஊரின் பெரும் வர்த்தகரான தில்லையம்பலம்.

"உங்களுக்கென்ன பெரிய கோடீஸ்வரன். பெரியதொரு ஆடம்பர மண்டபத்தை அமைத்துத் திருமணத்தை நடத்துவீர்கள்" என்றான் அவனது நண்பன் ஏகாம்பரம்.

"ஓம் ஓம்....." பெரிதாக மகிழ்வுடன் சிரித்த தில்லையம்பலம் சொன்னார்; "இதுவரை எனது ஊரிலோ அல்லது அயல் ஊர்களிலோ நடக்காததை நடத்திக்காட்டுறன். பத்துக் கூட்டம் மேளத்துக்கு ஒழுங்கு செய்துள்ளேன். ஒரு வாரத்திற்கு ஊரவர்கள் எல்லோருக்கும் உணவு கொடுக்கப் போகிறேன். மணப்பெண்ணை அலங்கரிக்கவென அலங்கரிப்பு நிபுணர்கள் இருவரை மாப்பிள்ளை வெளிநாட்டில் இருந்து அழைத்து வருகிறார்". அவன் கூறிக்கொண்டிருக்கும்போது ஏகாம்பரம் குறுக்கிட்டுச் சொன்னான் "அதற்குச் செலவு அதிகமாகுமே..."

"செலவு என்ன செலவு. மனிதனை மிஞ்சியதா...? எனது மகள் சகல சௌபாக்கியங்களுடனும் நெடுங்காலம் வாழ வேண்டும். இதுதான் எனது ஆசை..." அட்டகாசமாகச் சிரித்தார் தில்லையம்பலம்.

வாரம் ஒன்று கழிந்தது. ஏகாம்பரம் தான் கேள்விப்பட்ட செய்தியை உறுதி செய்யத் தில்லையம்பலத்தின் வீட்டுக்குச் சென்றார். தில்லையம்பலம் கட்டில் ஒன்றில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். அவரைச் சுற்றிப் பலர் நின்று அழுதுகொண்டிருந்தனர். "வாழ்க்கை நிலையானது என்று நினைத்துத் திமிருடன் தனது மகளின் திருமண ஏற்பாடுகளைச் செய்தார். மாப்பிள்ளை ஏற்கனவே திருமணமானவராம். தரகர் கொண்டுவந்த திருமணத்தை ஆராயாமல் ஒப்புக்கொண்டு தடல்புடலாக செலவு செய்தார். அதை அறிந்ததும் அவருக்கு மாரடைப்பு வந்துவிட்டது" என்று ஏகாம்பரத்திற்குத் தில்லையம்பலத்தின் உறவினன் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"சென்ற வாரம் பகீரதன் இறந்ததைக் கண்டும் தில்லையம்பலம் திருந்தவில்லை. வாழ்வு நிலையானது என்று நினைத்துச் செயற்பட்டார். இன்று அவரே இறந்து விட்டார். மனிதர்கள் ஒருபோதும் திருந்த மாட்டார்கள். மற்றவர்களுக்கு வரும் துன்பங்கள் எதையும் தமக்கு வராதென்றே பலரும் நினைக்கிறார்கள்" என்று நினைத்தார் ஏகாம்பரம்.

(முற்றும்)

துக்கத்தைச் சகிப்பவன் அதனை வென்றவனாகின்றான்.

# இறைபணி செய்பவர் பிறவிக்கடலைக் கடந்து இறைவனடி சேர்வார்

திரு பு. கதிரித்தம்பி அவர்கள்

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாகிய சிவபெருமான் உலகங்களையும் ஆன்மாக்களையும் படைக்கின்றார். ஆன்மாக்கள் வாழ்வதற்கு பஞ்சபூதங்களையும் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) படைக்கின்றார். உயிரினங்கள் வினைகள் ஒழிந்து, பிறவிக் கடலைக் கடந்து தன்னடி சேர்வாரென எண்ணிப் படைக்கின்றார். இறைவன் படைப்பில் சிறந்த படைப்பென எண்ணப்படுவது மானுடப்பிறவி ஒன்றே ஆகும். ஆறறிவு படைத்த மனிதர்கள் இறைபணி செய்து வருவார்களானால், நிச்சயம் பிறவிக் கடலைக் கடந்து இறைவனடி சேர்வர்.

இறைபணி செய்வதற்கு உகந்த இடம் ஆலயம் ஆகும். ஆன்மா ஒடுங்கும் இடம் ஆலயம் என்பர். எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் ஆலயங்களில் பக்தியுடன் வழிபடுவோருக்கு வேண்டியதை வேண்டியவாறு அள்ளிக் கொடுக்கின்றான். பசுவின் உடலில் பால் எங்கும் இருந்தாலும் முலையிலிருந்து பால் சுரப்பதுபோல இறைவனும் எங்கும் பரந்திருந்தாலும் ஆலயங்களில் அருள் பொழிகின்றார். சமய குரவர்களும், சந்தான குரவர்களும் அடியவர்களும் கோவில்களுக்குச் சென்றே இறையருள் பெற்றார்கள். நாயன்மார்களுள்ளும் பல வேதனைகளையும் அளவிட முடியாத துன்பங்களையும் அனுபவித்தவர் அப்பர் சுவாமி அவர்கள். அவர் செய்த உழவாரப் பணியால் (சரியைத் தொண்டு) பிறவிக் கடலைக் கடந்து, எண்பத்தொரு வயதில் சாலோக முத்தியைப் பெற்றார் என்பது புராணம் கூறும் உண்மை. “என்கடன் பணி செய்து கிடப்பதே” என்று கூறியவரும் அப்பரேயாகும். இவரைப்போலவே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் கிரியைத் தொண்டு செய்து சாமீப முத்தியைப் பெற்றார். ஏனைய குரவர்களாகிய சுந்தரமூர்த்தி நாயனாரும், மாணிக்கவாசக சுவாமிகளும் முறையே, யோகம், ஞானம் ஆகிய நெறிகளைக் கடைப்பிடித்து சாரூபம், சாயுச்சியம் ஆகிய முத்திகளைப் பெற்றனர். அறுபத்து நான்கு நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து சென்று கைலாயத்தை அடைந்தபொழுது எம்பெருமான் “அம்மையே வா” என்று அழைத்ததாக வரலாறு உண்டு. பொய்யா மொழியராகிய திருவள்ளுவர் பின்வரும் குறள்மூலம்

“பிறவிக் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்”

என விளக்குகின்றார். இறைவனின் திருவடியைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடந்து விடுவர் என்று அடித்துக் கூறுகின்றார். எனவே இறைபணி பிறவிக் கடலைக் கடந்து செல்ல உதவுமென்பது உண்மை.

மானுடப் பிறவி எடுத்த நாங்களும் பிறவிக்கடலைக் கடக்க கலியுகவரதனாகிய செல்வச்சந்நிதியான் ஆலயம் அனுதினம் சென்று இறைபணி செய்து உய்ய வழி காண்போம். இந்த ஆலயத்தில் இறைபணி (சரியைத் தொண்டு) செய்யும் அடியவர்களை

நாம் தினமும் காண்கின்றோம். வயது முதிர்ந்த அடியவர்கள் அதிகாலையில் வீதியை அழகுபட அலகிடும் தொண்டினை, தேகம் வெயர்த்து ஒழுகச் செய்து வருகின்றனர். இவர்களை கடற்கரையான், ஆட்கொண்டு பிறவிக்கடலைக் கடக்க வழி சமைப்பானென்பது திண்ணம். எமது பாதத்தைச் செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் பட வைத்தால் பாவங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று இறையருள் கூறுகின்றது. தீமை செய்த மாயையின் மகனுக்கும் வரம்பிலா அருள் கொடுத்த முருகன் எம்மையும் கைவிடுவானா? எனவே நாம் அனுதினம் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று, அலகிடுதல், கோவில் கழுவுதல், சுவாமி காவுதல் போன்ற தொண்டுகளைச் செய்து, பிறவிக் கடலைக் கடந்து சந்நிதியான் திருவடி சேர்வோம்.

## புலவர்மணி வை.க. சிற்றம்பலம் அவர்களின்
## நூறாவதாண்டு வாழ்த்துப்பா
## பேறெல்லாம் பெற்றுயர்ந்து பொலிந்து வாழ்க

திணை– பாடாண் துறை– வாழ்த்தியல்

### நேரிசை வெண்பா அந்தாதி

சீரமைந்து நூறுகாணும் செம்மைசேர் வாழ்வினைப்
பேறுடையார் தாமே பெறுவராம் – ஊருலகில்
சிற்றம் பலம்மையா செய்தவத்தால் நாளெலாம்
உற்றார் நெடிதாய் உயர்ந்து.

உயர்ந்த நெடுவாழ்வு நூறினும் மேல், தாம்
பெயர்பல நாட்டும் பெரியார் – அயராமல்
கண்ணியம் பேணிக் கருதுபுகழ் காக்குமத்
திண்ணியர் என்பார்க்கும் தேர்ந்து.

தேர்ந்தநுண் நூலறிவு சேர்ந்த புலமையும்
ஆர்ந்தபண் பாக்கம் அமைதி – சேர்ந்த
நெறியான மாண்பாம் நினைவாற்றல் செய்கைத்
திறப்பாடும் வாழ்வாக்கும் தேர்ந்து.

தேர்ந்தும் அறம்பேணி செய்யும் செயல்நினைந்
தோர்ந்தும் அறிவால் உலகோம்பி – நேர்ந்தசீர்ப்
பாரிடைப் பேறெலாம் பெற்றுயர்ந்து பண்புகளாற்
பேருயர வாழ்க பொலிந்து

பொலிந்த புலவர் மணியேநின் பாக்கள்
நலிவெல்லாம் நீக்கி நயமாய்க் – கலியுலகின்
பொய்ம்மை விலக்கிப் பொலிவூட்டி நன்னெறிக்கண்
உய்ந்திடச் செய்யும் உயர்ந்து.

-ம.தி. கடம்பேசுவரன் -

வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| சி. சிவரூபன் | கச்சாய் | 5000. 00 |
| பொன்னுத்துரை குகநாதன் | கொக்குவில் | 15000. 00 |
| பாலசுந்தரம் கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை | 35000. 00 |
| வி. கிரிதரன் அரசடிவீதி | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு பஞ்சலிங்கம் | ஆனைக்கோட்டை | 6000. 00 |
| அனுஷியா மகாதேவன் | லண்டன் | 21000. 00 |
| சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன் | லண்டன் | 5000. 00 |
| கி. பத்மராசா | கரவெட்டி | 10000. 00 |
| சிவச்செல்வம் தயாநிதி | வயாவிளான் | 1000. 00 |
| Dr கஸ்தூரி விஸ்வநாதன் | கனடா | 10000. 00 |
| நாதன் பிரதேர்ஸ் | இணுவில் | 1மூடை அரிசி 10k பருப்பு |
| திருமதி Dr சிவலோகநாதன் | லண்டன் | 3000. 00 |
| திருமதி தர்மினி கோபிகிருஷ்ணா | சுழிபுரம் மேற்கு | 25000. 00 |
| சந்திரவதனி சிவயோகன் | கந்தர்மடம் | 2000. 00 |
| தேவகி இராதாகிருஷ்ணன் | பருத்தித்துறை | 3000. 00 |
| ஜீவகுமார் சுமித்தா | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு குகதாசன் | கொழும்பு | 5000. 00 |
| செ. சேவித் }<br>க. செல்லத்துரை } | ஆவரங்கால் | 12000. 00 |
| க. குமாரகுலசிங்கம் | கோண்டாவில் | 1மூடை அரிசி |
| சின்னையா பொன்னு | இமையாணன் கிழக்கு | 2000. 00 |
| நளினி அருந்தவராசா | கனடா | 2000. 00 |
| S.T. தியாகராஜா (S.T.R) | கொழும்பு | 2000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 1000. 00 |
| S. இராஜகோபால் | கனடா | 5000. 00 |
| திரு புவனேந்திரன் | ஊரெழு | 1000. 00 |
| திரு கடவுள் | இணுவில் | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | பத்தமேனி | 3000. 00 |
| விஜயராஜ் சுமதி (டினோஜன்) | சாவகச்சேரி | 8000. 00 |
| சோமஸ்கந்தா (மூத்ததம்பி மடம்) | நல்லூர் | 2மூடை அரிசி, பருப்பு, கடலை |
| K. காயத்திரி | பேறதெனியா | 2000. 00 |

PUBLIC LIBRARY JAFFNA


அன்புக்காகவே அன்பு செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| இராம ஜெயபாலன் | சங்கானை | 1000. 00 |
| அமரர்கள் நடராசா, யோகரெத்தினம் நினைவாக | | |
| ந. சிறீதரன் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| இ. தவமணி | கரணவாய் | 2000. 00 |
| A.V. முருகையா | தெகிவளை | 300 அவுஸ்திரேலியா டொலர் |
| திரு இரத்தினசபாபதி | சென்னை | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி, 6புட்டி பருப்பு |
| ஜெ. சந்திரப்பிரகாசம் | ஆத்தியடி பருத்தித்துறை (மருத்துவப்பணிக்காக) | 5000. 00 |
| திருமதி S. சிவசம்பு | கொழும்பு-6 | 4500. 00 |
| சிவ முத்தையா | வட்டுக்கோட்டை | 500. 00 |
| சுகந்தா மெடிக்கல் | ஆனைப்பந்தி (மருத்துவப் பணிக்காக) | ஒரு தொகை மருந்து |
| கி. பத்மநாயகம் | கரவெட்டி | 10000. 00 |
| வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ் | யாழ்ப்பாணம் | அப்பளம், 1புட்டி உழுத்தம்பருப்பு, 1புட்டி பருப்பு, 1புட்டி சவ்வரிசி |
| திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி நினைவு | தெல்லிப்பளை | 1மூடை அரிசி, 10k பருப்பு, தேங்காய் |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| நிருத்தி, நிலான், சகானா, மோதிலால் நேரு | அமெரிக்கா (வல்வை) | 11000. 00 |
| க. ஆனந்தராசா சண்முகம் ஸ்ரோர்ஸ் | வவுனியா | 5000. 00 |
| K. ஆனந்தகுமார் | திக்கம் | 5000. 00 |
| ம. துவாரகா | குப்பிளான் | 5000. 00 |
| சண்முகசுந்தரம் கோபிராஜ் | | 1000. 00 |
| இ. யோகாஸ்காந்தன் | கனடா | 5000. 00 |
| இந்திரா முத்துலிங்கம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| கந்தசாமி சிவநாதன் காந்தியூர் | புலோலி | 5000. 00 |
| ம. புலேந்திரன் | நவிண்டில் | 2மூடை அரிசி, மரக்கறி |
| சாந்தகுமாரி மகேந்திரன் | கந்தர்மடம் | 15000. 00 |
| தர்மாவதி சிவசிவா | கந்தர்மடம் | 5000. 00 |
| ஜனார்த்தன்மூலம் உதயகுமார் | குப்பிளான் | 5000. 00 |
| T. நாகராசா ஆசிரியர்மூலம் செல்லர் வாணி | லண்டன் | 7000. 00 |
| திரு அமுதலிங்கம் (லண்டன்) | குடத்தனை | 8000. 00 |
| கு. தவராணி | குடத்தனை | 4000. 00 |
| வி. நிஷங்கரன் | கண்டி | 5000. 00 |
| ஈஸ்வரி கணேசமூர்த்தி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சுந்தரம் மகேஸ்வரி | உரும்பராய் (கொழும்பு) | 5000. 00 |

(தொடரும்...

அன்பற்ற வாழ்வு சாவுக்கு ஒப்பாகும்.

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை வேளையில்...



சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமானால் ஒருமுறை அடிமையாய் இருந்துபார்.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதிகள் பெறுவோர் சிலர்...




ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப்போவது மரியாதைக்குரியது.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



அறியாமையுடன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட அறிவுடன் ஒருநாள் வாழ்வதுமேல்.



**தீபாவளி தினத்தை முன்னிட்டு, செல்வச்சந்நிதியில் தங்கியிருக்கும் ஆதரவற்றோருக்கு உடுதுணிகள், போர்வை முதலானவை வழங்கப்பட்டபோது...**



நீ மற்றவர்களுக்காக வழிவிட்டுக்கொடு. இறைவன் உனக்கு நிச்சயம் வழி விடுவான்.

# சிவம்... தவம்... சுகம்...

PUBLIC LIBRARY JAFFNA

திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள்

தமிழரென்று சொல்லி நாமும் தலைநிமிர்ந்து நிற்கவே
உமை மைந்தனே உலக நாயகனே
எமை யெல்லாம் உள்ளிருந்து ஊக்குவித்துச்
சுமை யில்லாச் சுகமருள்வாய் சுப்பிரமணியனே.

"தமிழ்" இன்பத்தமிழ் இனியது. "சைவம்", சிவம் தூயது. தூய்மையும் இனிமையும் நிறைந்தது தமிழரின் இயல்பு வாழ்க்கை. இந்த இன்பத் தமிழ் மொழியில் உள்ள உயிர் எழுத்து பன்னிரண்டும் மெய் யெழுத்து பதினெட்டும் ஆகும். உயிரெழுத் துக்கள் பன்னிரண்டும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கிணங்க முரு கனின் பன்னிரு கண்களாகப் போற்றப்படு கின்றன. இவை பன்னிரு திருமுறைகளாக விளங்கி உயிர்களை ஓம்புகின்றன. உள் ளுணர்வில் கலந்து ஆனந்தச் சுவையை நல்குபவை. இந்த ஆனந்தத்தைச் சொல் லால் விளக்க முடியாது. அவரவரும் படித் துப் பொருள் உணர்ந்து சுவைத்து அனு பவிக்க வேண்டியவை. திருவாசகத் தேனைச் சுவைத்தவர்கள் பிறவிப் பிணியால் வருந்த மாட்டார்கள். உயிர் இருப்பதை எல்லோரும் அறிவோம். ஆனால் இந்த உயிரை யாரும் கண்டதில்லை. ஆனால் உணர்வுபூர்வமாக உணர்கின்றோம். இத்திருமுறைகளைப் பொருளுணர்ந்து இசையோடு ஓதும்போது அது உயிரிற் கலந்து ஆனந்தத்தைத் தரு கின்றது.

பதினெட்டுப் புராணங்களும் இறை வனது திருவிளையாடல்மூலம் வாழ்க்கை நெறிகளைப் புகட்டுபவை. இவ்வுலகில் மனிதப்பிறவி எடுத்த நாம் எவ்வாறு வாழ வேண்டும்; தாய், தந்தை, பிள்ளைகள் உறவு, சகோதர உறவு, மாமன், மாமி மற்றும் சுற்றத் தார் உறவு, நண்பர்கள் உறவு இவற்றை எவ்வாறு பேணவேண்டும் என்பதையும் குடும் பத்தில் ஒவ்வொரு அங்கத்தினர்க்கும் என் னென்ன கடமைகள், உரிமைகள் என்பவற் றையும் விளக்கிக் கூறுபவை. இல்லறத்தை நல்லறமாக்கி சம்சாரச் சூழலில் சிக்காது எவ்வாறு கரையேறலாம் என்பதுபோன்ற நம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை கலைகளையும் உள்ளடக்கியது. இப்புரா ணங்களை வாசித்து இவற்றில் கூறப்படும் கருத்துக்களை அவை எந்த நோக்கத்திற் காகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்தால் வாழ்க்கை சுமையாக இல்லாமல் சுகமாக அமையும். இதனால் எமது வாழ்க்கைப் பயணம் சந்தோஷமாக அமையும்.

இப்புராணங்களை பக்தியோடு படிப் பது அவசியம். முற்றிய அன்பான பக்திச் சுவை அறியாது இதை வெறுமே வாசிப்பதில் பயனில்லை. வெறுமே புற அறிவுபூர்வமாக ஆராய்ச்சி செய்தால் அதன் விளைவு அவ நம்பிக்கையாகும். எனவே வாழ்வைப் பக்திச் சுவையோடு கலந்து வாழ்வதில் ஆனந்தம் கண்டவர்கள் தமிழர்கள். கணவனைச் சிவ னாகப் பார்ப்பது மனைவியின் பண்பு. இதன் பொருள் சுயநலமற்ற அன்பு, உயிருக் குயிராக நேசித்தல் என்பதாகும். கண்ணைப் போல் நேசிப்பதால் கண் அவன் கணவன்

என்றதாயிற்று. மனைவியின் ஆர்வமான தூண்டுதலும், ஒத்துழைப்பும் கணவனுக்குச் சக்தியையும் தெம்பையும் அளிப்பதால் வாழ்க்கை சுமுகமாக நடைபெறுகின்றது. இதையே சிவமும் சக்தியும் என்றும் சிவ சக்தியென்றும் கூறுவர். குழந்தைகளைக் கண்ணாக, முருகனாக பாலச் சந்திரமூர்த்தி யாக பாலாம்பிகையாகக் கொண்டாடி மகிழ் வது வாத்ஸல்ய பக்தியாகும். நடக்கும் சம் பவங்கள் எல்லாம் இறைவனது லீலையாகக் காணும்போது அங்கே ஒற்றுமை நிலவும்; உறவுகள் பேணப்படும். இதனால் வாழ்வு சுகமாகும்.

இந்த உடலை மெய் என்கின்றோம். உள்ளே உயிர்மூச்சு இருக்கும்வரை இது "மெய்" ஆகும். உயிர் உடலை விட்டுப் பிரிந்தால் இது பொய்யாகும். ஏனெனில் அங்கே உணர்வுகள் ஏதும் இல்லை. இறை வனின் கண்ணால் இவ்வுலகைப் பார்க்கும் போது உலகம் அமைதிப் பூங்காவாகத் தோன்றும். வெறும் மனிதக் கண்ணோட்டத் தோடு பார்க்கும்போது உலகம் மாயை வாழ்வு கடினமானது என்ற எண்ணம் தோன் றும். இப்புராணங்களில் இறைவன் இப்பூமி யில் அவதாரமெடுத்து எப்படி வாழ்ந்து காட்டி னார் என்பதைப் புராணங்கள் வாயிலாக அறிந்து அந்த நெறியில் வாழமுயற்சித்து நம் வாழ்வை வெற்றிப் பாதையில் பயணிப் போமாக.

உயிரோடு இந்துமதம் அங்கே அன்பு இல்லையேல் அது போலி வாழ்வாகும். உயிருக்குச் சக்தி தருவது தூய அன்பாகும். அதாவது இறையன்பாகும் பக்திச் சுவை யோடு கூடிய திருமுறைப் பாடல்கள் உயி ருக்குச் சக்தி தருபவை. உடலுக்கும் மனதிற் கும் சக்தி தருவது இனிய அன்பான இன் சொல், பிற உயிர்களை வதைக்காத உணவு, விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, பகிர்ந்துண்ணல் என்பனவாகும். இதுவே தமிழரின் நாகரீகம். தமிழரின் பண்பு ஆகும்.

காலச் சுழற்சியில் வாழ்க்கை முறை யில் மாற்றங்கள் ஏற்பட்டதால் நம் மூத்தோர் வாக்கில் அவநம்பிக்கை தோன்றியது அத னால் எமது உண்மை இயல்பாகிய ஆனந் தத்தை இழந்தோம். "நாம் யார்" என்பதை மறந்தோம். வாழ்வின் சுவையை இழந்து வக்கிர புத்திகொண்டு பேத புத்தியோடு செயற்பட்டு அமைதியைத் தொலைத்து விட்டோம்.

"நான் யார்" என்பதைக் கண்டறிந்து எமது உண்மை இயல்பு ஆனந்தம் என்பதை உணர்ந்து இழந்த அமைதியை மீண்டும் பெற்றுச் சுகவாழ்வு வாழச் சைவத்தையும் தமிழையும் பயின்று அதன் சுவையை அனு பவித்து வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. நமது நிலைக்கு நாமே காரணம் என்பதை உணர்ந்து நம்மை நல்வழியில் பயணம் செய்ய ஊக்குவிப்பாராக எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவன் எம் முள்ளே இந்த உண்மை ஒளியைத் தோற்று விப்பாராக. நாம் எல்லோரும் ஒரே இறை வனின் பிள்ளைகள் என்ற உணர்வோடு சகோதர தத்துவத்தைப் பேணி ஒற்றுமை யாய், அமைதியாய், இயல்பாய் வாழ எமக்குச் சகல சக்திகளையும் அருள்வாராக.

அன்பே சிவம்
அதுவே தவம்
இந்த உணர்வே சுகம்
யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



**ஏறும் விடை:**

திருவீழிமிழலைச் சிவபெருமானைத் தொழுது நின்ற கவிஞர் பெருமானின் இடபமாக இருக்கும் திருமாலைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

காலாட் படியளக்குங் கண்ணிடந்து பூசிக்கும்
சேலாங் கமடமாஞ் சிங்கமாம் - பாலாகும்
ஆழியப்பி லேதுயிலு மைவர்க்குத் தூதாகும்
விழியப்ப ரேறும் விடை

திருவீழியப்பரான பெருமான் ஏறிச் செலுத்தும் விடையான திருமால், தன் திருவடிகளால் நில உலகத்தையே அளப்பர்; கண்ணைத் தோண்டி இட்டும் பூசிப்பர்; பாற்கடலான நீரிலேயும் நித்திரை செய்வர்; ஐவர்க்கு தூதாக நடக்கவும் செய்வர். மேலும் அவரே மச்சாவதாரனாகவும் கூர்மாவதாரனாகவும், நரசிங்காவதாரனாகவும் விளங்குபவருமாவார்.

படி- பூமி, இடந்து- தோண்டி, ஆழி+ அப்பு= ஆழியப்பு- கடல்நீர். கண்ணிடந்து பூசித்தல்- திருமால் சிவனைக் கண்மலர் தூவி வழிபட்டது.

**மண்ணை உண்டார்:**

கண்ணபுரப் பெருமானைத் தரிசிக்கச் சென்றிருந்தார் காளமேகப் புலவர். அப்பொழுது மாயனார் மண்ணை உண்ட செய்தியைக் குறித்து இப்படிப் பாடுகின்றார்.

கண்ணபுரங் கோயிற் கதவடைத்துத் தாழ்போட்டார்
மண்ணையுண்டார் வெண்ணையுண்ட மாயனார் எண்ணும்
சிரக்கப் பரையேந்திச் செங்காட்டி லீசர்
இரக்கப் புறப்பட்டா ரென்று.

"திருச்செங்கோட்டிலே கோயில் கொண்டிருக்கும் ஈசனாகிய சிவபெருமான், மதிக்கத்தக்க தலையோடாகிய பிட்சாபாத்திரத்தை ஏந்தியவராகப் பிச்சை ஏற்று உண்பதற்குப் புறப்பட்டு விட்டார்" என்று அறிந்த கண்ணபுரத்துக் கோயிலார்கள், திருமாலும் சிவனைத் தொடர்ந்து போய்விடக் கூடாதே என்று பயந்து, திருக்கோயிற் கதவை அடைத்துத் தாழும் இட்டு விட்டார்கள். அதனாலே, வெண்ணையுண்ட மாயனார், அது கிடையாமல் மண்ணைத் தின்பவராயினார்!

தாம் தரிசிக்கச் சென்றபோது திருக்கோயிற் கதவினை அடைத்துத் தாழிடக் கண்டவர், இப்படிப்பாடி அவர்கள் செயலைப் பழித்தனர் என்பர். மண்- பூமி; அது பெருமான் தம் திருவுதரத்தே உலகினை அடக்கிக் காப்பதனைக் குறித்தாம். சிவன் உணவேதும் கிடையாமல், பிச்சையெடுக்கப் போய்விட்டான் எனப் பிச்சாடன மூர்த்தியையும், வெண்ணையுண்ட மாயன் மண்ணையுண்டான் எனத் திருமாலின் சிறப்பையும் பாடிய நயத்தினை அறிந்து இன்புறுக.

வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு, தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு.

**கொன்ற பழி போமோ?:**

திருச்செங்கோடு ஒரு சிவத்தலம். அங்கு சென்று சிவபெருமானைத் தொழுகிறார் காளமேகம். "நாட்டிலிருந்து ஓடி வந்து, இப்படி நீ காட்டிலே தங்கியிருந்தாலும், நீ முன்னர் செய்த கொலை பாவங்கள் உம்மை விட்டுப் போய்விடுமோ? என்று கேட்கிறார். காலனை உதைத்தது; காமனை எரித்தது; சிறுத்தொண்டனிட்ட அமுதினை உண்டது ஆகிய திருவிளையாடல்களை எடுத்துக் காட்டித் துதிக்கிறார்.

காலனையும் காமனையும் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையும் கொன்ற பழிபோமோ - சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீதிருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்

சீலமுடன் நாட்டிலே வீற்றிருந்த நாதரே- ஒழுக்கமுடையவர்போல நாட்டினிடத்தே பல தலங்களிலும் கோயில் கொண்டிருந்த தலைவரே! நீ திருச்செங்காட்டிலே வீற்றிருந்தக்கால்- நீ திருச்செங்காட்டிலே வந்து தங்கியிருந்தவிடத்தும், காலனையும்- எமனையும், காமனையும்- மன்மதனையும் காட்டு சிறுத்தொண்டர் தரு பாலனையும்- பக்திக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த சிறுத்தொண்டர் பெற்றெடுத்த சீராளன் என்ற சிறுவனையும், கொன்ற பழி போமோ- கொலை செய்ததனால் ஏற்பட்ட பழிச்சொற்கள் மறைந்து போய்விடுமோ?

**பிறவாத ஆம்பல்:**

"திருவலஞ்சுழி" என்னும் திருவூரிலேயுள்ள விநாயகப் பெருமானைக் குறித்துக் கவிராயர் சொல்லிய சுவையான செய்யுள் இது.

பறவாத தும்பி கருகாத வெங்கரி பண்புரண்டே
இறுகாத தந்தி உருகாத மாதங்க மிந்துநுதல்
நிறவாத சிந்துரம் பூசாக் களபம் நெடுசுனையில்
பிறவாத வாம்பல் வலஞ்சுழிக் கேவரப் பெற்றவனே!

தும்பி, கரி, தந்தி, மாதங்கம், சிந்துரம், களபம், ஆம்பல் என்பனவெல்லாம் வெவ்வேறு பொருளைக் குறிப்பனவேனும், அவை யானையின் பெயருமாகும். அதனால் அவற்றைக் குறிப்பிடுவது போல யானை முகனைக் குறிப்பிட்டுப் போற்றுகின்றார்.

பறத்தலைச் செய்யாத தும்பி (வண்டு), கருகிப் போதலைச் செய்யாத வெம்மையான கரி (அடுப்புக்கரி), பண்முறை பிறழ்ந்து கட்டமையாத தந்தி (வீணையின் தந்தி), அனலிடத்தே உருகாத மாதங்கம் (பெரிதான தங்கக் கட்டி), பிறையனைய நெற்றியிடத்தே நிறங்காட்டாத சிந்துரம் (பொட்டு) பூசுதற்குப் பயன்படாத களபம் (களபம்- சாந்து), நெடிய சுனைநீரிடத்தே தோன்றாத ஆம்பல் (ஆம்பற்பூ), ஆகிய விநாயகப் பெருமான் திருவலஞ் சுழியினிடத்தே வந்து அருள்பெறப் பெற்றேன் யான்.

**ஆறுமுகன் பெருமை:**

ஒரு முருகன் தலத்திலே, பெருமான் பவனி வருகிறான். அந்த ஆடம்பரத்தைக் கண்டார் காளமேகம். "அப்பன் பிச்சை எடுத்துச் சீவிக்கிறான்; ஆத்தாள் மலை நீலி! மாமன்

உறியில் வெண்ணை திருடி உண்டவன்; அண்ணன் சப்பைக் காலன், பெருவயிறன். குடும்ப நிலைமை இப்படிப்பட்ட அருமையுடன் இருக்கிறது இவனுக்கு" என்று நிந்திப்பதுபோலப் போற்றுகின்றார் கவிஞர். "முருகன் பெருமையைப் பாடுக" என்று கேட்கப் பாடியதாகவும் கொள்க.

அப்ப னிரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி- சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை.

அப்பன் இரந்து உண்ணி- பெற்ற தகப்பனான சிவபெருமானோ பிச்சை ஏற்று உண்ணும் இயல்பினன்; ஆத்தாள் மலை நீலி- பெற்ற தாயோ மலையிடத்துப் பிறந்த கொடுமைக்காரி (நீலவண்ணம் உடையவள்); ஒப்பரிய மாமன் உறிதிருடி- ஒப்பிடுவதற்கு அரியவனான தாய் மாமனோ உறியில் வெண்ணை திருடுபவன்; சப்பைக்கால் அண்ணன் பெருவயிறன்- சப்பைக் காலனான இவன் அண்ணனோ (மகோதரம் என்னும் பெருவயிறாகத் தோன்றும் நோயினை உடையவன்) பெரிய வயிற்றினை உடையவன்; இவை- என்னும் இவைதாம்.

ஆறுமுகத்தானுக்கு இங்கு எண்ணும் பெருமை- ஆறுமுகத்தினனான முருகனுக்கு இவ்விடத்தே நாம் கருதக்கூடிய பெருமைகளாகும்.

**நஞ்சு உண்ணி:**

நஞ்சை உண்டவன் சிவபெருமான். அதனைக் குறித்து "நஞ்சுணி!" எனக் குறிப்பிட்டுப் பாடுமாறு சிலர் கேட்கக் காளமேகம் பாடுகிறார்.

சிரித்துப் புரமெரித்தான் சிந்துரத்தைப் பற்றி
உரித்துதிரம் பாய வுடுத்தான் - வருத்தமுடன்
வாடுமடி யாருடனே வானவரும் தானவரும்
ஓடுபயந் தீர்த்தநஞ் சுணி.

உயிரே அழிந்துபோமோ என்ற வேதனையுடையவராக வாட்டமுறும் அடியார்களுடனே, தேவர்களும் அசுரர்களும் அச்சமுற்று ஓடிக்கொண்டிருந்தபோது, அந்த அச்சத்தைத் தீர்க்க நஞ்சை உண்டவன் சிவபெருமான். மேலும், அவன் தன் சிரிப்பினாலே திரிபுரக் கோட்டைகளை எரித்துச் சாம்பராக்கியவனும், தாருகா வனத்து முனிவர்கள் ஏவிய யானையைப் பற்றி அதன் தோலை உரித்து, உதிரம் கொட்டிக் கொண்டிருக்க இடையிலே உடுத்திக் கொண்டவனும் ஆவான்.

நஞ்சை உண்டது மட்டுமன்று சிரித்துப் புரமெரித்ததும், சிந்துரத்தை உரித்ததும் அவனே என்று போற்றுகின்றார் அவர்.

(தொடரும்...

**விபூதி பூச வெட்கப்படலாமா?**

**ஒருவனுக்கு மனைவியாக இருக்கும் பெண் திருமாங்கல்யம் அணிய வெட்கப்படலாமா? அதுபோல, ஆண்டவன் பிள்ளைகளாகிய நாம் தியானம் செய்யவும், விபு'தி பு'சவும் வெட்கப்படலாமா?**

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

**கலசபூசை:**

பூசைக்கு இன்றியமையாத நீரைச் சேகரித்து வைப்பதற்கு உரியது கலச பூசையாகும். சிறந்த இலட்சணங்களுடன் கூடிய கலசத்தை எடுத்து உரிய மந்திரத்தினால் கழுவி, புண்ணிய தீர்த்தங்களால் நிரப்பி மாங்கொத்து, சந்தனம், மாலை முதலியவற்றால் அலங்கரித்தல் வேண்டும். கங்கை, யமுனை முதலான ஏழு நதிகளின் தீர்த்தங்கள் கிடைக்காத இடத்துப் பரிசுத்தமான நீரினால் மந்திரங்கூறி நிரப்பி அந்நீரில் புண்ணிய தீர்த்தங்களை ஆவாகித்தல் வேண்டும்.

கலசத்தின் முகத்தில் உருத்திரனும் கழுத்தில் விஷ்ணுவும் அடியில் பிரமனும் நடுவில் மாதிருகணங்களும் உதரத்துள் சாகரங்களனைத்தும், ஏழு தீவுகளால் சூழப்பட்ட பூமியும், இருக்கு, யசுர், சாமம், அதர்வம் எனும் நான்கு வேதங்களும் இருப்பதாகக் கிரியை நூல்கள் கூறுகின்றன. கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நருமதை, சிந்து, காவேரி ஆகிய சப்த கங்கைகளும், ஏனைய நதிகளும், கடல்களும் சிவபூசை நிகழும்வேளை பூசை நிகழ்த்துவோனின் வேண்டுகோளுக்கமையத் தவறாது சாந்நித்தியமாகிக் கலசத்தில் சமுகம் அளிப்பன.

**தீபபூசை:**

கலையழகு பொழியும்வண்ணம் தீபங்களைப் பல உருவங்களில் குத்துவிளக்காக வும், மாடவிளக்காகவும், சர விளக்காகவும், தூண்டா விளக்காகவும், சட்ட விளக்குகளாகவும், பதுமை விளக்காகவும், பஞ்சலோகங்களிலும் பித்தளையிலும் வெள்ளியிலும் வார்க்கும் நுண்ணறிவு படைத்த சிற்பிகளால் தீபங்கள் உருவாக்கப்பட்டுத் தேவாலயங்களில் இடம்பெறுகின்றன.

கிரியைகள் நிகழும் வேளை தீபம் இடைவிடாது எரிதல் வேண்டும் என்பது விதி. எனவே, தீபபூசையும் எல்லாக் கிரியைகளிலும் தனி இடம் பெறுகின்றது.

சந்தனம், குங்குமம், பட்டு, மாலை இவற்றால் அலங்கரித்த திருவிளக்கில் தீபலஷ்மியை ஆவாகித்து, உபசாரங்களை நிகழ்த்திப் பூசித்துக் கிரியை முடியும்வரை இடையீடின்றி ஒளிபரப்பி நிற்கும்படி பிரார்த்தித்தல் வேண்டும். தீபதேவி சர்வஸ்ரூபியாக விளங்குபவள்; அனைத்திற்கும் தலைவியாக இருப்பவள்; எவ்வகை ஆற்றலும் படைத்தவள்; செல்வம், ஆயுள், ஆரோக்கியம் என்னும் பெரும் பேறுகளைத் தரவல்லவள். இந்நிலையில் இவளைத் தியானிப்பதற்குரியவாறு அமைந்துள்ளது இவளைப் பூசிக்கும்போது பிரயோகிக்கப்படும் தியான சுலோகம்.

**சகளீகரணம்:**

அங்கநியாசம், கரநியாசம் என்னும் இரு உறுப்புக்களைக் கொண்டமைவது சகளீகரணம் எனப்படும்.

சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை.

வலது கையை முதலிலும், இடது கையைத் தொடர்ந்தும், மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் ஒவ்வொரு முறை மாறிமாறித் துடைத்து, இரு கரங்களும் அமிர்தத்தினாற் கழுவப்பட்டவைகளாகக் கொண்டு, இரு கட்டை விரல்களினாலும் இரு உட்கைகளையும் கழுவி, கட்டை விரல்களால் அந்தந்தக் கையிலுள்ள தர்ச்சனி, மத்தியமை, அநாமிகை, கநிஷ்டிகை முதலியவற்றை வருடுவதனாலும், இரு கரங்களின் நடுவிரல்கள் மூன்றினையும் உள்மடக்கி ஏனையவற்றை மடக்காதவாறு நீட்டி ஒன்று கூட்டுவதனாலும், சக்தித்துவம் வியாபித்து நிற்பதனால் நடுவில் பிரசாத மந்திரத்தை ஆவாகித்தும், கநிஷ்டிகை முதல் அங்குஷ்டம் வரை நியாசனஞ்செய்து இரு கரங்களையும் ஒன்று சேர்த்து உரிய மந்திரத்தினால் பரமீகரணம் செய்தல் கரநியாசமாகும்.

இருதயத்தில் ஆசனம் இருத்தி இரண்டையும் வலக்கை, அங்குஷ்டம், அநாமிகை இரண்டினாலும் நியாசம் செய்து விரல்களை மடக்கிக் கட்டைவிரலை மட்டும் வெளியே நீட்டித் தலையிலும், ஏனைய விரல் ஒவ்வொன்றிலும் முகம், கண், குய்யம், பாதம் ஆகிய இடங்களையும், நடு மூன்று விரல்களால் நெற்றியுட்பட மூன்று கண்களிலும், இருதயம், சிரசு, சிகை ஆகிய அங்கங்களிலும் நியாசம் செய்தல் வேண்டும். பின்னர் தர்ச்சனி விரல்கள் இரண்டாலும் கழுத்தின் பின்பக்கத்தில் தொடங்கி வலம் இடம் ஆகிய இரு பக்கங்களிலும் அந்தந்தக் கரங்களால் இரு ஸ்தனங்களின் நடுவரை செய்யப்படும் நியாயம் கவச நியாசம். இரு கரங்களையும் ஒன்று சேர்த்து கைகொட்டுவது அஸ்திர நியாசம். தலையைச் சுற்றிப் பத்துத் திக்குகளிலும் சோடிகை என்னும் முத்திரையினால் கைநொடிப்பது திக்கு பந்தனம். வலது தர்ச்சனி விரலால் தலையைச் சுற்றிக் காட்டுவது அவகுண்டனம். இவ்வாறு அங்கநியாசம் அமையும்.

## சாமான்யார்க்கியம்:

அர்க்கிய பாத்திரத்தை நிரீஷணம் முதலிய சமஸ்காரங்களால் சுத்தமாக்கி, கலசத்தில் உள்ள நீரால் நிறைத்து, அர்க்கியத் திரவியங்களை இட்டு சந்தனம், அக்ஷதை, பூ முதலியவற்றால் உரிய மந்திரங்கூறி அர்ச்சித்து, அபிமந்திரித்தல் சாமார்க்கியம் கூட்டும் முறையாகும்.

## பூதசுத்தி:

ஐந்து பூதங்களான தூலதேகத்தை மந்திரம், பாவனை முதலிய சாதனங்களால் தகித்து, சூக்கும தேகத்தைத் தூய அம்சங்களுடன் கூடிய புது உருப்பெற அமைப்பது இக்கிரியையின் நோக்கம். இக்கிரியை நிகழும்வேளை சிவாச்சாரியார் தர்ப்பை, மான்தோல் முதலிய தோல்கள், கம்பளி, வெண்பட்டு முதலியவற்றால் விரிக்கப்பட்ட கூர்மாசனத்தின் மீது நிமிர்ந்த உடம்பினனாகவும், தனக்கு இயைந்த செளம்யாசனத்தினனாகவும் இருந்து கண்களை மூடியவாறு அந்தர்முகமாக இதனை நிகழ்த்துவார்.

சிவாச்சாரியார் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களால் அமைந்த தன் பெளதிக சரீரத்தை ஐந்து பூதங்களை வித்தாக உடையதாகவும், பிரம விஷ்ணுக்களால் நட்டு வளர்க்கப்பட்டதாகவும், தன்னையே தான் முளையாக உடைய தாகவும் புண்ணிய பாவ கர்மங்களையே வேர்களாக உடையதாகவும், ஈதிபாதைகள்

எதுவும் இன்றி நன்கு வளர்ந்து வருவதாகவும், காலம் முதலிய தத்துவங்களை எருவாக உடையதாகவும், சப்தம் முதலிய விஷயங்களை இலைகளாகவும், கர்மேந்திரியம், ஞானேந்திரியம் முதலான சகல இந்திரியங்களை பெருங் கொம்பர்களாகவும் சிறுகிளைகளாகவும், தர்மம் முதலானவற்றைப் பூக்களாகவும் புத்தியினது அத்தியவசாயத் தைப் பழங்களாகவும், விஷயங்களை இரசமாகவும் கொண்டு புருஷனாகிய பறவையினால் அநுபவிக்கத்தக்கதாகவும், மேல் நோக்கிய வேர்களையும் கீழ் நோக்கிய கொம்பர்களை யுடையதாகவும் விளங்கும் ஆலமரமாகச் சிந்தித்தல் வேண்டும்.

பின் பூரகம், ரேசகம், கும்பங்களை நிகழ்த்துதல் வேண்டும். இவை நிகழும் வேளையை இரு பாதிகளாகக் கிரியை நூல்கள் குறிப்பிடுவன. பூரகம் நிகழும் வேளை இவ்விரு பாதிகள் முறையே பூரகத்தின் முன்னரை என்றும் பூரகத்தின் பின்னரை என்றும் குறிப்பெய்துவன. இவ்வாறே ரேசகத்திற்கும் கும்பத்திற்கும் முன்னரை பின்னரை ஆகிய இரு பகுதிகள் உண்டு. இப்பிரிவின் அடிப்படையிலேயே பூதகத்தி அமைந்திருப்பதைக் கீழே காணலாம்.

பூரகம் செய்து, பூரகத்தின் முன்னரையினால் நிவிருத்தி கலாபீஜ மந்திரத்தை ஐந்துமுறை உச்சரித்து, மேலே குறிப்பிட்ட மரம், தன் இலை, பூ, பழம், முதலியவற்றை உதிர்த்து அசைவற நிற்பதாயும், பூரகத்தின் பிற்பாதியினால் பிரதிஷ்டா காலாபீஜத்தை நான்குமுறை உச்சரிப்பதனால் அம்மரத்தை அழகானதாகவும், பத்திர புஷ்பங்களுடன் கூடியதாகவும் சிந்தித்தல் வேண்டும்.

கும்பகம் செய்து, கும்பகம் முற்பாதி பிற்பாதி இரண்டும் நிகழும் வேளைகளில் வித்யாகலாபீஜ மந்திரத்தை மும்முறை உச்சரித்து, வலதுகாற் பெருவிரலிலிருந்து எழும் கலாக்கினியினால் மரம் தகிக்கப்பட்டு, இலை முதலியன அற்றதாகப் பாவித்தல் வேண்டும்.

பின் ரேசகம் செய்து, ரேசகம் முற்பாதி நிகழும்வேளை சாந்திகலாபீஜ மந்திரத்தை இருமுறை உச்சரித்தலால் மரம் எரிந்து சாம்பராகிப் பத்துத் திக்குகளிலும் பரந்தொடுங் கியதாகப் பாவித்து, ரேசகத்தின் பிற்பாதியினால் சாந்திகலையின்பீஜ மந்திரத்தை ஒருமுறை உச்சரித்தலால் அது சுத்தமான பளிங்கு நிறமுடையதாகவும் ஆகாய வடிவினதாகவும் கருதல் வேண்டும்.

பின்னர், உரிய மூலமந்திரத்தை, மூலாதாரம் முதல் துவாதசாந்தம் வரை உச்சரிப்பதனால் உலகிற்கு உபாதா காரணமாக விளங்கும் குடிலையாகிய சக்தியை அசைவுறச் செய்யும்போது, சிகையின் நடுவில் கீழ் நோக்கியவாறு அமைந்து விளங்கும் சஹஸ்ரகமலத்திலிருந்து அமிர்தம் பெருகிப் பிரவாகிக்கும். அவ்வமிர்தப் பெருக்கு நாடிகளனைத்தினூடாகப் பாய்ந்து எங்கணும் ஓடி உள்ளுடலையும் புறவுடலையும் அவை தன்னுள் அமிழ்த்தும்படியாக நனைக்கிறது.

பின்னர், இருதயத்தில் தாமரை மலரைப் பாவனையால் உருவாக்கி, பூரகஞ் செய்வதனால் துவாதசாந்தத்தில் இருக்கும் சிவமயமான ஆன்மாவைக் கொணர்ந்து, அதன் மேல் இருத்தி, மீண்டும் அமிர்தப் பெருக்கை நிகழ்த்தி அவ்வமிர்தத்தினால் அபிஷேகித்தல் வேண்டும்

(தொடரும்...

சிந்தனையைவிட உணர்ச்சி ஆழமானது.

# மானிட வாழ்க்கை

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

மானிட வாழ்க்கை நீண்ட பயணம். இதற்கு வேண்டியது மனநலம், உடல் நலம் இரண்டுமே. மானிட வாழ்க்கை ஒரு தொடர் அநுபவம். அதை அறிந்து வாழ்வது ஒரு கலை. அக்கலை எது என அறிந்து, புரிந்து மனதில் பதியவைத்து வாழ்வதுதான் வாழ்க்கையின் வெற்றி.

வாழ்க்கையின் தத்துவத்தை முன்னோர்கள், ஞானிகள், சித்தர்கள், இதிகாச புராணங்கள் மூலம் நமக்கு காட்டியுள்ளார்கள். வாழும் நமக்கு வழிகாட்டியாக வாழ்ந்த மகான்கள், வாழப்போகும் மக்கட்கு வழிகாட்டியாக வாழவேண்டுமெனச் சொல்லியுள்ளனர்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

கற்பது கற்பிப்பதற்கு; கற்றபின் கற்ற படி நடக்க வேண்டும். விதை விதைத்தவன் உறங்கலாம்; ஆனால் விதைகள் உறங்குவதில்லை. எண்ணங்களை எண்ணியவன் உறங்கலாம். எண்ணங்கள் உறங்குவதில்லை. ஆறு அறிவு படைத்த மனிதனிடம் சிரிக்கும் வல்லமையும், சிந்திக்கும் ஆற்றலும் மறைந்திருக்கு. ஆனால் மனிதன் என்ன செய்கிறான்? சிந்திப்பதைக் கவலையாகக் கொள்வதால் சிரிப்பதை மறந்தே விடுகிறான். சிந்திக்க மறந்த மனிதன் மிருகத்துக்குச் சமனாகின்றான்.

நில்லா உலகம் நிலையில்லா வாழ்க்கை என்று அறிந்தும் மனித வாழ்க்கையில் பல ஏற்றத் தாழ்வுகளைக் காண்கின்றோம். ஏன்? சிந்திக்கவேண்டியது. சிலர் பணம் படைத்தவர்கள்; சிலர் ஏழைகள், சிலருக்கு அதிர்ஷ்டம் வலிய வருகிறது, சிலர் ஆதரவற்றவர்களாக பிச்சை எடுக்கிறார்கள். சிலருக்கு வசதியான பெரிய மாடி வீடுகள், சிலருக்கு ஓலைக்குடிசை மண்வீடு மரநிழல் சத்திரங்கள்; சிலருக்குப் பிள்ளைப் பாக்கியம்; சிலருக்கு குழந்தைகளே பிறப்பதில்லை; சில பிள்ளைகள் பிறந்த சில நாட்களில் இறக்கின்றன; இன்னும் சிலர் இக்குழந்தையை ஏன் பெற்றோம்? என வருந்துகின்றனர். ஏன்? என்ன காரணம்?

முற்பிறப்பில் அவரவர் செய்துகொண்ட கர்ம (பாவ புண்ணியம்) பலன்களேயாம். கர்ம வினையை அநுபவிப்பதுதான் வாழ்க்கை. நமக்கு வரும் இன்ப துன்பங்கள், மகிழ்ச்சி யாவும் நிலையானவை அல்ல; மாயை அழிந்து போவன.

அப்படியானால், நாம் எப்படி உலகில் வாழ வேண்டும்? பிறப்பு, இறப்பு இரண்டும் துன்பம் தருவன. அவற்றிலிருந்து விடுபடுவது இன்பம். இன்பத்தை அடைய விரும்புகிறாயா? நல்லன செய், அல்லவை தவிர்; உன்னிடம் உள்ளதை நினைத்து திருப்தியடை, இல்லாததை எண்ணிக் கவலைப்படாதே. ஒருநாள் செல்வம் உன்னைத்தேடி வரும். இறுமாப்புக் கொள்ளாதே; வறுமையும் வரும் துவண்டு விடாதே; ஏழைகட்கு இரங்கு; தான தருமங்கள் செய். அது உன் மறுபிறவிக்கு உதவும். மனித வாழ்வு நித்தியம் இல்லை; வாழ்நாள் குறுகியது.

மனிதன் ஆச்சரியமானவன். உயிரோடு இருக்கும்போது நமக்கு ஒருநாள்

நல்ல ஆலோசனையைக் கேட்பது நமது திறமை.

மரணம் வரும் என்று நினையான். ஒவ்வொரு கணமும் சுகம் அநுபவிக்க வேண்டும்; நீண்ட நாள் வாழவேண்டுமென அவாவுகிறான். ஆனால் மரணம் நெருங்கும்போதுதான் ஞானம் பிறக்கிறது. இன்னும் சிலநாள் வாழ மாட்டேனா? வாழ்க்கையின் ஆரம்பகாலம் முழுவதும் என் தேகாரோக்கியத்தைத் தொலைத்துவிட்டு பணம் தேடுவதில் முனைப் பாக இருந்தேன். வாழ்க்கையின் பிற்காலத் தில் ஆரோக்கியம் குறைய, குறையும் ஆரோக்கியத்தைப் பெற ஓடியோடிச் சேர்த்த பணத்தை வைத்தியர்களிடம் கொட்டியும் ஆரோக்கியம் கிடைக்கவில்லையே! என ஏங்குகிறான்.

மனிதன் திருந்தினால் வாழ்க்கை செம்மையுறும், வாழ்க்கை செம்மையுற மதங் கள் வழிகாட்டுகின்றன. மதங்கள் காட்டும் வழிகளை மகான்கள் சொல்லியுள்ளார்கள். மனிதன் மகான்களின் வாக்கு, மதநம்பிக்கை, இறை நம்பிக்கையோடு வாழ்வானாயின் மனித வாழ்க்கை சிறப்புடையதே.

## சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை - 45

### "காவலாயிருந்து காப்பான்"

வேல தாயி ருந்து கொண்டு சால வேவ ணங்க நன்கு
தேசி னோடி லங்கு மென்று -அருள்வோனே!
வேர தாய்வி ளங்கு முன்னில் வார மாய்ம லர்கொ ணர்ந்து
நாளு மேவ ழுங்கு மன்ப -ருளவாழ்வே
ஞால மீது லைந்த லைந்து வீறெ லாம ழிந்து நொந்து
நோயி லேவி ழுந்த ழுந்தித் -தடுமாற
நாடி யேயு யிர்க வர்ந்து போக வேவி ரைந்து வஞ்சும்
பாச மோடு வெந்தன் முன்னம் -வரும்போது
நீல மாம யில்இ வர்ந்து தேவி மாரு டன்இ ணைந்து ஐ
நேரி லேயென் முன்ன ழுந்து -வாராயோ?
நேச ரார்வி ளம்ப வன்று நீதி யேவ ழுங்க வந்து
நீச ரார்சி ரம்அ ரிந்த -முருகோனே!
காலை யேயெ ழுந்து வந்துன் காலை யேநி னைந்து ருண்
காத லோடு நின்று வென்றும் -தொழுவோர்கள்
காவ லாயி ருந்து நல்ல யோக மேவ ழங்கி யின்பங்
காண வேயி ரங்கி டுஞ்சந் -நிதியானே!

- இராசையா குகதாசன் -

கொடுத்துக் கெட்டவர் எவருமில்லை.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள்

ஆனால் இப்பக்கத்தில் உள்ளவர்கள் அதற்கு மேலாகத் தம்முள் பல்வேறுபட்ட தலைப்புகளில் மிகவும் சுவாரசியமாகக் கதைத்துக்கொண்டேயிருந்தனர். நேரம் நகர்கிறது. யாரும் தூங்குவதாக இல்லை. அதேவேளை இத்தனை அமர்க்களத்தினுள்ளும் சிலர் குறட்டைவிட்டுத் தூங்குவதையும் அவதானிக்க முடிந்தது. எந்த விளக்கிற்காகத் துடித்தோமோ அந்த விளக்கு இப்போ பலருக்கு இடைஞ்சலாக இருக்க அதனை அணைத்த பின் அனைவரும் தூங்க 11மணி நெருங்கியது. அதிகாலை 5.00மணி ஓம் ஓம் ஓம் என்ற காண்டாமணி ஓசை அனைவரையும் எழுப்பியது. அனைவரும் எழுந்து வெருகலாற்றுக் கரைக்குச் சென்று தங்கள் தங்கள் பாணியில் ஸ்நானம் செய்தனர். மணிஓசையைத் தொடர்ந்து சூலமங்கலம் சகோதரிகளின் குரலில் முருகனின் கந்தசஷ்டி கவசம் காற்றிலே தவழ்ந்து அவ்வூர் மக்கள் அனைவரையும் மெல்ல எழுப்பியவண்ணம் இருந்தது.




ஆம் இப்பொழுதுதான் காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றில் வெருகலாற்றங் கரையின் அழகிய தோற்றத்தையும் குமரக்கடவுளின் ஆலயத்தின் அழகையும் அனுபவிக்க முடிந்தது. ஒரு புறத்தில் பிரதானவீதியில் அமைந்த பாலத்தின் மேலாக ஓடும் வாகனங்களின் இரைச்சலும் மறுபுறத்தில் ஓடிக்கடலடையும் சித்திரவேலாயுதனின் புட்கரணி தீர்த்தமாம் மகாவலியின் சலசலப்பும், ஓங்கி வளர்ந்த காட்டுமரங்களின் நடுவே ஆங்காங்கே குடிமனைகள் உள்ள இயற்கைச் சூழலில் ஓங்கிய கோபுரமாக மிளிரப்போகும் ராஜகோபுர அடித்தளத்தோடு எம் சந்நிதியான் அன்றிருந்த எளிமையான தோற்றத்தில் அமைந்த ஓட்டுக் கொட்டகை

களுடன் மிக எளிமையான தோற்றத்தில் ஆலயம் அமைந்திருந்தது.

அந்தச் சமயத்தில் சுவாமிகளை அணுகிய திரு குகராஜா காலைப்பூசைக்கு முன் வழமையாக நாங்கள் பஜனை செய்வது வழக்கம். இன்று நீங்கள் தலயாத்திரை நிமித்தம் இங்கே வருகை புரிந்திருப்பதால் நாம் அனைவரும் முருகன் சந்நிதியில் பஜனை செய்வோம். எல்லோரையும் வரச்சொல்லுங்கள் என்று அன்பான வேண்டுகோளை விடுத்தார். சுவாமி அவர்களும் என்னைநோக்கி மாஸ்ரர் எல்லோரும் குளித்துவிட்டு வாருங்கள் இன்று உங்கள் தலைமையில் பஜனை செய்வோம் என்று கூறியதோடு அனைத்து அடியவர்களையும் அங்கே இடம்பெறும் பஜனையில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அதன் பிரகாரம் அனைவரும் சென்று ஆற்றில் நீராடி ஆலய முன் மண்டபத்தில் நிகழவிருந்த பஜனை நிகழ்வில் பங்குபற்றினோம்.

ஆலயத்திற்குள் சென்று 6.30 தொடக்கம் 7.15 வரை ஓர் அருமையான பஜனை நடைபெற்றது. பக்கவாத்தியமாக டோல்கியை எங்களை வரவேற்ற கல்வி அலுவலரே வாசித்தார்கள். அவருடன் கூட ஓர் அடியவரும் சேர்ந்து பாடல்களைப் பாடினர். அவர்கள் தங்கள் முருகனின் நாமத்துடன் கூட மண்டூர் முருகன், முருகன் ஆலய நாமங்களையுஞ் சேர்த்து மிக இனிமையாகப் பாடியது எம்போன்றவர்களுக்கு மிக பக்திப் பிரவாகத்தை ஏற்படுத்தியது.



தொடர்ந்து எம்பெருமானுக்கு பூசை ஆரம்பமாகியது. இங்குள்ள பூசையின் சிறப்பு என்னவென்றால் முதலில் கதிர்காமத்தில் நடைபெறுவது போன்று மூடிய அறையுள் பறை ஒலியுடன் இதற்கெனத்தனியாக அமைந்த ஆலயத்தில் ஆரம்பமாகி பின் மூலமூர்த்தியாகிய சித்திரவேலாயுதனாருக்கு அதே சிவாச்சாரியார் எமது ஏனைய ஆலயங்களில் நடை பெறுவது போன்று முறைப்படியான பூசைமுறையில் தூபதீப ஆராதனைகள் நடைபெறுகின்றது.

மானிட வாழ்க்கையில் பழக்கமே பெரிய வழிகாட்டி.

அத்திவ்ய பூசையில் பங்குபற்றி அர்ச்சனைகள் செய்தபின் பழையபடி நாங்கள் தங்கிய மண்டபத்திற்குச் சென்றோம். அங்கு எங்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த தாழித்த கடலை (கரம் சுண்டல்போல்) அனைவருக்கும் வழங்கப்பட்டது. அனைவரும் காலை ஆகாரத்தை முடித்து அவர்களுக்கு நன்றிதெரிவித்துவிட்டு சரியாக 8.30 மணிக்கு கதிர்காமத்தை நோக்கிய எமது யாத்திரை தொடங்கியது. கதிரைவெளி பனிச்சங்கேணியூடாக எமது வாகனம் வாழைச்சேனையை அடைந்தது. அடியேன் 1978-1982 வரை வாழைச்சேனையில் ஆசிரியராகக் கடமையாற்றியவேளை இப்பகுதி எமக்கு பரீட்சியமானது. அப்பப்பா போரின் வடுக்கள் ஆங்காங்கு தென்பட்ட பொழுதிலும் எவ்வளவு பெரிய மாற்றத்துடன் இவ்வூர்கள் வளர்ந்துள்ளன என்பதை உணரமுடிந்தது.



சரியாக காலை 9.30 மணியளவில் சித்தாண்டி முருகப்பெருமானின் சந்நிதியை அடைந்தோம். அங்கும் நான் பாரிய மாற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது. மட்டக்களப்பு-பொலநறுவை பாதையிலிருந்து சற்று உள்ளே அமைந்திருந்த முருகன் ஆலயம். இப்போ அவனது ஆலய முகப்பிற்கு ஓர் பெரிய வளைவு தாங்கி இப்பெருந்தெருவையே தனது வாயில் எனக் கருதும் வண்ணம் மிளிர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. அப்பொழுது அடுத்த கிழமை தொடங்க இருக்கும் மகோற்சவத்திற்காக ஆலய வளாகத்தை தயார் செய்யும் வண்ணம் சிறு சிறு திருத்தவேலைகளைச் செய்தவண்ணமும், பாரிய கோபுரத்திற்கு வர்ணந்தீட்டும் பணியிலும் பணியாளர்கள் பணிசெய்து கொண்டிருந்தனர். அழகிய சிற்பங்கள் தாங்கிய கோபுரம் இவ்வாலயத்தின் சிறப்பு எனலாம். இதனைப் போலவே வெருகலம் பதியானுக்கும் அமைப்பதற்கு வேண்டிய பணியைத் தொடங்கியுள்ள தாக அங்கு கூறினர். கைதேர்ந்த கலைஞர்களால் பேசும் பதுமைகளாக சிற்பங்கள் தாங்கிய கோபுரம் கந்தன் கருணைக்கு அடியார்கள் அள்ளி வழங்கிய சான்றாகத் திகழ்ந்தது. நாம் சென்றவேளை பூசைகள் எல்லாம் முடிந்தமையினால் அனைவரும் வழிபாடு செய்து 10.00 மணிக்கு யாத்திரையைத் தொடர்ந்தோம். (தொடரும்...




## வினை விதைத்தவன் வினை அறுப்பான்

"மதுரை" என்று வழங்கப்படும் திருவாலவாய் என்ற ஊரினைப் பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். பாண்டியனின் முதுகு சற்று வளைந்து இருந்ததால் அவனைக் கூன்பாண்டியன் என்று அழைத்தனர். பாண்டிய மன்னனுக்கு மங்கையர்க்கரசியார் என்ற பக்திநெறிமிக்க துணைவியார் அமைந்து இருந்தாள். அவள் சைவ சமயத்தின்மீது அளவற்ற நம்பிக்கையோடு விளங்கினாள். மன்னனோ சமணர்களைப் போற்றி அவர்களை ஆதரித்தும் அரவணைத்தும் வந்தான்.

பாண்டியனுக்கும் மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையார் என்ற ஓர் அமைச்சர் பெருமான் இருந்தார். அவர் அரசியின் உள்ளக் கருத்துப்படியே சைவத்திற்குச் சேவை புரிந்து சமணத்தை வீழ்த்த வேண்டுமென்று எண்ணி கடமை ஆற்றினார்.

இறைவனின் அருளால் சைவத்தை வளர்க்க பாடுபட்டுவரும் பார்வதியின் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர், தனது சைவப்பணி மேன்மை பெற மதுரைக்கும் செல்ல உளம் கொண்டார்.

அதனை மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அறிந்து மனமகிழ்ச்சி கொண்டனர். அவரை வணங்கி வரவேற்பளிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.


திருஞானசம்பந்தர் மதுரைக்கு வரத்துவங்கியதும் பாண்டிய மன்னனுக்கும் சமணர்களுக்கும் உடல் நடுக்கம் தோன்றியது. தீய அறிகுறிகள் தோன்றின. திருஞானசம்பந்தர் இம்மண்ணுக்கு வருவதால்தான் நமக்கு இத்துயர நிலைகள் வருகின்றன. எனவே அவர் வருகையைத் தடைசெய்ய வேண்டும் என்று சமணர்கள் பாண்டியனிடம் கூறினர்.

பாண்டியன் "அதற்கு என்ன செய்யவேண்டும்" என்றான். உடனே மந்திரங்கள் ஓதி அவரைத் தீயில் சிக்க வைக்க வேண்டும். அவரைக் கண்டாலோ அவரைப் பற்றிக் கேட்டாலோ நமக்குத் தீங்கு விளையும் என்ற தவறான யோசனையைக் கூறினர்.

வலிமைதான் வாழ்வு, பலவீனமே மரணம்.

பாண்டிய மன்னனும் ஆராய்ந்தறியாமல் "அவ்வாறு நீங்கள் எண்ணிய வண்ணமே செய்யுங்கள்" என்று அனுமதி வழங்கினான்.

சமணர்களின் மந்திர தந்திரம் பலன் அளிக்காமல் போனது. ஞானசம்பந்தர் கடவுளின் அருளால் எந்தத் துன்பமும் சமணர்களால் அடையாமல் மதுரை வந்து தங்கினார். அதை அறிந்த சமணர்கள் தங்களுடைய மந்திர வித்தை ஞானசம்பந்தரிடம் செயற்படாமல் போகவே, அவர் தங்கியிருந்த குடிலுக்குத் தீ வைத்தனர்.



சம்பந்தருடன் வந்த அடியவர்கள் யாருக்கும் எந்தத் தீங்கும் விளையாத வண்ணம் குடிலின் தீயை அணைத்தனர். பொறுமைசாலிகள் கோபம் கொண்டால் ஒரு நொடிப்பொழுது கூட காத்திருக்க மாட்டார்கள். அதை வெளிப்படுத்தி விடுவார்கள் என்பதைப் போலவே தனக்குத் துன்பம் விளைவிக்க நினைத்தவர்கள் சமணர்கள் என்பதை அறிந்தார்.

அதனைத் தெரிந்துகொண்டு "இந்தத் தீயானது தீங்கு விளைவிக்க நினைத்தவர்களுக்கே சென்று மெதுவாக தனது தன்மையைக் காட்டட்டும்" என்று கூறி கடவுளை வணங்கிப் பாடினார்.

பாண்டிய மன்னன் இந்தத் தீய செயலுக்கு அனுமதி வழங்கியதால் தீயினை ஏவிய குற்றத்திற்காக வெப்பு நோயாகச் சென்று கூன்பாண்டியனைத் தாக்கியது. பாண்டியனுக்கு வெப்புநோய் தாக்கியதால் அவனை நெருங்குபவர்களையும் வெப்பம் தாக்கியது. கூன்பாண்டியன் தனது நோய்தீர மருந்தின்றி அவதியுற்றான். தனது நோயைத் தீர்த்து வைப்பவர்கள் சொல்லும் சொல்லுக்குத் தான் அடி பணிவதாகக் கூறினான்.

மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் பாண்டிய மன்னனுக்கு வந்த நோயின் தன்மையை உணர்ந்தனர். தாங்கள் திருஞானசம்பந்தருக்கு செய்த தீவினையால் தான் இவ்வாறான கொடுமையான நோய் தங்களை தாக்கியிருக்கிறது. எனவே, இந்நோயை ஞானசம்பந்தப் பெருமானாலேயே தீர்த்துவைக்க இயலும் என்று நற்கருத்துக்களை எடுத்து மன்னனுக்கு தெரிவித்தனர்.

மன்னனும் தனது தவறை உணர்ந்து சம்பந்தரை அழைத்து வாருங்கள் என்று வேண்டியருளினான். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சம்பந்தரை வேண்டி வணங்கிக் கேட்டுக்கொள்ள அவரும் அரண்மனை வந்தார்.

சமணர்கள் தங்களை வாதிட்டு வெல்ல வேண்டும் என்று ஞானசம்பந்தரிடம் உரைத்தனர். மன்னனோ "எனது வெப்பு நோயை யார் குணப்படுத்துகிறார்களோ அவர்களே வாதில் வென்றவர்கள்" என்று உரைத்தான்.

சமணர்கள் உடனே இடதுபுறம் கொண்ட வெப்புநோயை தீர்ப்பதாகக் கூறி மயில் இறகால் வீசி மந்திரங்களை ஓதினர். நோய் குறையாமல் மேலும் அதிகத் துன்பம் செய்தது.

திருஞானசம்பந்தர் வலதுபுறம் தோன்றிய வெப்புநோய் தீர சிவபெருமானைத் தியானித்து மந்திரமாகவும், மா மருந்தாகவும் திருநீறைப் பயன்படுத்தி உடல் முழுவதும் பூச வெப்புநோய் வலப்புறம் தீர்ந்து குளிர் தன்மை திரும்பியது.

சமணர்கள் திறன் அற்றவர்கள் என்றறிந்து தன் மனக்கருத்தை மாற்றி, சைவ சமயத்தைப் போற்றி தனது இடப்புறம் உள்ள நோயையும் தீர்த்தருள சம்பந்தப் பெருமானை வேண்டினார். சம்பந்தப் பெருமானும் இடப்புற வெப்புநோயையும் நீக்கினார்.

சமணர்கள் மேலும் வாதம் செய்ய நினைத்து இருவரின் சமயங்களிலும் உயர்ந்த கருத்தை ஏடுகளில் எழுதி அதைத் தீயில் போட்டும், ஓடுகின்ற நீரில் போட்டும் சோதனை செய்வோம் என்றனர்.

தீயில் இட்ட ஓலைச்சுவடி கருகாமல் பசுமையாக இருக்க வேண்டும். ஓடும் நீரில் இட்ட ஓலைச்சுவடி நீரை எதிர்த்துச் செல்லவேண்டும். இவ்வாறு செயற்படாவிட்டால் வாதில் தோற்றவரை கழுமரத்தில் ஏற்றி மரண தண்டனையை ஏற்குமாறு செய்யவேண்டும் என்று நிபந்தனை வைத்தனர். பாண்டிய மன்னன் தயங்க ஞானசம்பந்தரோ சம்மதம் தெரிவித்தார்.

சமணர்கள் தங்கள் சமயத்தின் உயர்ந்த கருத்தை எழுதி தீயில் இட்டனர். அவர்கள் தீயில்போட்ட ஓலை கருகியது. ஞானசம்பந்தர் தனது பாடல்களில் ஒன்றான "போகமார்ந்த" என்று துவங்குவதை ஓலையில் எழுதி தீயில் இட, பச்சை ஓலையாகவே கருகாமல் இருந்தது. அதைக் கண்டு சமணர்கள் தோல்வி முகம் தழுவினார்கள்.

மேலும், தண்ணீரில் போட்டியிடுவோம் என்று கூறி "கடவுள் உண்டு... கடவுள் இல்லை" என்ற பொருட்பட "அத்தி..... நாத்தி" என்று ஏட்டில் எழுதி தண்ணீரில் விட அது தண்ணீரின் போக்கிலேயே வெகுதூரம் சென்றது. "வாழ்க அந்தணர்!" என்று அனைவரையும் வாழ்த்தி சம்பந்தர் தண்ணீரில் இட்ட ஏடு எதிர்த்திசை சென்று சம்பந்தர் பெருமான் கூறியதும் நின்றது.

வாதில் தோற்ற சமணர்களை அமைச்சர் குலச்சிறையார் கழுமரத்தில் ஏற்றி மரண தண்டனை பெறச்செய்தார்.

**அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் தாமாகவே முன்வந்து வழங்கப்பட்ட கணனியை கையளித்த திரு ஆறு. திருமுருகனுக்கும் அவர் சார்ந்த மன்றத்தினருக்கும் சந்நிதியான் ஆச்சிரம பேரவையினர் தமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## 9. சிவலிங்கவியல்

**213. இட்டலிங்கமாவது யாது?**

ஆசாரியர் விசேஷ தீக்ஷையைப் பண்ணி, சீடனைப் பார்த்து, "நீ உள்ளவும் கைவிடாது இவரை நாடோறும் பூசி" என்று அநுமதி செய்து, "அடியேன் இச்சரீரம் உள்ளவரையுஞ் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" என்று பிரதிஞ்ஞை செய்வித்துக்கொண்டு கொடுக்க, அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இது, ஆன்மார்ந்த லிங்கம் எனவும், சலலிங்கம் எனவும் பெயர்பெறும்.

**214. இட்டலிங்கம் எத்தனை வகைப்படும்?**

வாண லிங்கம், படிக லிங்கம், இரத்தின லிங்கம், லோகஜ லிங்கம், சைல லிங்கம், க்ஷணிக லிங்கம் எனப் பலவகைப்படும்.

**215. இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள் யாவர்?**

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச் சாதியாருள்ளும், அங்ககீனரல்லாதவர்கள் இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள்; இவர்களுள்ளும், பிணியில்லாதவராய், இடம் பொருள் ஏவல்கள் உடையவராய்ச், சிவபூசாவிதி, பிராயச்சித்த விதி, மார்கழி மாதத்துக் கிருதாபிஷேகம் முதலாகப் பன்னிரண்டு மாதமும் செய்யப்படும் மாதபூசாவிதி, சாம்பவற்சரிகப் பிராயச்சித்தமாகச் சாத்தப்படும் பவித்திரவிதி முதலியவைகளை நன்றாக அறிந்தவராய், அறிந்தபடியே அநுட்டிக்க வல்லவராய் உள்ளவர் மாத்திரமே, வாண முதலிய சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக் கொண்டு பூசை பண்ணலாம். மற்றவரெல்லாரும் க்ஷணிக லிங்க பூசையே பண்ணக்கடவர். அவர் குளிக்கப் புகுந்து சேறு பூசிக்கொள்வது போலச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக் கொள்ளப்புகுந்து பாவம் தேடிக்கொள்வது புத்தியன்று.

**216. எவ்வகைப்பட்ட சிவலிங்கம் பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்?**

சிவாகம விதிவிலக்குகளை ஆராய்ந்து, சிவலிங்கங்களைப் பரீக்ஷை செய்து, யாதொரு குற்றமும் இல்லாததாய் நல்லிணக்கங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவலிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக் கொள்ளவேண்டும்.

**217. க்ஷணிக லிங்கமாவது யாது?**

பூசித்தவுடன் விடப்படும் லிங்கமாகும்.

**218. க்ஷணிக லிங்கம் எத்தனை வகைப்படும்?**

மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம் புஷ்பமாலை, சருக்கரை, மா எனப் பன்னிரண்டு வகைப்படும்.

---

மாணவர்கள் இளமையில் கற்கும் சிறந்த கல்வி கற்பக மரம் போன்றது.

**219. மேலே சொல்லப்பட்ட பத்துச் சாதியாருள் அங்கயீனரும் மற்றைச் சாதியாருஞ் சிவபூசை பண்ணலாகாதா?**

தங்கள் தங்கள் அதிகாரத்திற்கேற்ப ஆசாரியர் பண்ணிய தீக்ஷையைப் பெற்று தூல லிங்கமாகிய தூபியையேனுந் திருக்கோபுரத்தையேனும் பத்திர புஷ்பங்களால் அருச்சித்துத் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப்பதே அவர்களுக்குச் சிவபூசை; சூரிய விம்பத்தின் நடுவே சதாசிவமூர்த்தி அனவரதமும் எழுந்தருளி இருப்பர் என்று நினைந்து அவருக்கு எதிராகப் புட்பங்களைத் தூவித் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப்பதும் அவர்களுக்குச் சிவபூசை.

**220. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டவர் பூசை பண்ணாது புசிக்கின் என்னை?**

பூசை பண்ணாது புசிப்பது பெருங் கொடும் பாவம். அப்படிப் புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்துக்கும், மலத்துக்கும் சமம்; அப்படிப் புசித்தவனைத் தீண்டலோ காண்டாலோ பாவம். ஆதலால் ஓரோவிடத்துப் பூசை பண்ணாது புசித்தவன், ஆசாரியரை அடைந்து அதற்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

**221. ஞானநிட்டை உடையவர் சிவபூசை முதலிய நியமங்களைச் செய்யாது நீக்கிவிடலாமா?**

நித்திரை செய்வோர் கையிற் பொருள் அவர் அறியாமல் தானே நீங்குதல் போல, ஞானநிட்டையுடையவருக்குச் சிவபூசை முதலிய நியமங்கள் தாமே நீங்கிற் குற்றமில்லை; அப்படியன்றி அவர் தாமே அவைகளை நீக்குவாராயின், நரகத்து வீழ்தல் தப்பாது.

**222. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டவர் சனன மரணாசௌசங்களில் யாது செய்தல் வேண்டும்?**

திடபக்தியுடையவர் ஸ்நானஞ் செய்து, ஈர வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, தாமே சிவபூசை பண்ணலாம்; ஸ்நானஞ் செய்து, முதற் பூசை முடிவு வரையும் தாமரையிலை நீர்போல் அவரை ஆசௌசஞ் சாராது, திடபத்தி இல்லாதவர், ஆசௌசம் நீங்கும் வரையில் தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும் தம்மோடு ஒத்தாரைக் கொண்டாயினும் தம்முடைய பூசையைச் செய்வித்துத், தாம் அந்தரியாகஞ் செய்துகொண்டு, அப்பூசை முடிவிலே புறமண்டபத்தினின்று புட்பாஞ்சலித் திரயஞ் செய்து, நமஸ்காரம் பண்ணல் வேண்டும். (அந்தரியாகம்- உட்பூசை)

**223. வியாதியினாலே தம் கைகால்கள் தம் வசமாகாதிருப்பின் யாது செய்தல் வேண்டும்?**

தம்முடைய ஆசாரியாரைக் கொண்டாயினும் தம்மோடொத்தாரைக் கொண்டாயினும், தம் பூசையைச் செய்வித்துத் தாம் அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்.

**224. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்ட பெண்கள் பூப்பு வந்தபோது யாது செய்தல் வேண்டும்?**

மூன்று நாளும் பிறர் தண்ணீர் தர ஸ்நானஞ்செய்து கொண்டு, அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்; நான்காம் நாள் ஸ்நானஞ் செய்து, பஞ்சகவ்வியமேனும், பாலேனும் உட்கொண்டு; மீட்டும் ஸ்நானஞ் செய்து, சிவபூசை செய்தல் வேண்டும். அம்மூன்று நாளும் அந்தரியாகஞ் செய்யாதொழியின், அக்குற்றம் போம்படி அகோரத்தை ஆயிரம் உருச் செபித்தல் வேண்டும்.

(தொடரும்...

# திருமுறைக் கதை

திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

**நரியின் கதை:**

ஒரு காட்டில் ஒரு வேடன். அவன் பெயர் வனசரன் என்பது. வேட்டையாடி அதில் கிடைத்ததை உண்பதுதான் அவனது வாழ்வு. ஒருமுறை மூன்று நாளாக ஒரே பட்டினி. காய்கனி கிழங்குதானும் அகப்படவில்லை. அவரவர் செய்த வினையின் பிரகாரம்தான் அவரவருக்கு உணவு கிடைக்கும். "தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்" என்பது ஒளவையின் வாக்கு.

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதார்"

என்பது வள்ளுவர் வாக்கு.

உலகத்திலே வறியவர் அதிகமாய் இருத்தலுக்கும் செல்வர் மிகக் குறைவுடையராய் இருத்தலுக்கும் காரணம் தவம். தவம் செய்தவர்கள் சிறு தொகையினர். தவம் செய்யாதவர்கள் அனேகர் என்பது பொருள். சிவபெருமானைப் போற்றாதவருக்கு இவ்வுலகில் ஒரு அடையாளம் உண்டாம். அதாவது உடுக்கத் துணியுமற்று ஒரு சோற்றுப் பருக்கை தானும் கிடையாது அலைவார்களாம். இரந்தாலும் ஒரு சோற்றுப் பருக்கைதானும் கிடை யாதாம். பிச்சையிலே கிடைப்பதற்கும் முற்பிறப்பில் கொடுத்து வைத்திருக்க வேண்டுமாம்.

வனசரனுக்கு நாலாவது நாள் அதிஷ்டம் காத்திருந்தது. ஒரு கண் குருடான யானை தண்ணீர் குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். நாணைக் காதளவுக்கும் இழுத்து அம்பைக் குறி வைத்தான். பார்வையுள்ள கண்ணை அந்த அம்பு குருடாக்கியது. யானை உரத்த சத்தம் இட்டு நிலத்திலே விழுந்து இறந்தது.

வேடனுடைய வில்லிலிருந்து அம்பு புறப்படும்போது வேடனுடைய காலில் ஏதோ சுரீர் என்றது. வேடன் காலை உதறினான். படமெடுத்த நாகம் ஒன்று பக்கத்தே சென்று விழுந்தது. வேடன் வில்லால் நாகத்தின் தலையில் ஓரடி ஓங்கி அடித்தான். பாம்பும் அக்கணமே இறந்தது. வேடனும் விடம் தலைக்கேறி இறந்தான். வேடனின் அம்படி பட்டு யானையும் இறந்தது.

மூன்று உயிர்கள் ஒரே நேரத்தில் இறந்ததைப் பற்றை மறைவில் பதுங்கியிருந்த நரி ஒன்று கண்டது. சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தது.

நரி ஒன்று கணக்குப்போட்டது. யானை ஆறுமாதத்திற்குப் போதியது. வேடன் மூன்று நாளைக்கு உணவாவான். பாம்பு இன்றைய உணவுக்குப் போதுமானது. நரியனார் வாலைக் குழைத்துக் குழைத்து பலமுறை மூன்றையும் சுற்றிச் சுற்றி வந்தார். எதை முதலில் சாப்பிடுவது என்பதுதான் நரியின் இப்போதைய பிரச்சினை.

நரி அவசரப்பட்டு உண்ணவுமில்லை. ஊளையிட்டு மற்றைய நரிகளை அழைக்கவும் விரும்பவில்லை. அவ்வளவையும் தானே முழுதாகத் தின்று தீர்க்கவேண்டும் என்பதுதான் நரியின் பேராசை. ஒரு துண்டு இறைச்சிதானும் வேறு எவரும் சாப்பிடக் கூடாது என்ற

செயல்புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.

லோபத்தன்மை நரிக்கு. மனிதனும் இந்த நரியைப்போல பேராசை உள்ளவன்தான். இதனால்தான் "எச்சில் கையால் காகம் துரத்தாதவன்" என்ற பெயரும் மனிதனுக்கு உண்டு.

நரியனார் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். வில்லில் பூட்டியிருந்த நாண் நரியனாரின் பார்வையில் விழுந்தது. இந்த வாரைக் கடித்து பல்லைத் தீட்டிக் கொண்டால் மற்றைய இறைச்சிகளைச் சாப்பிடுவதற்கு இதமாக இருக்கும் என்று நரி நினைத்தது. வாரை நறுக்கென்று கடித்தது. வில்லு நிமிர்ந்து நரியின் தலையில் அடித்தது. நரியின் தலை கிறுகிறுத்து அந்த இடத்திலேயே இறந்தது.

இரை தேடப்போயிருந்த இந்த நரியின் சோடி நரி தற்செயலாக அவ்விடம் வந்தது. நால்வரையும் கண்டு கவலை கொண்டது. கவலை எவ்வளவு நேரத்திற்கு? பிறந்தோர் இறப்பது உலக நியதி என்று மனதைத் தேற்றிக் கொண்டது.

மனித இறைச்சியைச் சுவை பார்த்து எத்தனை நாளாகிவிட்டது என்ற பேரவாவோடு வேடனைக் கடித்து உண்ணத் தொடங்கியது. பாம்பின் விடமேறிய வேடனின் உடம்பு பெண் நரிக்கும் எமனாகியது. ஒரே நேரத்தில் ஐந்து உயிர்கள் உயிர் பிரிந்தமை பெரிய நூதனமல்ல.

இக்கதையைப் புலவர் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"கரியயொரு திங்க ளாறும் கானவன் மூன்று நாளும்
இரிதலைப் பற்றி னாகம் இன்றுண்ணும் இரையா மென்று
விரிதலை வேடன் பக்க விற்குதை நரம்பைக் கவ்வி
நரியனார் பட்ட பாடு நாளை நாம் படுவோ மன்றே"

மனிதனும் இந்த நரியைப்போல் பேராசைக்காளாகி தினமும் இறந்து கொண்டிருக் கிறார். பேராசை பெருந் தரித்திரம் என்று சொல்வார்கள். இங்கே பேராசை பெரு மரணத்தை யல்லவா விளைவித்து விட்டது.

நாவுக்கரசரும் இக்கதையைக் கேள்விப்பட்டிருக்கிறார். தான் பாடிய ஆதி புராதனக் குறுந்தொகையில் "நரிவிருத்த மதாகுவர் நாடரே" என்றொரு வரி குறிப்பிடுகின்றார். அக்கினி வளர்த்துப் பெருந் தொகைப் பணம் செலவு செய்து யாகங்கள் செய்வர். ஆனால் இறைவன் அந்த அக்கினியின் உருவினன் என்பதை உணர்ந்தாரில்லை. பிரம்ம விஷ்ணுக்கள் இருவரும் பிரம்மமாய் நின்ற சோதியைத் தேடித்தேடி அலுத்து முடிவில் உண்மையைத் தெளிந்தனர். நரிக்கு இறுதியைக் கொண்டு வந்தது அதன் பேராசை. பிரம விட்டுணுக்களுக்கு அறியாமையால் இறைவனை அறிய முடியவில்லை. நரிக்கும் பேராசையினால் அறியாமை வந்தது. இதனை அப்பர்,

"எரிபெருக்கு வரவ்வெரி யீசன்
உருவருக்க மதாவது ணர்கிலார்
அரியயற் கரியானை யயாத்துப் பொய்
நரிவிருத்த மதாகுவர் நாடரே"

என்று அருளியுள்ளார்.

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

# ஞானச்சுடர் 2013 வாசகர்போட்டி

## வினாக்கள்

01. மாதோட்டத்தின் மறுபெயர் யாது?
02. மறைஞான சம்பந்தரை வெறுத்த அந்தணர்கள் யாவர்?
03. சான்றோர் வாழும் இடத்தில் நாமும் வாழ்ந்தால் இளமையோடு வாழலாம் என்ற கருத்தைக் கூறிய புலவர் யார்?
04. ஐக்கிய நாடுகள் சபை தொல்பொருட் பிரிவின் பாதுகாப்பில் பராமரிக்கப்படும் மூன்று ஆலயங்கள் கூறுக?
05. மனித இனத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக வருவது எது?
06. தீய எண்ணங்கள் நம் மனதில் தோன்றும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?
07. "நீர் இங்கு உள்ளீரோ" என உரிமையுடன் கேட்டவர் யார்?
08. இறைவனை நேரில் கண்ட நால்வர் யார்?
09. எந்த வடிவம் இந்திரியங்களாற் கிரகிக்க முடியாதது?
10. 1603ஆம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடந்த ஆலயம் எது?
11. "பாடிப் பொருள் சொன்னது சரியல்ல" என்று வாதிட்ட புலவர் யார்?
12. நம் உயிருக்குப் பகை எது?
13. அன்னக்காவடி என்ற சொல் யார் மனதைப் புண்படுத்தியது?
14. உண்மைச் சைவர்கள் உள்ளத்தில் நிலை கொண்டிருப்பது எது?
15. தவத்திரு யோகர் சுவாமிகள் ஜேர்மன் சுவாமிகளுக்கு அருள்வாக்கு கொடுத்த தலம் யாது?
16. திருஞான சம்பந்தரின் திருமணச் சடங்கை முன் நின்று நடத்திய அடியவர் யார்?
17. கடலால் மூடப்படும் பஞ்சலிங்கம் அகமதாபாத்தில் அமைந்த இடம் யாது?
18. மாபெரும் குற்றவாளி என்று யாரைக் கூறலாம்?
19. நல்ல எண்ணங்கள் தோன்றவேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்?
20. இந்துமதக் கடவுட்கொள்கையை புகழ்ந்து பாடியவர் யார்?
21. ஆன்ம தத்துவம் எத்தனை?
22. பரகாயப் பிரவேசம் என்று கூறுவதின் பொருள் யாது?
23. திருநந்தி தேவருக்கு ஆசாரியர் யாவர்?
24. மனதுக்கு அமைதி கிடைத்தால் எது கூடவரும்?
25. உத்தர காமிகம் எதனைக் கூறுகிறது?




- போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.
- 2013ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.
- விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது.
- விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 15.01.2014 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.
- போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## வருடாந்த திருவாசக விழா - 2013

**விண்ணப்ப முடிவுத் திகதி :30.11.2013 சனிக்கிழமை**

**திருவாசகப் போட்டி :08.12.2013 ஞாயிற்றுக்கிழமை**

**பரிசளிப்பு :13.12.2013 வெள்ளிக்கிழமை**

| | | |
|---|---|---|
| தரம் 5-6 | சிவபுராணம் | மோகனராகம் |
| தரம் 7-8 | திருவெம்பாவை | மோகனராகம் |
| தரம் 9-10 | திருப்பள்ளியெழுச்சி | பூபாளராகம் |

ஆசைகள் குறையக் குறைய தெய்வ சிந்தனைகள் கூடிக்கொண்டே போகும்.


தமிழகத் திருக்கோயில் வரிசை:

# தாராசுரம்

# ஐராவதீஸ்வரர் திருக்கோவில்

–வல்வையூர் அப்பாண்ணா–

கும்பகோணத்திற்குத் தெற்கே குறுக்குப் பாதையினூடாக ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ளது தாராசுரம் திருக்கோவில். சுவாமிமலை, திருவலஞ்சுழி கோவில்களிலிருந்தும் பேருந்துகள் அடிக்கடி தாராசுரம் செல்கின்றன. இறைவன் ஐராவதீஸ்வரர், இறைவி பெரியநாயகி அம்பாள். இருவரும் அருகருகே அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் இடம்தான் தாராசுரம். ஐக்கிய நாடுகள் சபை - தொல்பொருட் பிரிவினரால் தமிழ்நாட்டில் பராபரிக்கப்படும் திருக்கோவில்கள் மூன்று. (1) தஞ்சைப் பெருவுடையார் கோவில் (2) கங்கை கொண்ட சோளேச்சரம் (3) தாராசுரம். திராவிடக் கலைவடிவ நுணுக்கங்களுடன் கூடிய அழகிய கற்சிற்பங்களுக்காகவே இக் கோவில்கள் மூன்றும் ஐ.நா தொல்பொருட் துறையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அழகிய தனிச் சிற்பங்கள் மட்டுமல்லாது, விஸ்தாரமான மண்டபங்கள், தரை, தூண்கள், மேலே தூண்களை இணைக்கின்ற விதானங்கள், சந்நிதிகள், சந்நிதிகளின் மேலேயுள்ள பண்டிகைகள், கருவறைகள் ஆகிய அனைத்திலும் காணப்படும்



ஒவ்வொரு கருங்கல்லும் புடைச்சிற்பங்களாகக் (சிற்பத்தின் பாதிப்பகுதி மட்டுமே கல்லின் வெளியே புடைத்திருக்கும்) காணப்படுவது தாராசுரம் கோவிலின் சிறப்பம்சமாகும். அனைத்து இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள 1´X1´, 1´X2´ வடிவ கருங்கற்கள் கூடக் கதை பேசுகின்றன. இதில் சித்தரிக்கப்படும் கதைகள் பலவும் புரிகிறது. சில புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு கதை அல்லது வரலாறு நான்கைந்து கற்களில் தொடர்ந்தும் செல்கின்றன.

நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.


ஐ.நா தொல்பொருட் துறையினரால் பராபரிக்கப்பட்டுவரும் மேற்குறித்த மூன்று கோவில்களிலும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதை இந்தப் பந்தியில் நோக்குகிறோம். தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவன் ராஜராஜசோழன். அவன் மகன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது கங்கை கொண்ட சோளேச்சரம். ராஜராஜசோழனின் பேரன் 2ஆம் ராஜராஜன் 12ஆம் நூற்றாண்டில் கட்டியது தாராசுரம். பொது அமைப்பில் மூன்றும் அச்சிட்ட பிரதிபோலவே காணப்படுகிறது. மூன்றிலும் பக்கவாட்டுப் படிக்கட்டுகள் உள்ளன. (தஞ்சையில் அகன்ற நேர்வரிசைப் படிக்கட்டும் உண்டு) மூன்று இடங்களிலும் மண்டபங்களில் காணப்படும் சிற்பங்கள் ஏறக்குறைய ஒரேமாதிரியானவை. மாடங்களில் வைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்கள் ஒரே விதமானவை. வழமையாகக் கோயில் முகப்புகளில் காணப்படும் கோபுரங்களுக்குப் பதிலாக, அடி பருத்து உயரம் குறைந்த முகப்பு வாசல் மூன்று கோவில்களிலும் காணப்படுகிறது. கங்கை கொண்ட சோளேச்சரத்தில் முற்றுப்பெறாத அடிக்கோபுரம் ஒன்றும் காணப்படுகின்றது. கருவறைப் பண்டிகைகளே வானளாவிய கருவறைக் கோபுரங்களாக நிமிர்ந்து நிற்பதை மூன்று இடங்களிலும் காண்கிறோம். தஞ்சைப் பெரிய கோவிலின் கருவறைக் கோபுரத்தின் உயரம் 216அடி. கங்கை கொண்ட சோளேச்சரத்தின் கருவறைக் கோபுர உயரம் 160அடி. தாராசுரம் ஐராவதீஸ்வரர் கருவறைக் கோபுரம் 80அடி உயரம் கொண்டது. திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மரில் சேந்தனார் தவிர ஏனைய அனைவரும் தஞ்சைப் பெரிய கோவில்மீது "திருவிசைப்பா" பாடியுள்ளனர். கருவூர்த்தேவர் மட்டுமே கங்கை கொண்ட சோளேச்சரம் மீது திருவிசைப்பா பாடியுள்ளார். ஆனால், தாராசுரம் இந்த இரு கோவில்களுக்கும் பிந்திய வரலாறு (12ஆம் நூற்) கொண்டமையினால் எந்தப் பதிகமும் பாடப்பெறவில்லை. உலக பாரம்பரிய நினைவுச் சின்னம் என்பதைக் காட்டும் ஐ.நாவின் சின்னம் பொறித்த பெரிய விளம்பரப் பலகை மூன்று கோவில்களிலும் காணப்படுகிறது.

அகன்ற திறந்த ஒரு உள்வீதி. உள்வீதியைச் சுற்றிவர உயர்ந்த சுவர், சுவரின் மேல் விளிம்பில் தொடர்ச்சியாகக் காணப்படும் சிறிய ரிஷபங்களின் அணிவகுப்பு, சுவருக்கு வெளியே அழகான புற்றரைப்பகுதி, புற்றரையின் இடையிடையே வட்டம், சதுரம், ஐங்கோணம், நட்சத்திர வடிவங்கள் கொண்ட அமைப்பில் கண்ணைக் கவரும் பூச்செடிகள், பரந்த புற்றரையைச் சுற்றிவரும் தார்போட்ட ஒரு புறவீதி, இத்தனைக்கும் வெளியே கோவிலின் சரி கிழக்குப் புறமாக 200 மீற்றர் தொலைவில் முற்றுப்பெறாமல் உடைந்து சிதைந்த நிலையில் உள்ள ஒரு கோபுரப் பகுதி. இதுவே கோவிலின் முழுமையான அமைப்பு.

கிழக்குப் பார்த்தபடியுள்ள கோயில் முகப்பு வாசலினூடாக நாம் உள்ளே நுழைந்தால் நேரே ஒரு கொடிமரம். நேர் படிக்கட்டு வரிசை இல்லை. 6' வரை உயர்ந்துள்ள மண்டபத்தின் ஓரமாக நகருகிறோம். மண்டபத்தின் மேல் விளிம்பில் உள்ள கொடுங்கைகளின் (தாழ்வாரம்) அழகு, கொடுங்கைக்குப் பெயர்பெற்ற "திருப்பெருந்துறை" திருக்கோவிலை நினைவு படுத்துகிறது. பெரிய கனமுடைய கருங்கல்லை, மெல்லியதாக இழைத்து, பல மடிப்புக்களாக அமைத்துள்ள கலைத்திறனைப் பார்த்து நாம் இன்புறலாம். அதனை ரசித்தபடியே தெற்குப் பக்கமாக உள்ள பக்கவாட்டுப் படிகளில் கால் வைத்து மேலே

**கண்பார்வை அற்றவன் குருடனல்ல,தன் குற்றங்களை உணராதவனே குருடன்.**

ஏறுகிறோம். சில்லுப்பூட்டிய குதிரைகள் மண்டபத்தினை இழுக்கும் அமைப்பினையும், படிக்கட்டுக்கள் அருகே யானை உருவினை ஒத்தபடியுமான அழகான கற்சிற்பங்களையும் ஆக்கியுள்ளனர். கல் அடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கல்லிலும் காணப்படும் புடைச் சிற்பங்களை ரசித்தபடியே பரந்த மண்டபப் பகுதிக்கு வருகிறோம். மிக நெருக்கமாக அமைந்துள்ள ஒவ்வொரு தூணிலும் வித்தியாசமான பல புடைச்சிற்பங்களைப் பார்க்கிறோம்.




தரைப்பகுதியில் பதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கல்லிலும் காணப்படும் கல்வெட்டு எழுத்துக் கள் தேய்வடைந்து இப்போது தெரிந்தும் தெரியாமலும் உள்ளன.

பல வருடங்களுக்கு முன்பு யான் முதற்தடவை தாராசுரம் போயிருந்தவேளை கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, நூற்றுக்கணக்கான வேலையாட்கள் பலவிதமான இரசாயனப் பொருட்களையும் பாவித்து, பலமணிநேரம் செலவிட்டு ஒவ்வொரு கற்சிற்பங்களையும் சுத்தப்படுத்தி மெருகேற்றுவதைக் கண்டேன். ஐ.நா தொல்பொருட் துறையைச் சேர்ந்த பல முதற்தர அதிகாரிகளும், அவர்களுக்குக் கீழே உள்ள 2ஆம் தர அதிகாரிகளும் இந்த ஊழியர்களை வழிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஐந்தாறு வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற “சுத்தமாக்கற் பணிகள்” நிறைவுபெற, சில வருடங்களுக்கு முன்னரே கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு 2ஆவது தடவையாக நான் தாராசுரம் சென்றபோது புதுப்பிக்கப்பட்ட கோவிலும் சிற்பங்களும் மனதைக் கொள்ளை கொண்டன. சிற்பங்கள் - புடைச்சிற்பங்களுக்கு மேலாக வர்ணப்பூச்சு எதுவும் பூசப்படாமல்- இயற்கை அழகு குன்றாமல் - கருங்கல்லின் இயல்பான நிறத்திலேயே

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்யமுடியாது.

பாதுகாத்துப் பராபரிப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டியதே.

உள் மண்டபத்தில் உள்ள தூண் வரிசைகளிற் சில யாழித் தூண்களாகக் காணப்பட்டன. கருவறையின் வாசலருகே இரு புறமும் இரண்டு உயர்ந்த கல்விளக்குகள் உள்ளன. மண்டபத்தின் வடக்குத் தெற்குப் பக்கச் சுவர்களில் உள்ள பெரிய கல்யன்னல்கள் வழியாக வரும் குளிர்ந்த காற்று மண்டபத்தின் உள்ளே வெப்பத்தைக் குறைத்து குளிர் நிலையைக் கொடுக்கிறது. வாசலில் இரு புறமும் உள்ள துவாரபாலகர்களையும், கணபதி முருகனையும் கைதொழுது, உள்ளே லிங்க வடிவில் வீற்றிருக்கும் ஐராவதீஸ்வரரை மனமுருகி வணங்குகிறோம். ஐராவதீஸ்வரரின் சிரசின்மீது, மேலே ஒரு செப்புக் குடத்திலிருந்து சொட்டுச் சொட்டாகத் தண்ணீர் வீழ்ந்தபடி உள்ளது. கருவறையின் வாசலில் ஒரு காலை வைத்து தலையை மட்டும் உள்ளே நீட்டி நிமிர்ந்து பார்த்தால் கருவறைக் கோபுரத்தின் உட்புற அமைப்பும், பிரமாண்டமும் நமக்குப் புரிகிறது. அருகிலேயே, தெற்குப் பார்த்தபடி அருள்பாலிக்கும் ஸ்ரீபெரிய நாயகி அம்பிகையின் சந்நிதி உள்ளது. இரண்டு மண்டபங்களுக்கும் பொதுவாகவே மேற்குறித்த யாழித்தூண்கள் அமைந்துள்ளன. அம்பாள் கருவறை வாசலில் இருபுறமும் உள்ள உருவத்திற் பெரிய துவாரபாலகிகளிடம் அனுமதி பெற்று பெரிய நாயகி அம்பாளை வணங்குகிறோம். அம்பாள் நின்ற திருக்கோலத்தில் - நான்கு திருக்கரங்களுடன் - புன்னகை பூத்த முகமும் கொண்டு தன்னை நாடிவரும் அனைவரையும் அரவணைத்து அருள் பாலிக்கிறாள்.



மேலே ஏறிச்சென்ற தென்புற படிக்கட்டுகள் வழியாக மீண்டும் கீழிறங்கி பிரகாரத்தினை வலம்வர தெட்சணாமூர்த்தி சந்நிதிக்கு வந்து விடுகிறோம். வழமையாக கணபதி அமர்ந்திருக்கும் தென்மேற்கு மூலையில் சரபேஸ்வரர் சந்நிதி காணப்படுகிறது. அகன்ற வீதியின் எந்த இடத்தில் நின்று பார்த்தாலும் கருவறைப் பண்டிகையே கோபுரமாக நீண்டு நிமிர்ந்து நிற்கும் அழகினையும், கோபுரம் கொண்டுள்ள மாடங்களையும் - சிற்பங்களையும் பார்த்து ரசிக்கலாம். கருவறையைச் சுற்றிலுமுள்ள புற்றரைப் பகுதியில் 3' தூரம் விலகி $1^1/_2$' விட்டமுள்ள வட்டவடிவமான 36 கல் வட்டங்கள் புற்றரை மட்டத்தில் காணப்படுகின்றன. விபரம் அறிய முற்பட்டபோது இருவர் வித்தியாசமான விபரங்களைத் தந்தார்கள். இந்த வட்டங்கள் கருங்கற் குத்துவிளக்கின் அடிப்பாகம்

சிறு கிளையாக இருக்கும்போதே வளைப்பது நன்று.

என்றார் ஒருவர். இல்லையில்லை... விஷேட காலங்களில் இந்த வட்ட அமைப்பின் மேல் குத்துவிளக்குகள் எரிய வைக்கப்படுவதாக வேறொருவர் கூறினார். இரண்டு விபரங்களும் "குத்துவிளக்கு" சம்பந்தப்பட்டதாக இருப்பது புரிகிறது.


கருவறைக்கு சரி பின்புற மாடத்தில் அண்ணாமலேஸ்வரர். எதிரே மறுபக்கத்தில் கிழக்குப் பார்த்தபடி 11 லிங்கங்கள் - லிங்கபாணம் மட்டுமே கொண்டு - ஆவுடையார் பாகம் இல்லாமற் காணப்படுகின்றன. லிங்கங்கள் எவை? எவை? யாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை எனும் குறிப்பு எதுவும் இங்கில்லை. அருகிலேயே கிழக்குப் பார்த்தபடி இரண்டு சந்நிதிகள் பூட்டிக் கிடக்கின்றன. அருகிலேயே சிறியதும் பெரியதுமாக இரண்டு லிங்கங்கள். இந்த லிங்கங்களின் அருகிலேயே ஒரு பெரிய அம்மியும், அதற்கேற்றாப்போல் குளவி ஒன்றும் காணப்படுகிறது. ஒருவேளை, கோவில் கட்டப்பட்டு கும்பாபிஷேக வேளையில் விக்கிரகங்களை நிலைநிறுத்த மருந்து அரைக்கப் பயன்படுத்தியிருப்பார்களோ? தெரியவில்லை.

பிரகாரத்தின் வட சுற்றுக்கு வந்துவிட்டோம். கருவறையின் அபிஷேகத் தீர்த்தம் வெளியேறும் "கோமுகி" வித்தியாசமான கலையம்சங்கள் கொண்டதாக ரசித்துப் பார்க்கக் கூடியதாகவிருந்தது. கருவறையின் வட மாடத்தில் பிரம்மா, துர்க்கை உள்ளனர். எல்லாக் கோவில்களிலும் சண்டிகேஸ்வரர் அல்லது சண்டிகேஸ்வரி சந்நிதானம் பொதுவாக சிறிய சந்நிதானமாக இருப்பதையே பார்த்திருக்கிறோம். ஆனால், இங்கே 6 படியேறி, திசைமாறி மீண்டும் 10 படியேறி மேலே போனால், ஒரு கோவிலின் கருவறை போன்ற அமைப்புடனான சந்நிதியில் சண்டிகேஸ்வரர் அமர்ந்துள்ளார். இந்தப் படிகளின் இடைத்திருப்பத்தில் ஒரு லிங்கமும் காணப்படுகிறது. பொதுவாகத் தீர்த்தக் கிணறு சண்டிகேஸ்வரர் சந்நிதிக்கு அருகிலேயே காணப்படுவது வழமை. இங்கே தீர்த்தக்கிணறு, சண்டிகேஸ்வரர் சந்நிதியின் வடபுறமாக உள்வீதியின் மறு பக்கத்தில் காணப்படுகிறது. பைரவர் சந்நிதி வழமையான இடத்திலும், அருகே அகஸ்தியர் சந்நிதியும் உண்டு. தாராசுரம் திருக்கோவிலில் நவக்கிரக சந்நிதி இல்லை. ஆனாலும், சனீஸ்வரனுக்கு தனிச் சந்நிதி உண்டு.

மீண்டும் கோவில் நுழைவு வாசல் ஊடாக வெளியே வந்தால், வெளிப்புறமாக 5′ ஆழம்வரை கொண்ட நீள்சதுர வடிவான அகன்ற குழியுள்ள பகுதிக்கு இறங்கிச் செல்லும் படிக்கட்டு வழியாகக் கீழிறங்கி சமதளப்பகுதியில் வந்து நிற்கிறோம். படிகள் தவிர்ந்த ஏனையவை கருங்கற் சுவரினால் மேற்தரைப் பகுதியுடன் இணைந்துள்ளது. இந்த தரைப் பகுதியில் 10′ உயரத்தில் தாமரை வடிவிலமைந்த பெரிய பலிபீடமும், அதனோடு இணைந்தபடி கிழக்காக - உயரம் குறைந்த ஒரு சிறிய மண்டபத்தில் நந்தியொன்றும் கிழக்குப் பார்த்தபடி உள்ளது. இந்த அமைப்புக்கும் நுழைவு வாசலுக்கும் இடையே ஒரு தனி மண்டபத்தில் ஒரு சிறிய பலிபீடமும் பெரிய நந்தியும் காணப்படுகிறது.

தாமரை வடிவிலமைந்த பலிபீடத்திற்குச் செல்லும் 8 படிகளும், கோயிற் குருக்கள் கால் பதித்து மேலேறக் கூடியதான ஒடுங்கிய படிவரிசை கொண்டு காணப்படுகின்றன. படி வரிசையின் இருபுறமும் அழகிய புடைச்சிற்பங்கள் காணப்படுகின்றன. அருகே சிறியதாகக் காணப்பட்ட அறிவிப்புப் பலகை "இசைப்படிகள் இவை" எனத் தெரிவித்தன.

நான் பார்த்திருக்கையிலேயே ஒரு சிலர் சிறிய கல்கொண்டு அந்தப் படிக்கட்டுகளில் தட்டியதை அவதானித்தேன். யானும் அதே வழியில், தேடியெடுத்த ஒரு சிறுகல் கொண்டு



அந்த இசைப்படிகள் ஒவ்வொன்றையும் தட்டிப் பார்த்தேன். ஒவ்வொரு கற்படியும் வெவ்வேறான ஓசையை எழுப்பியதை என்னால் நன்கு உணரமுடிந்தது. ஆனால்.... அந்தப் படிகள் அஸ்டஸ்வரங்களை ஒலித்தனவா என்பதை என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. மீண்டும் சொல்கிறேன், படிகள் வித்தியாசமான இசையைக் கொடுத்தது உண்மையிலும் உண்மை.

தாராசுரம் கோவிலைப் பல வருடங்களுக்கு முன்பு தரிசிக்கச் சென்றபோது கிடைத்த "இசைப்படிகள்" அனுபவம் இது. சில மாதங்களுக்கு முன்னர் (05-02-2013இல்) மீண்டும் நாம் தாராசுரம் சென்றிருந்தபோது, இந்த இசைப்படிக்கு அண்மையில் யாரும் நெருங்கமுடியாதபடி கம்பிவலை போட்டு மூடி பூட்டுப் போட்டுள்ளனர். "இசைப்படிகள்" மீது கல்லினால் தட்டித் தட்டியே அந்த ஒடுங்கிய படிக்கட்டுகள் பள்ளம் விழுந்து - தேய்வடைந்து - சிதைந்து போயிருந்தது உண்மையே. அதனால் இந்த சிதைவினைத் தடுப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த இந்தக் "கம்பிவலை" ஏற்பாடு அவசியம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

மீண்டும் ஒரு திருக்கோவில் பயணத்தில் சந்திப்போம்.

சபையை அறிந்து பேசுதல் பெரிய பேச்சிலும் அரியது.

# மார்கழிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.12.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திரு S. விக்னேஸ்வரன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**13.12.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**20.12.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "முருகநாம பஜனை"

PUBLIC LIBRARY
JAFFNA

வழங்குபவர்கள்:- முருகன் அடியார்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**27.12.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[கிராம சேவையாளர் குப்பிளான்]

**192ஆவது மலர்**

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

[இளை. பிரதிக் கல்விப் பணிப்பாளர்]

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

